வியாழக்கிழமை 27 அக்டோபர் 2022
தமிழருவி வார இதழ் | Tamilaruvi weekly

# தமிழருவி


அருவி: 02 | சாரல்: 40

தமிழின் தலைநிமிர்வு



## ஊடக பேனைகளின் உயிர்வாழும் உரிமை!

ஊடகவியலாளர்களுக்கெதிரான குற்றங்களை தடுத்தல்...




ஊடகவியலாளர்களுக்கு எதிரான தண்டனையில்லாத குற்றங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச தினம்.
நவம்பர் 2
புதன்கிழமை

## சமோசாவால் நாவை கட்டிப்போடும் நகரங்கள்!

## நரகமாகி வருகிறதா நகரங்கள்?

## ரிஷி மூலம் தேடாத சூரியதேசம்!

## சங்கீதக் கதிரையைக் கைப்பற்றினார் ரிஷி சுனக்!

## மாதரை மிரட்டும் மார்பக புற்றுநோய்!

## பாழாகும் யாழின் இளைய தலைமுறை!

# வாழ்வாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் நலிந்த பிரிவினர் தொடர்பில் நவம்பர் 8ம் திகதி விவாதம்

## மனோ கணேசன் - அனுரகுமார திசாநாயக்க கூட்டு பிரேரணை ஏற்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியினால், வாழ்வாதார துன்பங்களை மிக அதிகமாக எதிர்கொள்ளும் மிகவும் நலிந்த (Most Vulnerable) பிரிவினர் தொடர்பில், முழு நாள் விவாதம் ஒன்றை நடத்த தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பியும், தேசிய மக்கள் சக்தி (ஜேவிபி) தலைவர் அனுரகுமார திசாநாயக்க எம்பியும் முன்வைத்த கோரிக்கையை இன்று, பாராளுமன்ற வளாகத்தில் சபாநாயகர் தலைமையில் கூடிய கட்சி தலைவர்கள் குழு ஏற்றுக்கொண்டது.

இதன்படி வரவு செலவு திட்டத்துக்கு முன்னர் கூடும் பாராளுமன்ற வாரத்தின் முதலாம் நாளான நவம்பர் எட்டாம் திகதி செவ்வாய்கிழமையன்று இந்த கருப்பொருளில் முழு நாள் விவாதம் நடத்த கட்சி தலைவர்கள் குழு ஏற்றுக்கொண்டது என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இதுபற்றி மனோ எம்பி மேலும் கூறியதாவது,

பெருந்தோட்ட துறை 51 விகிதம், நகர துறை 43 விகிதம், கிராமிய துறை 34 விகிதம், என்ற ஐநா நிறுவனங்களின் கணக்கெடுப்பின்படி, கடந்த வாரம், இந்நாட்டின் மிக மோசமான நெருக்கடியை சந்தித்துள்ள பெருந்தோட்ட துறை மக்களின் வாழ்வாதார விவகாரங்கள் தொடர்பில், ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றை, நான் கொண்டு வந்து விவாதத்துக்கு உள்ளாக்கி இருந்தேன். நாட்டில் வாழும் அனைத்து நலிந்த பிரிவினர்கள் தொடர்பில் கூட்டாக பிரேரணை கொண்டு வந்து முழுநாளும் விவாதிப்போம் என்ற யோசனையை ஜேவிபி தலைவர் நண்பர் அனுரகுமார திசாநாயக்கவும், நானும் அதன்பின் பேசி முடி செய்தோம்.

இதன்படி இன்று அனுரகுமார திசாநாயக்க அதுபற்றி கருத்திட, அதை நான் ஆதரிக்க கட்சி தலைவர்கள் தற்போது எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளது.

இதன்படி கணக்கெடுப்புகளின்படி மிக அதிகமாக துன்புறும் நலிந்த பிரிவு குடும்பங்கள் தொடர்பாக முழு தேசமும், உலகமும் அறிந்து கொள்ளும் வண்ணம் நமது பிரேரணை அமையும். பெருந்தோட்ட உழைக்கும் குடும்பங்கள், நாளாந்த வருமான நகர பாமர குடும்பங்கள், மீனவ குடும்பங்கள், விவசாய குடும்பங்கள், ஆடை தொழிற்சாலை தொழிலாள குடும்பங்கள், மத்திய கிழக்கு உழைப்பாளர் குடும்பங்கள், பெண்கள் தலைமைத்துவ குடும்பங்கள், உள்ளிட்ட பல்வேறு பிரிவினர் தொடர்பில் நாம் விவாதிக்க உள்ளோம்.

இந்த பிரிவினருக்கு விசேட ஒதுக்கீடு அடிப்படைகளில் நிவாரணங்கள் வழங்க வேண்டும் என்பதும், சமுர்த்தி வாழ்வாதார உதவி பெருகின்றவர்களின் பட்டியல் அரசியல் தலையீடுகளினால், பாகுபாடு மிக்கதாக அமைத்துள்ளது என்றும், ஆகவே அந்த அப்பட்டியல் உண்மையிலேயே நலிந்த பிரிவினரை உள்வாங்கும் முகமாக திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்றும், நான் கோர விரும்புகிறேன்.

எனது இந்த நிலைபாட்டை ஆதரிக்கும்படி நாடு முழுக்க வாழும் மக்கள், தாம் வாக்களித்து தெரிவு செய்த தமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கூற வேண்டும் எனவும் கோருகிறேன் என்றார்

# நீதிமன்றம் நிராகரித்த விடயங்களை மறைமுகமாக கோண்டுவர முயற்சி

## அரசை குற்றஞ்சாட்டுகிறார் டிலான் பெரேரா

பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டு தேசிய பாதுகாப்பு நிமித்தம் புதிய பாதுகாப்பு சட்டம் உருவாக்கப்படும் என சர்வதேசத்துக்கு வாக்குறுதி வழங்கியுள்ள நிலையில் அரசியல் பழிவாங்கலுக்கு தற்போது பயங்கரவாத தடைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது வெறுக்கத்தக்கதாகும் என பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினா் டிலான் பெரேரா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் தொடர்பில் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் சர்வதேசம் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை ஒருபோதும் நிராகரிக்க முடியாது என்றும் குறிப்பிட்ட அவா், அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும் சட்டமூலம் அரசியலமைப்புக்கு உட்பட்டதா அல்லது முரணானதா என்பதை ஆராயும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு உண்டு என்றும் சுட்டிக்காட்டினார்.

இது தொடா்பில் கருத்து வெளியிட்ட அவா், சமர்ப்பிக்கப்படும் சட்டமூலத்தின் ஒருசில ஏற்பாடுகள் அரசியலமைப்பு முரண் என உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியதை இதுவரை அறிந்துள்ளோம், ஆனால் அரசாங்கம் அண்மையில் சமர்ப்பித்த புனர்வாழ்வு பணியக சட்டமூலத்தின் பெரும்பாலான ஏற்பாடுகள் அரசியலமைப்புக்கு முற்றிலும் விரோதமானது என உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

புனர்வாழ்வு பணியக சட்டமூலத்தின் ஊடாக பிறிதொரு பட்டலந்த சித்திரைவதை முகாமை உருவாக்கும் அரசாங்கத்தின் முயற்சியை உயர்நீதிமன்றம் தோற்கடித்துள்ளமை மதிக்கத்தக்கது. உயர்நீதிமன்றத்தினால் அழுத்தமாக சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை மறைமுகமாக வழியில் பிறிதொரு சட்டமூலம் ஊடாக கொண்டு வர அரசாங்கம் முயற்சிக்கிறது. இதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. பாராளுமன்றில் உள்ள சகல எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்து இதற்கு எதிராக போராடுவோம் என்றும் நாடாளுமன்ற உறுப்பினா் டிலான் பெரேரா தெரிவித்தார்.

# இலங்கையில் புற்றுநோய்கான மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு

## சிகிச்சைகள் முற்றாக முடங்கும் ஆபத்து

இலங்கையில் வைத்தியசாலைகளிலும் ஏனைய சுகாதார நிலையங்களிலும் புற்றுநோய் சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரசாங்க மருந்தாளர் சங்கத்தின் தலைவர் அஜித் பீ.திலகரத்ன தெரிவித்துள்ளார். இதனால், புற்றுநோய்கான சிகிச்சைகள் முற்றாக முடக்கப்படும் ஆபத்து உருவாகியிருப்பதாகவும் அவா் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், பற்றாக்குறை காரணமாக புற்றுநோய் சிகிச்சை பிரிவுகளில் அதிகளவான நோயாளிகள் இக்கட்டான நிலையில் உள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதனால், புற்றுநோய் சிகிச்சை பிரிவுகள் மூடப்படும் நிலை உள்ளன. இதுவரை 15 மருந்துகள் அரசு மருத்துவமனைகளில் கிடைக்காததால், நோயாளிகள் அதிக விலை கொடுத்து தனியார் மருந்தகங்களில் அவற்றை வாங்க வேண்டியுள்ளது.

அரச மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம் மருந்துகளின் விலையை அவ்வப்போது உயர்த்துவதால், மருந்துகளின் விலை கிட்டத்தட்ட 300 வீதத்தினால் அதிகரித்துள்ளது. இதன்படி, புற்றுநோயாளிகளுக்கு பயன்படுத்தப்படும் ஒரு குப்பியின் போன்ற மருந்துகளின் விலை 300,000 ரூபா வரை அதிகரித்துள்ளது.

இந்தநிலையில் மருத்துவத் துறையின் மூலம் இந்த பற்றாக்குறை மருந்து வகைகளை நிரப்புவதற்கான சரியான திகதி எதுவும் இதுவரை அறிவிக்கப்படவில்லை என்று அரசாங்க மருந்தாளர் சங்கத்தின் தலைவர் அஜித் பீ.திலகரத்ன மேலும் தெரிவித்தார்.

# பதினாறு வருடங்கள் சிறையிலிருந்த 3 அரசியல் கைதிகள் நிரபராதிகள்

## மேல் நீதிமன்றத்தால் விடுதலை

பதினாறு வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நிரபராதிகளாக இனங்காணப்பட்டு செவ்வாய்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த எட்வேர்ட் சாம் சிவலிங்கம், தங்கவேல் சிவகுமார், சீலன் ஆனந்தராசா ஆகியோரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் மூவரும் 2006 ஆம் ஆண்டு கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு எதிரான வழக்கு கடந்த 2021 ஆம் ஆண்டு டிசெம்பரில் முடிவடைந்திருந்தது. இருந்தபோதிலும் இவா்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை. இந்தநிலையில், மூவரையும் நிரபராதிகள் என்று கூறி மேல் நீதிமன்றம் விடுதலை செய்தது.

# அமெரிக்க துணைத் தூதுவர் யாழ்ப்பாணத்தில் முக்கிய பேச்சு

## மயிலிட்டி துறைமுகத்தையும் நேரில் சென்று பார்வையிட்டார்

இலங்கைக்கான அமெரிக்க துணைத் தூதர் டக் சோனெக் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு அரசியல் தரப்புகளை சந்தித்து கலந்துரையாடினார். அதனையடுத்து மயிலிட்டி துறைமுகத்துக்கும் நேரில் சென்று அங்குள்ள நிலைமைகளை அவா் ஆராய்ந்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளை தனித்தனியாக அமெரிக்க துணை தூதர் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், வட மாகாண சபை அவை தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தரப்புக்கள் தனியாகவும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஸ், வாசுகி சுதாகர் ஆகியோர் தனியாகவும் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது சமகால நிலைமைகள் தொடர்பில் அமெரிக்க துணைத்தூதர் அரசியல் பிரதிகளிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதனைத் தொடா்ந்து மயிலிட்டி துறைமுகப் பகுதிக்குச் சென்ற அவா், மீனவா்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடா்பாக அவா்களிடம் கேட்டறிந்தார்.

# வடக்கில் அதிகரித்திருக்கும் போதைப்பொருள் பாவனையின் பின்னணியில் ஆயுதப்படைகள்!

## சிறிதரன் எம்.பி. பகிரங்கக் குற்றச்சாட்டு



வடக்கில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனையின் பின்னணியில் ஆயுதப்படைகளே உள்ளன எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கையிலுள்ள படைகளில் ஏறத்தாழ 70 சதவீதமானவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே குவிக்கப்பட்டிருக்கின்றனர். போதைவஸ்தை கொண்டு வர அனுமதிப்பவர்களாகவும் அதனை கொண்டு வருபவர்கள் மற்றும் விற்பவர்களை ஊக்குவிப்பவர்களாகவும் அவர்களே காணப்படுகின்றனர் என்றும் சிறிதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற பொது நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே சிறிதரன் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

போதைப் பொருள் வியாபாரிகளை பொலிஸார் கைது செய்வதில்லை. பெருந்தொகையான கஞ்சா இங்கு கடத்தப்படுகின்றது என்றால் அதனை தடுக்கின்ற வல்லமை இலங்கையின் படைகளுக்கு இல்லையா? தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிக்கவும் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுக்கவும் மட்டுமே இவர்களுக்குத் தெரியுமா? என்றும் சிறிதரன் கேள்வி எழுப்பினார்.

தமிழ் இளைஞர்களை தமது இனம் பற்றியோ தேசம் பற்றியோ சிந்திக்க விடாது தடுக்கும் நோக்கில் திட்டமிட்டே போதைப்பொருள் பாவனையை இவர்கள் ஊக்குவிக்கிறார்கள் என்றும் சிறிதரன் தனது உரையில் குறிப்பிட்டார்.

போதைப்பொருள் பாவனையில் இருந்து எமது எதிர்கால சந்ததியினரை மீட்க வேண்டிய பொறுப்பு வெறுமனே அரசியல்வாதிகளிடம் மட்டும் சுமத்த முடியாது என்று சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினா் சிறிதரன், சமூகப் பொறுப்புணர்ந்து அனைத்து தரப்பினரும் இணைந்தே கட்டுப்படுத்த வேண்டும். பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மதத் தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் ஆகியவற்றுடன் ஒவ்வொரு தமிழனும் சிந்தித்து இளம் சமூகத்தினரை அழிவில் இருந்து மீட்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரிப்பு!

2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மூன்று மடங்காக அதிகரித்துள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் இதுவரை 62,000 க்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

டெங்கு நோயினால் இவ்வருடம் 60 பேர் உயிரிழந்துள்ளதாகவும் உயிரிழந்தவர்களில் அதிகமானவர்கள் சிறுவர்கள் மற்றும் 50 வயதுக்குட்பட்டவர்கள் எனத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளரும் வைத்தியருமான சுதத் சமரவீர தெரிவித்தார்.




செய்தி:-

2023 இல் உலகில் மிகக்குறைந்த சம்பள உயர்வை இலங்கையர்கள் பெறவுள்ளனர்.

புளூம்பேர்க் கணக்கெடுப்பு ஆய்வு

சம்பளத்த கூட்டித்தான் இங்க என்னத்த வாங்க கிடக்கு?

# வவுனியாவில் விபத்தினை ஏற்படுத்தி ஒருவரை பலிகோண்ட நபர் தப்பியோட்டம்!

## பொதுமக்களின் உதவியினை நாடியுள்ள பொலிஸார்

வவுனியா குருமன்காடு பகுதியில் கடந்த 1ம் திகதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் விபத்தினை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிள் தப்பிச்சென்றுள்ளது.

படுகாயமடைந்த நபர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் விபத்தினை ஏற்படுத்தி அவ்விடத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் தப்பித்து சென்ற நபர் தொடர்பில் தகவலை வழங்குமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த நபர் தொடர்பில் தகவல் கிடைக்கப்பெற்றால் அருகிலுள்ள பொலிஸ் நிலையம் அல்லது 071 -8591343 , 024-2222226 ஆகிய இலக்கங்களுக்கு தொடர்பினை ஏற்படுத்தி வவுனியா போக்குவரத்து பொலிஸாருக்கு தகவலை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



# போதைப் பொருட்களின் பாவனை யாழ்ப்பாணத்தில் மோசமான நிலை

## கட்டுப்படுத்த மக்களின் ஆதரவை கோரும் அரசாங்க அதிபர்

யாழ்ப்பாண மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை வெகுவாக அதிகரித்துள்ளதால், அனைத்துத் தரப்பினரும் இதற்கு ஒத்துழைப்பு தந்து, இதை கட்டுப்படுத்த வேண்டும் என மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். யாழ் மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை மற்றும்,அதனுடன் தொடர்புடைய குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன என்று தெரிவித்த யாழ். அரசாங்க அதிபா், இதனைக் கட்டுப் படுத்துவதற்கு தாம் பல முயற்சிகளை எடுத்து வருவதாகவும், என்றாலும் வெளிமாவட்டத்திலிருந்து போதைப்பொருள் இங்கே கொண்டு வரப்படுகிறதா, இல்லையென்றால் கடல் மார்க்கமாக இந்தியாவிலிருந்து கொண்டு வரப்படுகிறதா என்பது சரியாகத் தெரியவில்லை என்றும் தெரிவித்தார்.

இதனைக் கட்டுப் படுத்த சகல தரப்பினரும் முன் வர வேண்டும் என்று அழைப்பு விடுத்த அவா், தம்மால் வழங்கப்படும் விழுப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் அடிப்படையில், வாராந்தம் சுமார் 20 பேர் போதைக்கு அடிமையானவர்கள் யாழ்ப்பாணத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் இது மிகவும் மோசமான நிலை என்றும் மாவட்டச் செயலர் மகேசன் சுட்டிக்காட்டினார்.

பெயர் குறிப்பிடப் படாத பல்வேறு போதைப்பொருட்கள் யாழ்ப்பாணத்தில் பயன்பாட்டில் உள்ளது என்றும் குறிப்பிட்ட யாழ். அரசாங்க அதிபா் மகேசன், இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களுடைய ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

# மன்னாரில் கடலில் எண்ணெய் கசிவு தொடர்பான விசேட விழிப்புணர்வு நிகழ்வு

கடலோர மாவட்டங்களில் ஏற்படக் கூடிய எண்ணைக்கசிவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் எண்ணைக்கசிவு சம்பவம் ஒன்று இடம் பெறும் போது மாவட்ட ரீதியாக இயங்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் செயற்பட வேண்டிய நடை முறை தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட கலந்துரையாடல் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் உலக உணவு திட்டத்தின் அனுசரணையில் இன்று வியாழக்கிழமை(27) தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மன்னார் மாவட்டத்தில் காணப்படும் அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் கடற்படையினர்,விமானப்படையினர் சூழல் செயற்பாட்டாளர்கள் அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் உட்பட உயர் அதிகாரிகள் ஊடகவியளாலர்கள் கலந்து கொண்டனர்



குறித்த கலந்துரையாடலில் நாடளாவிய ரீதியில் காணப்படும் எண்ணைக் கசிவு தொடர்பன ஆபத்துக்கள் தொடர்பாகவும் அதே நேரம் எண்ணைக்கசிவு ஆபத்து ஏற்படும் போது சூழல் ரீதியாகவும் அதே நேரம் கடல் சார்ந்து ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டது

அதே நேரம் எண்ணைக்கசிவு சம்பவங்களினால் கடல் வாழ் உயிரினங்கள் கடல்தாவரங்கள் என்பன பாதிக்கப்படுவது தொடர்பாகவும் அவ்வாறான பாதிப்புக்களை எவ்வாறு அரச திணைக்களங்கள் மற்றும் பொது மக்களின் உதவியுடன் தடுப்பது தொடர்பான திட்டமிடலும் மேற்கொள்ளப்பட்டது

குறித்த செயற்திட்டம் இலங்கை முழுவதும் கடல் பகுதி சார்ந்த 14 மாவட்டங்களில் மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தோல்லியல் திணைக்களத்தை கண்டித்து சாவகச்சேரி நகரசபையில் கண்டனப்பிரேரணை நிறைவேற்றம்!

திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலயத்தின் அபிவிருத்திப் பணிக்கு தொல்லியல் திணைக்களம் முட்டுக்கட்டை போடுவதைக் கண்டித்து சாவகச்சேரி நகர சபையில் கண்டனப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன் போது நகரசபை உறுப்பினர் க.கஜிதன் பேசுகையில்:

தொல்லியல் திணைக்களம் திருக்கோணேச்சர ஆலயத்தின் அபிவிருத்தியை தடுத்து நிறுத்தியுள்ளது.

இந்த அத்துமீறிய மற்றும் நில அபகரிப்புச் செயற்பாடு இந்து மக்களை வெகுவாகப் பாதித்துள்ளது.

இதனால் எமது பாரம்பரிய நிலங்கள் பறிபோகும் அபாயம் காணப்படுகிறது. எமது பாரம்பரிய நிலங்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமிழர்களாகிய எம் அனைவருக்கும் உண்டு.

எனவே தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாட்டிற்கு எதிராக நடவடிக்கை எடுத்து,தொல்லியல் திணைக்களத்தின் அடாவடியை கட்டுப்படுத்த வேண்டுமென குறிப்பிட்டு கண்டனப் பிரேரணை சபையில் முன்மொழிந்தார்.

இந்நிலையில் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# மட். கரடியனாறில் கைக்குண்டுகள் மற்றும் கன்னிவெடி மீட்பு

மட்டு. கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள ஈரளக்குளம் காட்டு பகுதியில் கைவிடப்பட்டிருந்த கைக்குண்டு மற்றும் கண்ணிவெடியை நேற்று புதன்கிழமை (26) இராணுவத்தினர் மீட்டு ஒப்படைத்துள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

விமானபடை புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய சம்பவதினமான நேற்று மாலை இராணுவத்தினருடன் விமானப்படை புலனாய்வு பிரிவினர் இணைந்து ஈரளக்குளம் காட்டுப்பகுதியில் கைவிடப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்றும் கண்ணிவெடி ஒன்றையும் மீட்டு கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை, இந்த பகுதி கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் ஓலை

மின்னஞ்சல்: aruvitamil812@gmail.com
வாட்ஸ் ஆப் இலக்கம்: 0094 768 320 733

## யானையின் அங்குசம் மொட்டிடம் இருந்து நழுவியது !

22ம் திருத்தத்தின் முடிவில் ஒற்றையாளாக இராஜியத்தை நடாத்தும் ரணிலின் பின்னால் ஒளிவட்டமொன்று அரசியல் வானில் தற்போது தென்பட ஆரம்பித்துள்ளது.

பல்வேறு வகையிலும் ரணிலுக்கு நிபந்தனைகளை விதித்து 'கிங்மேக்கர்களாக' வலம்வந்த மொட்டுக்கட்சியினர் எதிர்வரும் மார்ச் மாதம் ரணில் பாராளுமன்றத்தை கலைத்துவிடக்கூடும் என்ற கலக்கத்தில் தற்போது உள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

நிலையான பொருளாதார மீட்புக்கு ஸ்திரமான ஆட்சி அமைய வேண்டியது அவசியமாயினும் அது இலங்கையின் வரலாற்றில் பேரினவாத ஆட்சியே என்பதை கடந்த கால வரலாறு உணர்த்தி நிற்கிறது.அரச தீபாவளி கொண்டாட்டத்தில் பறக்கவிடப்பட்ட நந்திக்கொடிகள் .இந்துமத புராதன தலங்கள் மீது தொடரும் ஆக்கிரமிப்புக்கு வலுச்சேர்க்கும் வெறும் பச்சைக்கொடிகளே

அமெரிக்காவிற்கு ஒரு ஒபாமா ,பிரிட்டனுக்கு ரிஷி என்பதுபோல உலக ஒழுங்குடன் ஓடமுடியாது ஒடுங்கியிருக்கிறது இந்த சிறுதீவின் சிறுபான்மை இனங்கள்.

**கனவுகள் மெய்ப்பட வேண்டும்**




# இருபத்தியிரண்டாம் திருத்தமும் இனி நிகழ்வனவும்

**பவித்திரா**

**ஜனாதிபதியின்** அதிகாரங்களைக் குறைத்தல் என்ற பெயரில் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புக்கான 22 ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் கடந்த வாரத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இதில் மிகப்பெரிய ஆச்சரியம் என்னவென்றால், இந்த திருத்த யோசனைகளுக்காக அரசாங்கத்தை கடுமையாக விமாசித்துவந்த பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இதனை ஆதரித்து வாக்களித்தது. ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது, அனைத்துத் தரப்பினரதும் ஆதரடன்தான் இது நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இதனை எதிர்த்து வாக்களித்த சரத் வீரசேகர தெரிவித்த காரணங்கள் கூட பொருத்தமானவையாக இருக்கவில்லை.

ராஜபக்ஷக்களுக்கு எதிராக நடைபெற்ற மக்கள் போராட்டம்தான் இந்த அரசியலமைப்புத் திருத்தத்துக்கு அடிப்படையாக இருந்தது. அரசாங்கத்தை அதிகளவுக்கு ஜனநாயக மயப்படுத்துதல், ஜனாதிபதியிடமிருக்கும் நிறைவேற்று அதிகாரங்களை வெட்டிக் குறைத்தல் என்ற கோரிக்கைகள்தான் இந்தத் திருத்ததுக்கான பாதையைத் திறந்தது. 22 ஆவது திருத்தத்துக்கான பிரேரணை சமா்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே ஐக்கிய மக்கள் சக்தியால் 21 ஆவது திருத்தத்துக்கான பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டிருந்தது. ஆனால், அது விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படாமையால், தற்போது நிறைவேற்றப்பட்ட திருத்தம் அரசியலமைப்பில் 21 ஆவது திருத்தமாக இடம்பெறும்.




### நிறைவேற்று அதிகாரத்தை நீக்குதல்

ஜனாதிபதியிட முள்ள நிறைவேற்று அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை 1990 களிலிருந்தே முன்வைக்கப்பட்டடு வருகின்றது. 1994 முதல் முறையாக ஜனாதிபதித் தோ்தலில் போட்டியிட்ட சந்திரிகா குமாரதுங்க கூட, நிறைவேற்று அதிகாரங்கள் நீக்கப்படும் என்ற வாக்குறுதியுடன்தான் ஜனாதிபதித் தோ்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். இரண்டு தடவைகள் அவா் ஜனாதிபதிப் பதவியை வகித்த போதிலும், தன்னுடைய அதிகாரங்களைக் குறைப்பதில் அவா் அக்கறைகாட்டவில்லை. அதன் பின்னா், ஜனாதிபதிப் பதவிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ கூட அதே வாக்குறுதியை வழங்கினாரே தவிர அவரும் அதனைச் செய்யவில்லை.

> ரணில் விக்கிரமசிங்கவினால் செய்யப்பட்டுள்ள திருத்தத்தில் இந்தவிடயம் மாற்றப்படவில்லை. இதனை நான்கரை வருடங்களாக மாற்ற வேண்டும் என்ற மொட்டு அணியின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள மொட்டு அணியினா பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் இரண்டரை வருடங்களில் ரணிலிடம் செல்வதை விரும்பவில்லை. தற்போதைய நிலையில், இரண்டரை வருடங்கள் என்ற ஏற்பாடு தொடாவதால், அடுத்த மார்ச் மாதத்துடன் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் ரணிலின் கைகளுக்கு வருகின்றது.


### பாராளுமன்றில்

2015 இல் ஜனாதிபதிப் பதவிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன மட்டும் தன்னுடைய அதிகாரங்களில் சிலவற்றை குறைத்தார். குறிப்பாக பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு ஒரு வருடத்தில் அதனைக் கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருந்தபோதிலும் அதனை நான்கரை வருடங்களாக மைத்திரிபால சிறிசேனவின் காலத்தில் மாற்றியமைக்கப்பட்டது. அதாவது 19 ஆவது திருத்தத்தின் மூலம் இந்த மாற்றம் செய்யப்பட்டது. ஆனால், பின்னா் 2019 இல் ராஜபக்ஷக்கள் அதிகாரத்தை கைப்பற்றிய பின்னா் செய்யப்பட்ட 20 ஆவது திருத்தத்தில் இது இரண்டரை வருடங்களாக குறைக்கப்பட்டது.

இப்போது ரணில் விக்கிரமசிங்கவினால் செய்யப்பட்டுள்ள திருத்தத்தில் இந்தவிடயம் மாற்றப்படவில்லை. இதனை நான்கரை வருடங்களாக மாற்ற வேண்டும் என்ற மொட்டு அணியின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள மொட்டு அணியினா் பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் இரண்டரை வருடங்களில் ரணிலிடம் செல்வதை விரும்பவில்லை. தற்போதைய நிலையில், இரண்டரை வருடங்கள் என்ற ஏற்பாடு தொடா்வதால், அடுத்த மார்ச் மாதத்துடன் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான அதிகாரம் ரணிலின் கைகளுக்கு வருகின்றது. அதன்பின்னா் ரணில் மீது அழுத்தங்களைக் கொடுப்பது மொட்டு அணிக்கு சாத்தியமற்றதாகிவிடும். இது ரணிலை மேலும் பலப்படுத்துவதுடன்,

மிகுதி 23 ஆம் பக்கத்தில்...

# ஈரானில் மசூதியில் துப்பாக்கிச் சூடு: 15 பேர் பலி 40 க்கும் மேற்பட்டோர் காயம்





ஈரானின் ஷிராஸ் நகரில் உள்ள ஷியா மசூதிக்குள் நேற்று நடந்த துப்பாக்கிச் சூட்டில் 15 பேர் கொல்லப்பட்டனர் 40 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பயங்கரவாத அமைப்பு ஒன்று இந்த தாக்குதலை நடத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடத்திய நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஈரான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு காரணமானவர்கள் 'தக்ஃபிரி பயங்கரவாதிகள்' என அந்நாட்டு அரசு ஊடகம் குற்றம் சாட்டியுள்ளது.

'தக்ஃபிரி' என்றால் ஐ.எஸ். அமைப்பு போன்ற கடும்போக்கு சன்னி முஸ்லீம் என்பது பெயர்.

ஈரானின் நாடாளுமன்றம் மற்றும் இஸ்லாமிய குடியரசின் நிறுவனர் அயதுல்லா ருஹோல்லா கொமெய்னியின் கல்லறையை குறிவைத்து 2017 இல் நடந்த இரட்டை குண்டுவெடிப்பு உட்பட, ஈரானில் முந்தைய தாக்குதல்களுக்கு குழு பொறுப்பேற்றதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## ஜேர்மனியின் குடியுரிமை கோள்கைகளில் மாற்றம்

ஐரோப்பிய ஒன்றியத்தாரல்லாதவர்கள் ஜேர்மன் குடியுரிமை பெறும்போது இரட்டைக் குடியுரிமை வைத்துக் கொள்ள அனுமதியளிக்கப்பட உள்ளது.

அத்துடன்இ வெளிநாட்டவர்கள் ஜேர்மனியில் குடியுரிமை கோர வேண்டுமானால் அவர்கள் ஐந்து ஆண்டுகள் ஜேர்மனியில் வாழ்ந்திருக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது.

அதையும் மாற்றிஇ மூன்று ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்திருந்தால் போதும் ஆனால் ஜேர்மனியுடன் ஒருங்கிணைந்து வாழ்ந்திருக்க வேண்டும் என்ற விதி கொண்டுவரப்பட உள்ளது.

இப்போதைக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஒன்றிலிருந்து ஜேர்மனியில் வாழ வருவோர் மட்டுமே ஒன்றுக்கும் மேற்பட்ட குடியுரிமைகள் வைத்திருக்கலாம் என்ற நிலை உள்ளது.

எனினும் அந்த விதியையும் மாற்ற புதிய அரசு வாக்குறுதி அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## சல்மான் ருஷ்டி ஒரு கண் பார்வை, கை செயலிழப்பு; மருத்துவர்கள் அறிவிப்பு!

நியூயார்க் மாகாணம், ஷடாக்குவாவில் நடைபெற்ற இலக்கிய கருத்தரங்கில் கத்துக்குத்து தாக்குதலுக்கு ஆளான இந்திய வம்சாவளி எழுத்தாளர் சல்மான் ருஷ்டியின் ஒரு கண் முழுவதும் பார்வை இழந்துள்ளதாகவும், ஒரு கை செயலிழந்துவிட்டதாக மருத்துவர்கள் அறிவித்துள்ளனர்.

ஒகஸ்ட் 12-ஆம் திகதி அமெரிக்காவின் நியூயார்க் மாகாணம், ஷடாக்குவாவில் நடைபெற்ற இலக்கிய கருத்தரங்கு ஒன்றில் இந்தி வம்சாவளி எழுத்தாளா் சல்மான் ருஷ்டி, பங்கேற்றபோது, மேடையில் ஹாடி மாடா் (24) என்பவா் ருஷ்டியை சரமாரியாக கத்தியால் குத்தினார்.

இதில் நெஞ்சு, கழுத்து மற்றும் கண் என அவரது உடலில் 15க்கும் மேற்பட்ட இடங்களில் பலத்த காயமடைந்த ருஷ்டி, வடகிழக்கு பெனின்சுலேவியால் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

அவருக்கு சிகிச்சை அளித்து வரும் மருத்துவர்கள் ஒரு கண்ணில் பார்வையிழக்கக் கூடும் என்று தெரிவித்திருந்தனர். இந்நிலையில், கத்திக்குத்து தாக்குதலுக்குள்ளான சல்மான் ருஷ்டி, ஒரு கண் பார்வையை முழுவதும் இழந்துள்ளதாகவும், ஒரு கை செயலிழந்துள்ளதாகவும் மருத்துவர்கள் அறிவித்துள்ளனர். சல்மான் ருஷ்டியின் கல்லீரலும் சேதமடைந்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சல்மான் ருஷ்டி எழுதி 1988-இல் வெளியிட்ட 4-ஆவது நாவல் 'தி சட்டானிக் வொ்சஸ்'. இந்தப் புத்தகம், இஸ்ஸாமியரை புண்படச் செய்ததாக கூறி, ருஷ்டிக்கு எதிராக ஈரானின் அப்போதைய தலைமை மதகுரு அயதுல்லா கொமேனி ஃபத்வா ஆணை பிறப்பித்தார். அதையடுத்து, பிரிட்டன் அரசின் பாதுகாப்பில் ருஷ்டி 9 ஆண்டு காலம் தலைமறைவு வாழ்வு வாழ்ந்து வந்தார். இப்புத்தகத்தை இந்தியாதடை செய்ததைத் தொடா்ந்து பல்வேறு நாடுகளும் தடை விதித்தது.

## மியன்மார் அகதிகளை நாடு கடத்துவதை நிறுத்துமாறு மலேசிய அரசிடம் கோரிக்கை!

கடந்த இரண்டு மாதங்களாக மலேசியாவில் தஞ்சம் கோரிய பல மியான்மர் அகதிகளை மலேசியா நாடு கடத்தி வருவதாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து அகதிகளை நாடுகடத்துவதை நிறுத்துமாறு மலேசிய அரசை ஐ.நா. அகதிகள் முகாமை வலியுறுத்தியுள்ளது.

கடந்த இரண்டு மாதத்தில் மட்டும் தங்களது விருப்பத்துக்கு மாறாக நூற்றுக்கணக்கான மியான்மர் நாட்டவர்கள் நாடுகடத்தப்பட்டுள்ளனர். வாழ்க்கைக்கும் சுதந்திரத்துக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய இடங்களுக்கு மக்களை திருப்பி அனுப்ப முடியாது, என ஜெனிவாவில் நடந்த பத்திரிக்கையாளர் சந்திப்பில் ஐ.நா. அகதிகள் முகமையின் பேச்சாளர் ஷபியா மன்டூ தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறு நாடு கடத்தப்பட்டவர்களில் மலேசியாவில் தஞ்சம் கோரிய மியான்மரின் முன்னாள் கடற்படை அதிகாரிகளும் உள்ளடங்குவர்.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் கூற்றுப்படி, கடந்த ஏப்ரல் மாதம் முதல் 2,000 த்திற்கும் மேற்பட்ட மியான்மர் நாட்டவர்களின் தஞ்சக்கோரிக்கையை எவ்வித பரிசீலனையுமின்றி நிராகரித்து அவர்களை மலேசியா நாடுகடத்தியிருக்கிறது. இதில் சுமார் 1,000 த்திற்கும் மேற்பட்டவர்களை கடந்த இரண்டு மாதங்களில் நாடுகடத்தியிருக்கிறது.



இப்படியான எவ்வித பரிசீலனையுமற்ற நாடுகடத்தலை மலேசிய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

மலேசியாவில் 185,000 அகதிகள் மற்றும் தஞ்சக்கோரிக்கையாளர்கள் உள்ளதாக சொல்லப்படுகிறது. இதில் 1 லட்சத்துக்கும் அதிகமான ரோஹிங்கியா முஸ்லீம் அகதிகள் ஐ.நா. அகதிகள் முகமையிடம் பதிந்திருக்கின்றனர்.

அத்துடன் 17,500 பேர் மலேசியாவில் உள்ள 21 குடிவரவுத் தடுப்பு முகாம்களில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இதில் 1,500க்கும் மேற்பட்டவர்கள் குழந்தைகள் எனக்கூறப்படுகிறது.

மலேசியாவில் உள்ள அகதிகளை நிர்வகிக்கும் பொறுப்பினை அண்மையில் மலேசிய அரசு கையில் எடுத்தது. இதைத் தொடர்ந்து மலேசிய அரசுக்கும் ஐ.நா. அகதிகள் முகாமைக்கும் முறுகலான நிலை நீடித்து வரும் சூழலில், குடிவரவுத் தடுப்பு முகாம்களை பார்வையிட ஐ.நா.வுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள நிலைமையின் அடிப்படையில், மியான்மர் அகதிகளை நாடுகடத்தும் மலேசியாவின் நடவடிக்கை தொடரும் எனக் கூறப்படுகிறது.

## பேல்ஜியத்தில் களைகட்டியது பூசணிக்காயில் படகு சவாரி

அண்மையில் பெல்ஜியத்திலுள்ள காஸ்டர்லீயின் லிச்டார்ட் கிராமத்தில் விசித்திரமான படக்குப் போட்டி ஒன்று இடம்பெற்றுள்ளது.

பாரிய இராட்சத பூசணிக்காய்களை ,மக்கள் காட்சிப்படுத்தியுள்ளனர். ஒவ்வொரு பூசணிக்காயின் எடையும் நூற்றுக்கணக்கான கிலோகிராம்களை கொண்டுள்ளது. பின்னர் அந்தப் பூசணிக்காய்களின் நடுவே குழி அமைத்து,அதனை படகு போன்று பயன்படுத்தி ,சவாரி செய்துள்ளனர்.



## மியன்மார் அழகுராணிக்கு அச்சுறுத்தல்: கனடாவில் அடைக்கலம் கோரத் திட்டம்

மியன்மர் அழகிப்போட்டியில் வெற்றி பெற்றவரான Han Layக்கு அவரது தாய்நாட்டில், ஆளும் இராணுவ ஆட்சியாளர்களால் அச்சுறுத்தல் உருவாகியுள்ளது. அதனால், தாய்லாந்தில் அடைக்கலம் புகுந்திருந்த Han Lay கனடாவுக்குத் தப்பியோடியுள்ளார். அவர் கனடாவில் புகலிடம் கோர உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஏச்ண ஃச்தூக்கும் மியான்மர் இராணுவத்துக்கும் என்ன பிரச்சினை?

2021ஆம் ஆண்டு, அழகிப்போட்டியின் இறுதிப்போட்டின்போது உணர்ச்சிகரமான உரை ஒன்றை ஆற்றிய Han Lay உலகின் கவனம் ஈர்த்தார். ஆளும் இராணுவ ஆட்சியாளர்களின் அராஜகங்களை வெளியுலகுக்கு தெரியப்படுத்துவதற்காக 'மியான்மருக்காக பிரார்த்தனை செய்யுங்கள்' என்று கூறும் பதாகை ஒன்றை ஏந்தி Han Lay நிற்கும் காட்சிகள் பரபரப்பை ஏற்படுத்தின.

ஏச்ண Layயின் உரையைத் தொடர்ந்து அவருக்கு கொலை மிரட்டல்கள் வரத்துவங்கின. ஆகவே, அழகிப்போட்டி ஒன்றிற்காக தாய்லாந்து சென்ற Han Lay, பின்னர் நாடு திரும்புவதில்லை என முடிவு செய்தார். அதைத் தொடர்ந்து, Han Lay தாய்லாந்திலும் சிக்கல்களை சந்திக்க நேர்ந்தது.



இந்நிலையில், Han Lay, கனடாவுக்குச் சென்றுள்ளதாகவும், அங்கு அரசியல் புகலிடம் கோர உள்ளதாகவும், தாய்லாந்து புலம்பெயர்தல் அமைப்பின் துணைத் தலைவர் தெரிவித்துள்ளார். Han Layக்கு சில சர்வதேச தொண்டு நிறுவனங்களும் ஆதரவு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகளுக்கும் கோவை குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டோருக்கும் தொடர்பு?

## தமிழக புலனாய்வாளர்களின் விசாரணையில் திடுக்கிடும் திருப்பங்கள்

இலங்கையில் மூன்று வருடங்களின் முன்னா் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்திய குழுவின் தலைவராக செயற்பட்ட சஹ்ரான் ஹாஷிமிற்கு இந்தியாவுடன் காணப்பட்ட தொடர்புகள் குறித்து மற்றுமொரு தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தின் கோயம்புத்தூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு காரில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தின் பின்னர் இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

கோயம்புத்தூரில் காரில் இடம்பெற்ற வெடிச்சம்பவத்தில் ஜமீஷா முபின் என்பவர் உயிரிழந்தார். உயிரிழந்த நபருக்கும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பிரதான சந்தேகநபரான சஹ்ரான் ஹாஷிமிற்கும் இடையில்



தொடர்பு இருந்ததாக, இந்திய பாதுகாப்புதுறை அதிகாரிகள் அறிவித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முகநூல் வாயிலாக இவர்கள் இருவரும் தொடர்புகளைப் பேணி வந்ததாக இந்திய புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கோயம்புத்தூரில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவம் தொடர்பில் ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

1998 ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் 11 இடங்களில் நடத்தப்பட்ட தொடர் குண்டுத்தாக்குதல் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன், தற்போது கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேகநபர்களும் தொடர்புகளைப் பேணியுள்ளதாக இந்திய பாதுகாப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

ஜமீஷா முபின் உயிரிழந்த காரில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்திற்கும் வெளிநாட்டவர்களுக்கும் தொடர்புகள் இருக்கக்கூடும் என சந்தேகிப்பதாகவும் சம்பவம் தொடர்பான விசாரணையை இந்திய தேசிய புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் 2019 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட, ஐகுஐகு அமைப்புடன் நேரடி தொடர்புகளைப் பேணிய அசாருதீன் என்பவருடனும் ஜமீஷா முபின் தொடர்புகளைப் பேணியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஏப்ரல் 21 பயங்கரவாத குண்டுத் தாக்குதலை முன்னெடுத்த குழுவின் தலைவரான சஹ்ரான் ஹாஷிமுடன் 2019 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே அசாருதீன் என்பவர் தொடர்புகளைப் பேணியுள்ளதாக இந்திய பாதுகாப்புத் தரப்பினர் கூறியுள்ளதை மேற்கோள் காட்டி இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு: குற்றவாளிகள் தண்டிக்கப்பட்ட வேண்டும்

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவத்துக்கு காரணமானவா்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று தேமுதிக தலைவா் விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடா்பாக சனிக்கிழமை அவா் வெளியிட்ட அறிக்கை:

தூத்துக்குடியில் கடந்த 2018 ஆம் ஆண்டு ஸ்டொ்லைட் ஆலைக்கு எதிரான போராட்டத்தின்போது, போலீசாா் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 13 போ் உயிரிழந்த சம்பவம், காலத்துக்கும் அழியாத ஒரு பழியைத் தமிழகத்துக்கு ஏற்படுத்திவிட்டது.

ஜாலியன் வாலாபாக் படுகொலையை நாம் பார்த்ததில்லை. ஆனால் கேள்விப்பட்டிருக்கிறோம். அது போன்ற ஒரு சம்பவத்தை நாம் வாழும் காலத்தில் கண்முன்னே கண்டது போல் தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் நடந்துள்ளது.



உயிரிழந்த 13 பேருக்கு உரிய நீதி கிடைக்க நீதிபதிகள் வழிவகை செய்ய வேண்டும். உண்மையில் யாா் தவறு செய்தவா்கள் என்பதை கண்டறிந்து குற்றம் செய்தவா்களுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

# கோவை கார் சிலிண்டர் வெடிப்பு சம்பவம்: என்.ஐ.ஏ. விசாரணைக்கு ஸ்டாலின் பரிந்துரை

கோவை, உக்கடம் பகுதியில் நிகழ்ந்த கார் சிலிண்டர் வெடிப்பு தொடர்பான வழக்கின் விசாரணையை தேசிய புலனாய்வு அமைப்புக்கு (என் ஐஏ) மாற்றிட பரிந்துரைத்தும், கோவையில் பாதுகாப்பினைத் தொடர்ந்து உறுதி செய்திடவும் தமிழக முதலமைச்சா் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.




இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது - ‘‘கோவை, உக்கடம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்த கார் சிலிண்டர் வெடிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணை குறித்தும், பொதுவான சட்டம்-ஒழுங்கு நிலவரம் குறித்தும் தமிழக முதல்வர் தலைமையில் தலைமைச் செயலகத்தில் விரிவான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில், மேற்படி கார் சிலிண்டர் வெடிப்பு சம்பவம் தொடர்பாக காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணை குறித்தும், கோவை மாவட்டத்தில் செய்யப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையின் தற்போதைய நிலை குறித்தும், கோவை மாவட்டத்தில் பாதுகாப்பினை மேலும் உறுதி செய்திடவும் முதல்வர் காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதுபோன்ற சம்பவங்களின் விசாரணையில், மாநிலம் தாண்டிய பரிணாமங்களும், பன்னாட்டுத் தொடர்புகளும் இருக்க வாய்ப்புள்ளதால், இவ்வழக்கின் விசாரணையை தேசிய புலனாய்வு அமைப்பிற்கு மாற்றிட ஒன்றிய அரசுக்கு உரிய பரிந்துரைகளை செய்திட இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பணீந்திர ரெட்டி, காவல் துறை தலைமை இயக்குநர் சைலேந்திரபாபு, காவல்துறை கூடுதல் இயக்குநர் (நுண்ணறிவு) செள. டேவிட்சன் தேவாசிர்வாதம், மற்றும் காவல் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தி.மு.க.வின் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படுகிறது

## ஓ.பி.எஸ். கண்டனம்

கோவை சிலிண்டர் வெடி விபத்து தொடர்பாக முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.




அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவம், கோயம்புத்தூர் மாவட்டம், கோட்டைமேட்டில் உள்ள பிரசித்தி பெற்ற கோட்டை ஈஸ்வரன் கோயில் அருகில் பலத்த வெடிச் சத்தத்துடன் கார் ஒன்று வெடித்து சிதறியதாகவும் இதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும்; இதற்குக் காரணம் எரிவாயு உருளை வெடிப்பு என்று கூறப்பட்டாலும், காருக்குள் இருந்தவர் காவல் துறையினரின் கண்காணிப்பில் இருந்ததாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன.

வெடித்து சிதறுண்ட வாகனத்திற்குள்ளும், சம்பவம் நடந்த இடத்திலும் ஆணிகளும், கோலி குண்டுகளும் சிதறிக் கிடந்ததாகவும், மேற்படி விபத்தில் உயிரிழந்த நபர் இதற்கு முன்பு தேசிய உளவுத் துறை முகமையால் விசாரணை செய்யப்பட்டதாகவும், இறந்தவரின் இல்லத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வெடிகுண்டுகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், பொட்டாசியம் நைட்ரேட், அலுமினியத் துகள்கள், மரக்கரி போன்றவை கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வருகின்றன.

காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களே சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு செய்கிறார் என்றால் இதன் பின்னணியில் ஏதோ இருக்கிறது என்பது தெளிவாகிறது. மேலும், இது 1998 ஆம் ஆண்டு திமுக ஆட்சியில் நடைபெற்ற குண்டு வெடிப்புச்சம்பவத்தை நினைவூட்டுகிறது. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீரழிந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இதை விட ஒரு சிறந்த எடுத்துக்காட்டு தேவையில்லை.

சட்டம் ஒழுங்கை சீரழித்துக் கொண்டிருக்கிற திமுக அரசிற்கு அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

# துணை ராணுவத்தினர் கோவையில் குவிப்பு

கோவையில் நடைபெற்ற கார் வெடிப்பு சம்பவத்தையொட்டி ஏற்பட்டுள்ள பதற்றத்தால், கோவையை துணை ராணுவத்தினர் மற்றும் காவல்துறையினர் தங்களது பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வந்துள்ளனர்.



டிஜிபி சைலேந்திரபாபு, கூடுதல் டிஜிபி தாமரைக்கண்னண் ஆகியோரது மேற்பார்வையின் கீழ், மாநகரகாவல் ஆணையர் வே.பாலகிருஷ்ணன் தலைமையில் மாநகர் முழுவதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மாநகரின் வழக்கமான சோதனைச் சாவடிகள் மட்டுமின்றி 25-க்கும் மேற்பட்ட இடங்களில் தற்காலிக சோதனைச் சாவடிகள் அமைத்தும் போலீஸார் கண்காணித்து வரு கின்றனர்.

அவர்களுக்கு உதவியாக மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர் (சி.ஆர்.பி.எப்), அதிவிரைவு படையினர் (ஆர்.ஏ.எப்) ஆகியோரும் நூற்றுக்கணக்கானோர் குவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் துப்பாக்கியுடன் உக்கடம், கோட்டைமேடு உள்ளிட்ட பதற்றமான இடங்களில் கண்காணிப்பு மற்றும் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேபோல், மாவட்டப் பகுதியில் பதற்றமான இடங்களிலும் காவல்துறையினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து வழிபாட்டுத் தலங்களின் முன்பும் போலீஸார் பாதுகாப்புக்காக நிறுத்தப் பட்டுள்ளனர்.

# மலேசிய தேர்தல் நவம்பர் 19 இல் வேட்புமனு தாக்கல் நவம்பர் 5 இல்



மலேசியாவில் பொதுத் தேர்தல் நவம்பர் 19ஆம் தேதி நடைபெறும் என்று அந்நாட்டுத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தேர்தலுக்காக வேட்புமனுத் தாக்கல் நவம்பர் 5ஆம் தேதி நடைபெறும். அதனைத் தொடர்ந்து 14 நாள் தேர்தல் பிரச்சாரம் இடம்பெறும்.

20 மில்லியனுக்கு மேற்பட்ட மலேசியர்கள் இந்தத் தேர்தலில் வாக்களிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக பிரதமர் இஸ்மாயில் சாப்ரி யாக்கோப் அந்நாட்டு நாடாளுமன்றத்தைக் கலைப்பதாக அக்டோபர் 10 ஆம் தேதி அறிவித்தார். நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட 60 நாள்களுக்குள், பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

# லங்காவி தொகுதியை தற்காத்து கொள்வேன்

## டாக்டர் மகாதீர்

மலேசிய முன்னாள் பிரதமர் மகாதீர் முகமது அடுத்தப் பொதுத் தேர்தலில் தனது லங்காவி தொகுதியில் மீண்டும் போட்டியிடுவார் என்று அறிவித்துள்ளார்.

செய்தியாளர் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எனினும், பிரதமர் பதவிக்குத் தம்மை முன்மொழிவாரா என்பது குறித்து அவர் கருத்துரைக்கவில்லை. இது பொதுத் தேர்தலில் தனது கட்சி வெல்வதைப் பொறுத்துள்ளது என்றார் மகாதீர்.



கெராக்கான் தானா ஆயர் கூட்டணி 120 தொகுதிகளில் போட்டியிடும் அவர் குறிப்பிட்டார். வேட்பாளர்களின் விவரங்கள் கூடியவிரைவில் வெளியிடப்படும் என்று அவர் கூறினார்.

# வாக்களிக்க சொந்த ஊர்களுக்கு செல்ல மாணவர்களுக்கு 5 நாள் விடுமுறை




15வது பொதுத் தேர்தலில் வாக்களிக்க அனைத்து உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்ப நவம்பர் 17 முதல் ஐந்து நாள் விடுமுறை அளிக்க உயர்கல்வி அமைச்சகம் ஒப்புக்கொண்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பான சுற்றறிக்கை சமூக ஊடகங்களில் வைரலானதை அடுத்து உயர்கல்வி இயக்குநர் ஜெனரல் ஹுசைனி உமர் இதை உறுதிப்படுத்தினார்.

பாலிடெக்னிக் மற்றும் சமூகக் கல்லூரிக் கல்வித் துறைகள் உட்பட அனைத்து பொது மற்றும் தனியார் கல்லூரிகளுக்கு மேல் நடவடிக்கைக்காக கடிதம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

வாக்களிக்க தங்கள் மாணவர்களுக்கு விடுமுறை அளிக்குமாறு அனைத்து கல்லூரிக்கும் தெரிவிக்க கடிதம் உள்ளது. இது தொடர்பான ஊடக அறிக்கை பின்னர் களுவெளியிடப்படும் என அவர் தெரிவித்தார்.

அக்டோபர் 21 தேதியிட்ட கடிதத்தின்படி, நவம்பர் 17 முதல் 21 வரை ஐந்து நாட்கள் விடுமுறை, மாணவர்கள் தங்கள் தொகுதிகளுக்குச் சென்று திரும்புவதற்கு போதுமான நேரம் கொடுக்க வேண்டும்.

அந்தக் காலப்பகுதியில் அனைத்து வகுப்புகள் மற்றும் மாணவர்களின் நடவடிக்கைகள் வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்பட வேண்டும் என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்து மலேசியர்களும் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யாமல் வாக்களிக்கத் தகுதியுடையவர்களாக ஆக்குகிறார்கள்.

## வணக்கம் மலேசியா

# கோவிட் பாதிப்பு 2,136; இறப்பு 6

மலேசியாவில் நேற்று புதன்கிழமை 2,136 புதிய கோவிட்-19 தொற்றுகள் பதிவாகியுள்ளன என்று சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அமைச்சகத்தின் தகவலின்படி, நாட்டில் புதிய கோவிட்-19 நோய்த்தொற்றுகளில் 2,133 உள்ளூர் பரவல்கள், அதே நேரத்தில் 3 இறக்குமதி செய்யப்பட்ட தொற்றுகள் உள்ளன.

இது தொற்றுநோய் தொடங்கியதிலிருந்து நாட்டில் மொத்த கோவிட்-19 நோய்த்தொற்றுகளின் எண்ணிக்கையை 4,887,675 ஆகக் கொண்டு வருகிறது.

புதன்கிழமையன்று மொத்தம் 6 இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மொத்த இறப்பு எண்ணிக்கை 36,458 ஆக உள்ளது.

# சமுதாய நலன் கருதி தேசிய முன்னணிக்கு வேதமூர்த்தி ஆதரவு

மலேசிய பொதுத் தேர்தலில் பாரிசான் நேசனலுக்கு தனது ஆதரவை அறிவித்துள்ளார், முன்னாள் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் பி வேதமூர்த்தி.

மலேசியன் அட்வான்ஸ்மென்ட் பார்ட்டியின் தலைவரான வேதா, ஏழை மற்றும் தாழ்த்தப்பட்ட இந்தியர்களுக்கு உதவும் தனது பணியை முடிக்க விரும்புவதாக செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பக்காத்தான் ஹராப்பான் அவர்களின் கூட்டணியில் சேருவதற்கான எனது கோரிக்கையின் முடிவுக்காக இரண்டு ஆண்டுகளாக காத்திருந்தேன் என்று அவர் தெரிவித்தார்.

பக்காத்தான் ஹராப்பானின் மௌனம் எனக்கு ஒரு விருப்பமல்ல. அன்வார் இப்ராகிம் என்னிடமிருந்து எந்த ஒத்துழைப்பையும் விரும்பவில்லை. அவரது முடிவை நான் மதிக்கிறேன், நான் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகத்தின் நலனுக்காக முன்னேற வேண்டும்.

பக்காத்தான் ஹராப்பான் தலைமையிலான அரசாங்கத்தின் உறுப்பினரான வேதா, தனக்கு முடிவடையாத வேலைகள் இருப்பதாகவும், இந்திய சமூகம் பிரதான பொருளாதாரம் மற்றும் சிவில் சேவையின் ஒரு பகுதியாக இருப்பதை உறுதிப்படுத்த விரும்புவதாகவும் கூறினார். அரசு மற்றும் தனியார் துறைகளில் இளைஞர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதும் உருவாக்குவதுமே எனது நோக்கம்.



சமூகத்தின் பெரும்பகுதியை பாதிக்கும் கடுமையான வறுமையை நிவர்த்தி செய்வதே எனது நோக்கம்.

இளம் இந்தியர்கள், குறிப்பாக பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்தியவர்கள், பயிற்சி பெறுவதை உறுதி செய்ய விரும்புவதாகவும், அவர்களின் திறன்கள் மற்றும் சம்பாதிக்கும் திறனை மேம்படுத்த மாற்று வழிகள் இருப்பதாகவும் அவர் கூறினார்.

2007 இல் ஹிண்ட்ராஃப் பேரணியின் முக்கிய நபரான வேதா, சமூகத்தின் பிரச்சினைகளை தீர்க்கும் திட்டத்தை ஏற்கனவே ஒருமுறை வகுத்திருப்பதாகக் கூறினார்.

பிரதமராக வரும் எவரும் இந்திய சமூகம் எதிர்கொள்ளும் தனித்துவமான பிரச்சினைகளைப் புரிந்துகொள்வது முக்கியம். நமது சமூகத்தை கட்டியெழுப்பவும், எனது வாழ்க்கைப் பயணத்தையும் பணியையும் நிறைவேற்ற உதவும் பிரதமரை ஆதரிப்பதே எனக்கு முக்கியமானது. பாரிசான் நேஷனல் தலைவர் அஹ்மத் ஜாஹிட் ஹமிடியை சந்தித்ததாக வேதா கூறினார்.

இந்திய சமூகத்திற்கான எனது முயற்சிகள் மற்றும் திட்டங்களுக்கு அவர் உறுதுணையாக இருக்கிறார். எனவே எம்ஏபியும் நானும் டத்தோஸ்ரீ ஜாஹிட் தலைமையில் பிஎன்ஐ ஆதரிப்போம்.

# உணவு விநியோக திட்டத்தில் மோசடி குற்றச்சாட்டில் தொழிலதிபர் கைது!

கடந்த 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரிங்கிட் 730,000 மதிப்பிலான உலர் மற்றும் ஈரமான உணவு வழங்கும் திட்டம் தொடர்பாக, நிறுவன உரிமையாளரை ஏமாற்றியதாகக் கூறி ஒரு தொழிலதிபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மலேசிய ஊழல் தடுப்பு ஆணையத்தின் ஆதாரத்தின்படி, 35 வயதான சந்தேக நபர் பாதிக்கப்பட்டவரை ஏமாற்றி உணவுத் திட்டத்தை கூட்டாக செயல்படுத்துவதற்கு இணங்கினார். இதன் விளைவாக, நிறுவனத்தின் உரிமையாளர் சில லட்சம் வெள்ளிகளை இந்தச் செயல்பாட்டில் இழந்தார்.

இவ்வழக்கு தொடர்பான விசாரணைக்கு உதவும் பொருட்டு நேற்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இங்குள்ள சபா மலேசிய ஊழல் தடுப்பு ஆணையத்தின் அலுவலகத்திற்கு வாக்குமூலம் அளிக்கச் சென்றபோது, சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சபா மலேசிய ஊழல் தடுப்பு ஆணையத் தலைவர் டத்தோ எஸ். கருணாநிதியை தொடர்பு கொண்டபோது, அவர் கைது செய்யப்பட்டதை உறுதிப்படுத்தினார், மேலும் மோசடி செய்ததற்காக தண்டனைச் சட்டப் பிரிவு 420 இன் கீழ் வழக்கு விசாரிக்கப்படுவதாகக் கூறினார்.

இன்று வியாழக்கிழமை கோத்தா கினாபாலு நீதிமன்றத்தில் சந்தேகநபர் மீது குற்றஞ்சாட்டப்படும் என்று அவர் கூறினார்.

# ரிஷி மூலம் தேடாத சூரியதேசம்!

## காலனித்துவத்தில் இருந்து உருவான தேசத்தின் தலைவன்



ரிஷி சுனக் மே மாதம் 12ம் திகதி 1980 ம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்தார் கலைமானி பட்டத்தை ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்திலும். முதுகலைமானி பட்டத்தை ஸ்ரான்ட்போர்ட் பல்கலைக் கழகத்திலும் பெற்றுக் கொண்டார்

## ரிஷி சுனக்கிற்கு தீபாவளி இனிப்புகளை வழங்கினார் அரசர் மூன்றாம் சார்லஸ்



இங்கிலாந்து பிரதமராக அறிவிக்கப்பட்ட இந்திய வம்சாவளி ரிஷி சுனக்கிற்கு அரசர் மூன்றாம் சார்லஸ் நல்லெண்ண அடிப்படையில் தீபாவளி இனிப்புகளை வழங்கினார்.

இங்கிலாந்து நாட்டின் புதிய பிரதமராக, ஆளும் கன்சர்வேடிவ் கட்சியை சேர்ந்த எம்.பி.க்களின் பலத்த ஆதரவுடன் ரிஷி சுனக் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டார். 200 ஆண்டுகளில், இந்திய வம்சாவளியை சேர்ந்த ஒருவர் முதன்முறையாக, இளம் பிரதமர் என்ற பெருமையுடன் இந்த பதவியை அலங்கரிக்கிறார்.

அரசர் மூன்றாம் சார்லஸ் முறைப்படி புதிய கன்சர்வேடிவ் தலைவராக ரிஷி சுனக்கை நியமித்த பின்பு, அந்நிகழ்ச்சியில், சுனக்கிற்கு நல்லெண்ண அடிப்படையில் தீபாவளி இனிப்புகள் வழங்கப்பட்டன. இந்துக்களால் 5 நாட்கள் கொண்டாடப்படும் ஒளியின் திருவிழா எனப்படும் தீபாவளி பண்டிகையையொட்டி ரிஷி சுனக்கின் பிரதமர் பதவியேற்பு நிகழ்ச்சி நடந்துள்ளது.

இதுபற்றி தி ராயல் பேமிலி சேனல் டுவிட்டரில் வெளியிட்டு உள்ள செய்தியில், அரசர் மூன்றாம் சார்லஸ் மற்றும் ரிஷி சுனக் ஆகிய இருவரும் அரண்மனையின் 1844-ம் எண்ணிடப்பட்ட அறையில் சந்தித்து கொண்டனர். அந்த அறையில், தீபாவளி பண்டிகையை கொண்டாடுவதற்காக வைக்கப்பட்டு இருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட இனிப்புகள் சாப்பிடப்பட்டன என தெரிவித்து உள்ளது.

இங்கிலாந்தின் புதிய பிரதமர் 42 வயதேயான ரிஷி சுனக்கிற்கு, பிரதமர் மோடி, முன்னாள் இங்கிலாந்து பிரதமர் லிஸ் டிரஸ் உள்ளிட்ட உலக தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்து உள்ளனர். இங்கிலாந்தின் 57-வது பிரதமரான ரிஷி சுனக், யார்க்ஷயர் தொகுதியின் எம்.பி.யாக பதவியேற்றபோது பகவத் கீதையை கொண்டு வந்து பதவியேற்றார். அவ்வாறு செய்த முதல் இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர் இவர்தான்.

தன்னை இந்து என கூறி கொள்வதில் பெருமை கொள்கிறேன் என சுனக் கூறியுள்ளார். இங்கிலாந்து நாட்டின் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட ரிஷி சுனக், அரசர் மூன்றாம் சார்லசை நேற்று சந்தித்து பேசினார். இதன்பின்பு, அரசர் 3-ம் சார்லஸ், முறைப்படி புதிய பிரதமராக ரிஷி சுனக்கை அறிவித்துள்ளார்.

இங்கிலாந்து நாட்டின் முதல் இந்து பிரதமர் என்ற பெருமையை சுனக் பெற்றதுடன், தீபாவளி பண்டிகையையொட்டி அந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார். தீபாவளி அன்று பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டது ஒரு வரலாற்று தருணம் என இங்கிலாந்தில் வசிக்கும் இந்திய வம்சாவளி மக்கள் புகழ்ந்து உள்ளனர்.

ரிஷி சுனக், கடந்த 2020-ம் ஆண்டு நிதி மந்திரியாக பதவி வகித்தபோது, 11 டவுனிங் ஸ்ட்ரீட் பகுதியில் அதிகாரப்பூர்வ இல்லத்திற்கு வெளியே தீபாவளி அன்று மெழுகுவர்த்திகளை ஏற்றினார். அதன் தொடர்ச்சியாக, தீபாவளி பண்டிகையில், அவர் அந்நாட்டின் பிரதமராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியேற்று உள்ளார்.

தமிழ்



## பிக்பென் முட்கள்

பிரித்தானிய செய்திகள்

## பிரித்தானிய புதிய பிரதமருக்கு இந்திய பிரதமர் மோடி வாழ்த்து



பிரித்தானியாவின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள இந்திய வம்சாவளியை சேர்ந்த ரிஷி சுனக்கிற்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது டுவிட்டர்பதிவில் அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் ரிஷி சுனக்கிற்கு மிகவும் அன்பான வாழ்த்துக்கள், உலகளாவிய பிரச்சினைகளில் நெருக்கமாக இணைந்து பணியாற்ற ஆவலுடன் காத்திருக்கிறேன்.

பிரித்தானியா வாழும் இந்தியர்களுக்கு தீபாவளி வாழ்த்துக்கள் என்று பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார்.



இதேபோல் பிரித்தானியாவின் பிரதமர் பதவியில் இருந்து விலகி உள்ள லிஸ் டிரஸ், ரிஷி சுனக்கிற்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராகவும், எங்கள் அடுத்த பிரதமராகவும் நியமிக்கப்பட்டதற்காக ரிஷி சுனக்கிற்கு வாழ்த்துக்கள். உங்களுக்கு எனது முழு ஆதரவு உண்டு என்று டிரஸ் குறிப்பிட்டுள்ளார்.

## மருமகன் ரிஷி சுனக்கிற்கு நாராயணமூர்த்தி வாழ்த்து

பிரித்தானியாவின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்றுள்ள ரிஷி சுனக் குறித்து பெருமிதம் கொள்வதாக அவரது மாமனாரும் இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் இணை நிறுவனருமான நாராயணமூர்த்தி தெரிவித்துள்ளார். 42 வயதான ரிஷி சுனக் மேலும் பல வெற்றிகளைப் பெற வாழ்த்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக் கடந்த இருநூறு ஆண்டுகளில் தேர்வான பிரித்தானியாவின் ஆக இளம் வயது பிரதமர் எனும் பெருமையைப் பெற்றுள்ளார். ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் தத்துவம் பயின்ற அவர், பின்னர் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில் பட்ட மேற்படிப்பை முடித்துள்ளார்.

ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில் தன்னுடன் பயின்ற சக மாணவியும், இந்தியாவின் 'இன்ஃபோசிஸ்' தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் இணை நிறுவனருமான நாராயண மூர்த்தியின் மகளுமாகிய அக்ஷதாவைக் காதலித்து மணந்தார் ரிஷி சுனக். கடந்த 2009ஆம் ஆண்டு இருவரும் திருமணம் செய்துகொண்டனர். இவர்களுக்கு கிருஷ்ணா, அனோஷ்கா என இரண்டு குழந்தைகள் இருக்கின்றனர்.

ரிஷிக்கு வாழ்த்துகள். நாங்கள் அவர் குறித்து மிகவும் பெருமைப்படுகிறோம். அவர் மேலும் பல வெற்றிகளைப் பெற வாழ்த்துகிறோம். இங்கிலாந்து மக்களுக்கு அவர் தன்னாலான அனைத்து நன்மைகளையும் செய்வார் என்று நாங்கள் நம்புகிறோம் என்று நாராயண மூர்த்தி தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.


KKMM
SNMW
SAI NANTHINI MOVIE WORLD
சாய் நந்தினி திரை உலகம்
KIFA
MINISTRY OF TOURISM, ARTS & CULTURE MALAYSIA
Proudly Presents / பெருமையுடன் வழங்கும்
Cholan Film Festival 2022
சோழன் திரை விழா
2022
( Theatrical, Shorts & Music Video Awards )
(முழு நீளத் திரைப்படம், குறும்படம் &
இசை வீடியோ விருதுகள்)
Date / நாள் : 12th Nov 2022 (Saturday)
Time / நேரம் : 6.00pm - 11.00pm
Venue / இடம் :
JADE GARDEN,
Bandar Aman Jaya, Sungai Petani, Kedah.
பண்டார் அமான் ஜெயா, சுங்கைப்பட்டாணி, கெடா.
Supported by :
• Ministry of Tourism, Arts and Culture of Malaysia • Malaysian Indian Congress
• Kementerian Komunikasi dan Multimedia Malaysia • Cuti-cuti Malaysia
• Tourism Malaysia • Kadaaram Indian Film Association • Mr. VIP Empire
*** Special Lucky Draw is Included *** / *** சிறப்பு அதிர்ஷ்டக் குலுக்கு உண்டு ***
cuti-cuti 1MALAYSIA
TOURISM MALAYSIA
MR.VIP
Media Sponsor
தமிழருவி Tamilaruvi weekly
தமிழருவி Tv tamilaruvi TV
tamilaruvi24
insta-tamilaruvi_24
aruvitamil812@gmail.com
0094 768 320 733



தலைவாழை

# சமோசாவால் நாவை கட்டிப்போடும் நகரங்கள்!

**உலகளாவிய** அளவில் நகர மயமாக்கலின் பங்கு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது அக்டோபர் 31 ஆம் தேதியை உலக ‘நகரங்கள்’ தினமாக அறிவித்துள்ளது.

இத் தினத்தின் கருப் பொருள் ‘சிறந்த நகரம், சிறந்த வாழ்வு’ என்பதாகும். ஒவ்வொரு நாடும் அதன் பாரம்பரியம் மற்றும் உணவுக்காக புகழ் பெற்றவையே. உலகில் வசிக்கத் தக்க சிறந்த நகரங்களுக்கான பட்டியலில் 173 நகரங்கள் இடம் பெற்றுள்ளன.

அவற்றின் நிலத் தன்மை, சுகாதாரம், கலாச்சாரம், சுற்றுச் சூழல், கல்வி மற்றும் கட்டமைப்பு ஆகிய காரணிகளின் அடிப்படையில் சிறந்த நகரங்களாக வரிசைப்பட்டுள்ளன. ‘சொர்க்கம் என்பது வானத்தில் மட்டுமில்லை, இந்த உலகிலும் நாம் ரசித்து அனுபவிக்க வேண்டிய மிக அழகான சொர்க்க ‘நகரங்கள்’உள்ளன.

## தேசிய உணவுகள்

இந்தக் கட்டுரை உணவுகளைக் காதலித்து அதை நோக்கிப் பயணிப்பவர்களுக்கானது. புதிதாக ஒன்றைக் கற்றுக் கொள்வது மற்றும் சுவைப்பது மிகவும் சுவாரஸ்யமானது.

## சுவையான தெரு உணவுகள்

உணவுகள் நம் ஒவ்வொருவருக்கும் பேரானந்தத்தைக் கொடுக்கின்றன.

சைவமோ, அசைவமோ எதுவாக இருந்தாலும், அது நமக்குப் பிடித்து விட்டால்'அதைத் திரும்பத் திரும்ப தேடிப் போய் சாப்பிடும் பழக்கம் நம்மில் பெரும்பாலானோருக்கு உண்டு. அப்படிப் பயணிப் போர்களை

இந்த உலகம் உணவின் உண்மைக் காதலர்கள் எனப் போற்றுகிறது. இன்றைக்கு வண்டிக் கடையிலிருந்து, ஐந்து நட்சத்திர உணவகங்களின் மெனு கார்டுகளில்

தனக்கான பிரத்யேக இடத்தைப் பெற்றிருக்கிறது என்றால் அது சமோசா தான். அடை மழையோ, கடும் வெயிலோ அத்தனை சீசனுக்கும் ஏற்ற சிற்றுண்டி என்றால் மிகையில்லை. ‘சமோசா’ என்று சொன்னதுமே இந்தியர்கள் மட்டுமில்லை, மொத்த உலக மக்களுக்கும் பிடித்த சிற்றுண்டி இது, ஏதேனும் கொரிக்க தோன்றினால் உடனே நம் ஞாபகத்திற்கு வருவது ‘சமோசா தான் ,அதற்குள் இருக்கும் மசாலா கறியை கண் பார்க்கும் போதே வாயூறும், இதனை சாப்பிட்டவுடன் மனசும் நிம்மதியாக இருக்கும். இந்தக் கட்டுரையை நான் எழுதும் போது உடனடியாக இரண்டொரு சமோசாக்களை டீ யுடன் சாப்பிட வேண்டும் போல இருந்தது. வாசிக்கும் உங்களின் நிலையை நினைத்துப் பார்க்கிறேன்.





## சமோசா வரலாறு

உருளைக்கிழங்கு மசாலா உடன் நிரம்பிய சமோசா முதன் முதலில் ஈரானில் தயாரிக்கப்பட்டது. பத்தாம் நூற்றாண்டின் உணவு வகைகள் பட்டியலில் ‘சமோசாவின் பெயர் இருக்கிறது. இதற்கு ‘சம்போசா’ என்பதே அன்று பெயராக இருந்தது.

வரலாற்று ஆசிரியர்கள் கணிப்புப் படி இந்த உணவு நடு ஆசியாவில் இருந்து வட ஆபிரிக்கா, கிழக்கு ஆசியாக்கு போய் கடைசியில் தென் ஆசியாவுக்கு வந்திருக்கிறது எனச் சொல்கிறார்கள்.

சமோசா அல்லது சமூசா என்ற தின் பண்டமானது பல்வேறு நாடுகளின் மக்களால் விரும்பப்படுகிறது. நொறுக்குத் தீனியாகவும், தொடு கறியாகவும் பசி/ சுவையிருக்கியாகவும் திகழும் இந்த உணவு செய்முறை வடிவில் வேறுபட்டு இருந்தாலும் நான்முக முக்கோண வடிவமே பன்னாட்டினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆசியா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்களினூடாக பல்வேறு நாட்டினரும் இன்று இதனை சிற்றுண்டியாக

உண்ணும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். பல நாடுகளின் கலாச்சார வேறுபாடுகளாலும், அம் மக்களின் குடி பெயர்வாலும் இத் தீனி


பல நாடுகளிலும் இன்றைக்கு பரவியுள்ளது. இன்று இந்த உணவு இல்லாத உணவகங்களை காண முடியாது. அந்தளவிற்கு சமோசா மக்களுக்குள் ஒன்றிப் போய்விட்டது.

## இந்த புகழ் பெற்ற சிற்றுண்டி செய்யத் தேவையானவை

1 கோதுமை மா- 500 கிராம்
2 முட்டைகோஸ் - 100 கிராம்
3 கேரட் - 100 கிராம்
4 உருளைக்கிழங்கு - 100 கிராம்
5 பட்டாணி - 50 கிராம்
6 பட்டை - சிறிய துண்டு
7 இலவங்கம் - 2
8 மஞ்சள்தூள் - 1/2 தேக்கரண்டி
9 மிளகாய்த்தூள் - 2 தேக்கரண்டி
10 புதினா - 1 கட்டு
11 பச்சைமிளகாய் - 8
12 பொரிக்க எண்ணெய்
13 உப்பு - தேவையான அளவு

## செய்முறை

புதினா மற்றும் பச்சை மிளகாய் இவற்றை சேர்த்து மையாக அரைக்கவும். முட்டை கோஸ், கேரட் மற்றும் உருளைக்கிழங்கை சிறிதாக




வெட்டி வேக வைத்து எடுக்கவும். கோதுமை மாவை நன்கு சலித்து அதனுடன் சிறிதளவு உப்பு,

எண்ணெய் இவற்றுடன் அரைத்த விழுதை சேர்த்து மாவை சப்பாத்திக்கு குழைப்பது போல மென்மையாக குழைத்து 30 நிமிடம் வைக்கவும். மசாலா செய்ய அடுப்பில் கறிச் சட்டியை வைத்து சிறிதளவு எண்ணெய் விட்டு பட்டை, லவங்கம் தாளித்து அதனுடன் வேக வைத்து எடுத்த மரக்கறிக் கலவையை சேர்த்துப் பிரட்டி மிளகாய் தூள், மஞ்சள் தூள், உப்பு சேர்த்து மசாலா கறி செய்து கொள்ளவும். மாவை சப்பாத்திகளாக வட்டமாக மெல்லயதாக திரட்டி அந்த வட்டங்களை இரண்டாக வெட்டலாம்




பிரமிளா நாகேஸ்வரராஜா

அல்லது நான்கு பகுதியாகவும் வெட்டலாம். அது உங்கள் வட்டத்தின் அளவைப் பொறுத்தது. முதலில் ஒரு பாதியை எடுத்து அதன் ஓரங்களை தண்ணீர் தொட்டு ஒட்ட அது கூம்பு போல இருக்கும் அதற்குள் சிறிதளவு மசாலாவை நிரப்பி அடிப்பக்கத்தை ஒன்றாக சேர்த்து தண்ணீர் தொட்டு அழுத்தி ஒட்டி விடவும். இப்படியே அனைத்தையும் தயாரித்து வைத்து விட்டு எண்ணெயை சூடாக்கி சமோசாக்களை போட்டு மொறு மொறுப்பாக பொரித்து எடுக்கவும்.

இதன் செய்முறை அடிப்படையில், இதனை இரு வகைகளாக பிரிக்கலாம். அவிக்காத கோதுமை மாவிலும் செய்யலாம். அவித்த கோதுமை மாவிலும் செய்யலாம். அவிக்காத கோதுமை துரித உணவு தயாரிப்பு முறையாகும். அவித்த மாவில் செய்தால் வெளிப்புறம் கூடுதல் மொறு மொறுப்புடனும் உட்புறம் தின்மையாகவும் இருக்கும்.

காலை/ மாலை அல்லது தேநீர் இடைவேளைகளில் சப்புக் கொட்டி சுவைக்கும் சமோசாக்களை நீங்களும் செய்து கொடுத்து குடும்பத்தினரிடமிருந்து சபாஷ் பெறுங்கள்.






# மாதரை மிரட்டும் மார்பக புற்றுநோய்!

## காரணங்களும், கண்டறிதலும்.

**பெண்களை** மிரட்டும் நோய்களில் உலகளவில் முதன்மையானது மார்பகப் புற்றுநோய்.இலங்கையில் ஆண்டுதோறும் 17 ஆயிரம் புற்றுநோயாளிகள் புதிதாக இனங்காணப்படுவதாகவும் அவற்றில் 15 சதவீதமானோர் மார்பக புற்றுநோயாளிகள் என்றும் சுகாதார அமைச்சின் தேசிய புற்று நோய் தடுப்பு பிரிவு கூறுகின்றது அதே போன்று இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 80,000 பெண்களுக்கு மேல் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்படுகிறார்கள். அதில் 50 சதவிகிதம் பேர் மரணத்தைத் தழுவுகின்றனர் என்கின்றன புள்ளிவிவரங்கள். ‘இது நமக்கெல்லாம் வராது’ என்று நினைக்கும் பெண்களின் அறியாமையே, இறப்பு விகிதம் அதிகரிக்க முக்கியக் காரணம்.

### ஏன் ஏற்படுகிறது?

மார்பகப் புற்றுநோய் ஏன் ஏற்படுகின்றது என்பதற்கு தெளிவான ஆய்வு முடிவுகள் இல்லை. செல்களின் ஏற்படக்கூடிய இயல்புக்கு மீறிய, அபரிமிதமான வளர்ச்சியையே புற்றுநோய் என்கிறோம். ஆரம்பத்தில் மார்பக செல்லில் தோன்றிய மாற்றம், நிணநீர் முடிச்சு வழியாக உடலில் எங்குவேண்டுமானாலும் பரவலாம். பொதுவாக மார்பகப் புற்றுநோய் ஆரம்பத்தில் பால் சுரப்பிகளில் ஏற்படுகிறது. மற்ற செல்களிலும் ஏற்படலாம்.



### யாருக்கெல்லாம் வர அதிக வாய்ப்புள்ளது?

பொதுவாக எல்லா வகை புற்றுநோய்களிலுமே, வயது அதிகமாக அதிகமாகத்தான் அதற்கான வாய்ப்புகளும் அதிகமாகும். அந்த வகையில் மார்ப்பகப் புற்றுநோய், 40 வயதைக் கடந்த பெண்களுக்கு வர வாய்ப்புகள் அதிகம்.

பாலூட்டாத பெண்கள் மார்பகப் புற்றுக்கு இலக்காகலாம். காரணம், பாலூட்டுவதால் புற்றுநோய்க்குக் காரணமாகும் சில ஹார்மோன்களின் அளவு உடலில் கட்டுக்குள் வைக்கப்படும். பாலூட்டும் காலம் முடியும் போது, டி.என்.ஏ சிதைவுக்கு உட்பட்ட மார்பகச் செல்கள் தாய் உடலில் இருந்து விடுபட்டிருக்கும். அவை எதிர்காலத்தில் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பைக் குறைக்கும்.

அதிவிரைவில் பூப்படைவது, புகை மற்றும் மது பழக்கம், உடல் பருமன், மரபியல் போன்றவை மார்பகப் புற்றுநோய்க்குக் காரணமாக இருக்கலாம். பொதுவாக 10 முதல் 15 சதவிகித மார்பகப் புற்றுநோய் மரபியல் காரணமாக வருகிறது.

### புற்றுநோய் கட்டியா எனக் கண்டறிவது எப்படி?

மார்பகத்தில் கட்டி அல்லது மாற்றங்கள் ஏதேனும் தென்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுகி பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

மார்பகத்தில் கட்டி உள்ளதா என்பதை மாதத்துக்கு ஒரு முறையாவது சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

### அறிகுறிகள்

மார்பகத்தில் தொடர்ந்து வலி, அசௌகரிய உணர்வு ஏற்படுதல்.

மார்பகத்தின் அளவு, வடிவத்தில் திடீர் மாற்றம் ஏற்படுதல்.

மார்புக்காம்பு அல்லது வெளிச்சதை பகுதி சிவந்து போகுதல். உட்பக்கமாக இழுத்துக் கொள்ளுதல் அல்லது வீக்கமடைதல்.

சிலருக்கு மேற்கண்ட அறிகுறிகள் தென்பட்டாலும் வலி மட்டும் இருக்காது. வலி இல்லையென்று அலட்சியமாக இருக்காமல், அறிகுறிகளில் ஒன்றிரண்டு தென்பட்டாலும் உடனே மருத்துவரிடம் செல்ல வேண்டும். மருத்துவர் மேமோகிராம், பயாப்ஸி உள்ளிட்ட சில பரிசோதனைகளை செய்து அது புற்றுநோய்தானா என்பதை உறுதி செய்வார்.

### நோயின் நான்கு நிலைகள்

முதல் நிலை  மார்பகத்தில் புற்றுநோய் செல்கள் உருவாகி, கட்டிகள் அல்லது வீக்கத்தை ஏற்படுத்தும்.

இரண்டாம் நிலை  மார்பகக் காம்புப் பகுதியில், மார்பகத்தின் அளவில் மாற்றங்களை ஏற்படுத்தும்.

மூன்றாம் நிலை  மார்பகத்தைச் சுற்றியுள்ள தசைப் பகுதிகள் முழுவதும் பாதிக்கப் பட்டிருக்கும்.




சோபிகா கிருஷ்ணமூர்த்தி

நான்காம் நிலை மார்பகம் முழுதாகப் பாதிக்கப்பட்டு, கல்லீரல், நுரையீரல் என மற்ற உறுப்புகளுக்கும் புற்றுநோய் செல் பரவியிருக்கும்.

பொதுவாக 40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள்தான், மார்பக பரிசோதனைக்கு வருவர். தற்போது 30 வயதைத் தாண்டிய பெண்களே கூட பரிசோதனை செய்துகொள்ள வருகின்றனர். இதனால், இன்னும் முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சை அளிக்க வசதியாக இருக்கிறது.

12 ஆம் பக்கம் பார்க்க...









# மாதுரை மிரட்டும் மார்பக புற்றுநோய்!

## காரணங்களும், கண்டறிதலும்

மார்பக புற்றுநோய் எல்லோருக்கும் ஒரே மாதிரியான பாதிப்பை ஏற்படுத்துவது இல்லை. அவரவர் உடல்நிலையைப் பொருத்து, சிலருக்கு மிக வேகமாக பரவும். சிலருக்கு வருடக்கணக்கில் கூட மெதுவாக பரவும். எனவே, ஆரம்ப நிலையிலேயே கண்டறிவது மிகவும் நல்லது.

### சிகிச்சைகள்

புற்றுநோய் எந்த நிலையில் கண்டறியப்படுகிறது, புற்றுநோய் செல்களின் எண்ணிக்கை, நோயின் தீவிரம் என இவற்றின் அடிப்படையில் அறுவை சிகிச்சை, ரேடியேஷன், கீமோதெரப்பி, ஹார்மோன் தெரப்பி போன்ற சிகிச்சைகள் தீர்மானிக்கப்படும்.

ஆரம்ப நிலையில் கண்டறியப்பட்டால் மார்பகத்தை அகற்ற வேண்டிய தேவை இருக்காது. முழுவதுமாகக் குணமாகலாம். சிலருக்கு மார்பகத்தை அகற்ற வேண்டிய நிலையும் ஏற்படலாம். சிகிச்சைக்குப் பின்னர் மார்பகப் புற்றுநோய் சிலருக்கு மீண்டும் வர வாய்ப்பு உள்ளது. எனவே, இவர்கள் தொடர் மருத்துவ பரிசோதனை செய்துகொள்ள வேண்டியது மிகமிக அவசியம்.

### வரும் முன் காப்போம்!

சுயபரிசோதனையில், ஆரம்ப நிலையில், அறிகுறிகளின் மூலம் கண்டறியக்கூடிய ஒரே புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் மட்டுமே என்பது ஆறுதலான விஷயம். அதனால் மாதம் ஒருமுறை சுயபரிசோதனை செய்வது நல்லது.

### மார்பக புற்றுநோய் வராமல் தடுக்க

30 வயதுக்கு பிறகு ஆண்டுக்கு ஒருமுறை மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

தாய்மார்கள் குழந்தைகளுக்கு குறைந்தது ஓராண்டு வரை கட்டாயம் பாலூட்ட வேண்டும். உயரத்துக்கு ஏற்ற எடை என்பதற்கு கவனம் கொடுக்க வேண்டும்.

மாதவிலக்குக்கு இடைப்பட்ட நாட்கள், கர்ப்பகாலம், பாலூட்டும் காலம் ஆகிய காலங்களில் ஏற்படும் இயல்பான மாற்றங் களைத் தெரிந்துவைத்துக் கொண்டால்தான், இயல்புக்கு மாறான மாற்றங்கள் தோன்றினால் அதை உடனே உணர முடியும்.



தக்காளி, கரட், கருப்பு திராட்சை, மாதுளை, குடைமிளகாய், முட்டைக்கோஸ் பப்பாளி, புரொகோலி, பூண்டு ஆகிய ஆன்டிஆக்ஸிடன்ட் நிறைந்த புற்றுநோய்க்கு எதிரான உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

தினமும் உணவில் குறைந்தது மூன்று வகையான, ரசாயனக் கலப்பில்லாத காய்கறி, பழங்கள் அவசியம் இடம் பெற வேண்டும்.

பெண் குழந்தைகளுக்கு பதப்படுத்தப்பட்ட, பாக்கெட் உணவுகள், துரித உணவுகளைத் தவிர்த்தாலே, அவர்கள் அதிவிரைவாகப் பூப்பெய்துவதை தவிர்க்க முடியும்.

மிளகாய்த் தூள், மசாலா வகைகளில் சிவப்பு நிறத்தை கூட்டகூடான் ரெட் டை கலக்கப்படுகிறது. இது புற்றுநோயை ஏற்படுத்தக்கூடியது. எனவே, வீட்டிலேயே மசாலாப் பொருட்களைத் தயாரித்து பயன்படுத்துவது நல்லது.

ஒருமுறை சமையலுக்குப் பயன்படுத்திய எண்ணெயை மீண்டும் சமையலுக்குப் பயன்படுத்தக் கூடாது.

தினசரி உடற்பயிற்சி செய்ய வேண்டும். இதனுடன் யோகா, தியானம் செய்வது உடலை ஃபிட்டாகவும், ஹார்மோன்களை சீராக சுரக்கவும் வைக்கும்.

### சுயபரிசோதனை செய்துகொள்வது எப்படி?

கண்ணாடி முன் நின்று மார்பகங்களின் அளவு, நிறம், வடிவத்தில் எதாவது மாற்றம் இருக்கிறதா என்று கவனிக்கவும்.


மார்பகங்களை வலது மற்றும் இடது என இரு பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு, மார்பகத்தை தடவிப் பார்த்து ஏதேனும் கட்டி, வலி தெரிகிறதா என பரிசோதிக்க வேண்டும். இதனுடன் அக்குள் பகுதியையும் சேர்த்து பரிசோதிக்கலாம்.






உட்கார்ந்த நிலையிலும் மல்லாந்து படுத்த நிலையிலும் ஆள்காட்டி விரல் மற்றும் மோதிர விரல்களால் மார்பகங்களை அழுத்தி கட்டிகள் இருக்கிறதா என பார்க்கலாம்.

மார்பக காம்பை அழுத்தி பார்க்கும்போது, ஏதாவது திரவம் அல்லது ரத்தம் வருகிறதா என கவனிக்க வேண்டும்.

**குறிப்பு:** மார்பகப் புற்றால் பாதிக்கப்பட்டவர்களில் பலர், ‘நான் சுயபரிசோதனை செய்தேன், ஆனாலும் எனக்கு எதுவும் தெரியாமல் போய்விட்டதே’ என்று வருந்துவார்கள். எனவே, 30 வயதைக் கடந்த பெண்கள், வருடத்துக்கு ஒருமுறை கட்டாயமாக பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.








# ஊடக பேனைகளின் உயிர்வாழும் உரிமை!




## ஊடகவியலாளர்களுக்கெதிரான குற்றங்களை தடுத்தல்...

**ஜனநாயகத்தின்** நான்காவது தூண் எனுமளவிற்கு ஊடகங்கள் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திவிட்டது என்றுதான் கூறவேண்டும்.அதாவது ஒவ்வொரு நாட்டிலும் அரசிற்கும் மக்களுக்குமிடையிலே பாலமாய் இருந்து அந்தந்த நாடுகளின் சமநிலையை ஊடகங்களே பாதுகாத்து வருகின்றன. அவ்வகையில் முக்கியத்துவம் பெற்று விளங்கும் ஊடகங்களில் பணியாற்றுபவர்களின் பாதுகாப்பு,மரியாதை என்பன பெரும்பாலான நாடுகளில் கேள்விக்குறியாகவே உள்ளது. இவற்றினை நிவர்த்தி செய்யும் வகையிலே ஊடகவியலாளர்களுக்கு எதிராக குற்றமிழைத்தவர்களை தண்டனையின் பிடியில் இருந்து விடுவித்தலை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கில், ஐ.நாவின் பொதுச்சபையானது 2013 ம் ஆண்டு தொடக்கம் நவம்பர் மாதம் 2ம் திகதியை ஊடகவியலாளர்களுக்கான குற்றங்களை தடுப்பதற்கான சர்வதேச தினமாக பிரகடனப்படுத்தியது. பிரான்ஸ் நாட்டை சேர்ந்த இரண்டு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமையை பிரதானமாக கொண்டு இந்த நாள் உலகளவில் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஜனநாயக நாடுகள் என அடையாளப்படுத்தப்பட்ட பல நாடுகளில் கூட ஊடகச்சுதந்திரம் என்பது அற்றுப்போய் நாளுக்கு நாள் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து செல்லும் அதேவேளை அக்குற்றங்களை புரிவோர்க்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது .எடுத்துக்காட்டாக இலங்கையை நோக்கின்,






★ 2005 ஏப்ரல் 20ல் ஊடகவியலாளர் தராக்கி சிவராம் படுகொலை செய்யப்பட்டமை .

★2008 மே 22 நேஷன் பத்திரிகை ஆசிரியர் கீத்நோயர் கடத்திச் சென்று தாக்கப்பட்டமை

★2009 ஜூன் 8 சிரேஸ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை.

★2010 ஜனவரி 6 தெபானம சிரச கலையகம் மீது குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது .

★2010 மார்ச் 22 சிரச ஊடக வலையமைப்பின் தலைமையகம் மீது இடம்பெற்ற தாக்குதலில் ஊழியர் சிலருக்கு காயம் ஏற்பட்டமை.

★2009 மார்ச் 25 யாழ்ப்பாணத்திலுள்ள உதயன் பத்திரிகை அலுவலகம் மீது கைக்குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் 2013ல் மீண்டும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

போன்றன சில எடுத்துக்காட்டுகள் மாத்திரமே. இவற்றிற்கு இன்றுவரை நீதி கிடைக்கப் பெறவில்லை என்பது மன வருத்தத்திற்குரியது விடயமே ஆகும்.

2009 இல் லசந்த படுகொலை செய்யப்பட்டமைக்காக நீதியை நிலை நாட்டுவதற்கான சர்வதேச முயற்சிகளில் தொடர்ச்சியாக விசாரணைகள் இன்றளவும் இடம்பெற்றுவருகின்றன . 2019 இல் அமெரிக்காவில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதுடன் 2021ல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் குழுவிடம் மனு கையளிக்கப்பட்டது ஆனாலும் இன்று வரை அவரது மரணத்திற்கும் இன்னும் பல ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கும் நீதி கிடைக்கவில்லை .

கைது, கொலை ,காணாமல் ஆக்கப்படுதல் என்பதற்கும் அப்பால் உலகளாவிய ரீதியில் பல பெண் ஊடகவியலாளர்கள் அதிகளவில் இணைய வன்முறைகளை எதிர்கொள்பவர்களாக இருக்கின்றார்கள் என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது . இந்திய பத்திரிகையாளரும், மனித உரிமை செயற்பாட்டாளருமான கௌரி லங்கேஷ் 2017 செப்டம்பர் 5 இனம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்பு



இணையவழித் தாக்குதல்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மோல்டிஸ் ஐ சேர்ந்த புலனாய்வு ஊடகவியலாளர் டபின் கலிசியா 2017 ஒக்டோபர் 16 அன்று குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட முன் இணையம் ஊடாக வன்முறைகளை எதிர் கொண்டு இருந்தார்.

இந்தியா ஊடகவியலாளரான ராணா அயூப் 2018ம் ஆண்டு ஏப்ரல் ட்விட்டரில் இணையத் தாக்குதலை எதிர்கொண்டார் . போலி வீடியோ மற்றும் 2500க்கும் மேற்பட்ட போலி ட்விற்கள் வேகமாக பரவியதுடன் அவருடைய தொலைபேசி இலக்கம் மற்றும் முகவரி உள்ளிட்ட தனிப்பட்ட தகவல்கள் அச்சுறுத்தும் நோக்கில் பரப்பப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.



புஸ்பராசா
**கோபிகா**

யுனெஸ்கோ மற்றும் ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச நிலையம் [ICJF] ஆகியோர் இணைந்து 113 நாடுகளைச் சேர்ந்த 714 பெண் ஊடகவியலாளர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 73% பெண் ஊடகவியலாளர்கள் இணையரீதியான , பாலியல் ரீதியான வன்முறைகள் , மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊடக சுதந்திர அமைப்புக்கள், ஊடகவியலாளர் சங்கங்கள் போன்றன தொடர்ச்சியாக ஊடகவியலாளர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்ற போதிலும். ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களும் மறுபுறம் இடம்பெற்ற வண்ணமே உள்ளது .ஏனெனில் ஒருமுறை கூட அவ்வாறு குற்றம் இழைத்தவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படவில்லை. இதனால் வன்முறைகள் தொடர்ச்சியாக இடம் பெறவே செய்கின்றன . அதேநேரம் ஊடகவியலாளர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் உண்மைக்குப் புறம்பான செய்திகளை தரக்கூடிய சூழலும் ஏற்பட வாய்ப்புண்டு.

வருடந்தோறும் சிறந்த ஊடகவியலாளர்களுக்கான உயர் விருதான புலிட்சர் என்பது வழங்கப்பட்டு வருகிறது. இதை வருடந்தோறும் யாரோ ஒரு ஊடகவியலாளர் பெற்றுக்கொள்கிறார். அதேநேரம் இந்த விருதை பெற்றுக் கொள்ள தகுதி வாய்ந்த எத்தனை ஊடகவியலாளர்கள் உயிர் பறிக்கப்பட்டுள்ளது?

நாட்டிற்கும், மக்களுக்கும் ,நல்லது செய்ய நினைத்த ஊடகவியலாளர்களை இல்லாமலாக்கியோர்களுக்குரிய தண்டனை ஏன் கிடைக்கப் பெறுவதில்லை?

இவ்வாறு உலக அளவில் வாழும் ஒவ்வொரு ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாகவே காணப்படுவதால் ஜெனிவா உடன்படிக்கையில் ஊடகவியலாளர்கள் பாதுகாப்பு பற்றியதொரு உடன்பாடு குறிப்பிடப்பட்டுள்ளது .அதாவது, ஆயுத மோதலொன்றின் போது சகல மனித உயிர்களும் மதிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய ஜெனீவா உடன்பாட்டில் ஊடகவியலாளர்களுடைய மனித உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என கூறப்படுவதுடன் அவர்கள் ஏனைய பொது மக்களைப் போன்று வன்முறை,மிரட்டல்,கொலை,சிறைவைப்பு,சித்திரவதை போன்றவற்றிலிருந்தும் பாதுகாக்கப்படவேண்டும் என குறிப்பிடப்படுகிறது.

சட்டபூர்வமான அறிக்கை 1949 ஆம் ஆண்டு தொடக்கம் காணப்படுவதோடு பல நாடுகளினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இச்சட்டங்கள் சர்வதேச மனிதாபிமான சட்டங்களிலும் பங்காக உள்ளன .

இவ்வாறு சர்வதேச ரீதியிலான சட்டங்கள் உடன்பாடுகள் போன்றவற்றில் கூட ஊடகவியலாளர்களின் நலன்கள் பாதுகாப்பு பற்றி குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அவை எதுவுமே நடைமுறைக்கு சாத்தியமற்ற ஒன்றாகவே காணப்பட்டு வருகின்றன. இந்நிலை மாறும் பட்சத்திலேயே உலகளாவியரீதியில் ஜனநாயகத்தின் விம்பத்தை காணமுடியும்.

‘உண்மைகள் ஒருபோதும் சாவதில்லை’ எனக் கூறிக்கொண்டு, அந்த உண்மைகளை உலகுக்கு உணர்த்த போராடிவரும் உயிர்களுக்கு உத்தரவாதம் கொடுக்க முடியாத ஒரு நிலையில் வாழும் நம் மத்தியில் உண்மையும், நீதியும் நிச்சயம் மடிந்து போகும் என்பதில் துளியளவும் ஐயமில்லை .







# நரகமாகி வருகிறதா நகரங்கள்?

**ஒரு** நாட்டினுடைய சமூக வளர்ச்சியின் தனித்துவமான பிரதிபலிப்பே நகரமயமாக்கல் ஆகும்.

அந்தவகையில் ஒட்டுமொத்த சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காக நகர்புறங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை சேவைகளிற்கான முக்கியத்துவத்தை அடையாளம் கண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் 2013ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் திகதி உலக நகரங்கள் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. அதற்கமைய 2014ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஒக்டோபர் 31ஆம் திகதி வெவ்வேறு கருப்பொருள்களின் கீழ் உலக நகரங்கள் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அதன்படி இந்த வருடத்திற்கான கருப்பொருள், 'உலகம் முழுவதும் செல்ல, உள்ளூர் நடவடிக்கை (Act local to go global)' என்பதாகும்.



சந்திரசேகரம்
சாரிஷா

உலகளாவிய நகரமயமாக்கல் தொடர்பில் சர்வதேச சமூகத்தினர் கொண்டுள்ள ஆர்வத்தை மேம்படுத்தல், வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்ளல் மற்றும் நகரமயமாக்கலின் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துதல் போன்ற நிலையான நகர்ப்புற அபிவிருத்தியில் பங்களிப்பு செய்தல் என்பன இத்தினத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுவாக மக்களின் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய இடங்களிலேயே நகராக்கம் இடம்பெறுகின்றது. உணவு உற்பத்தி, போக்குவரத்து, தொடர்பாடல், கல்வி, சுகாதார வசதிகள் போன்றன நகரங்களில் சிறப்படைந்து காணப்படுகின்றது. இத்தகைய தேவைகளுக்காக மக்கள் நகரங்களை நோக்கி நகர்கின்றனர். இதனால் பல்வேறுபட்ட பிரச்சினைகளும் உருவாகிறன.



### 1. இடநெரிசல் பிரச்சினை

நகரமயமாக்கல் காரணமாக எழக்கூடிய பிரதானமான ஒரு விளைவாக இட நெரிசல் பிரச்சினை உள்ளது. இப்பிரச்சனையானது அதிகளவில் வளர்முக நாடுகளில் இடம்பெறுகின்றது. இந்தியா, சீனா போன்ற நாடுகளில் அதிகளவிலான மக்கள் தமது தேவைகளினை பூர்த்தி செய்து கொள்வதற்காக நகர் புறங்களில் தமது குடியிருப்புகளினை அமைத்து கொள்கின்றனர். இதனால் ஒரு சதுர கிலோமீட்டர்க்குக்கு வாழ்கின்ற மக்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றது. இதன்போது இடநெரிசல் ஏற்படுகின்றது.



### 2. வீட்டு வசதி பிரச்சினை

நகரின் இடப்பரப்பினை மீறி மக்கள் தொகை காணப்படுமிடத்து மக்களிற்கு வாழ்வதற்கு வீடுகள் இல்லது போகின்ற நிலைமைகள் ஏற்படுகின்றது. இப்பிரச்சனை காரணமாகவே வீதியோர சேர்வுகள், குடிசைகள், கொட்டில்கள் என்பனவற்றில் மக்கள் வாழும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். கொழும்பு நகரில் உள்ள ஏறத்தாழ 50% ஆனோர் சிறு குடிசைகளில் வாழ்வதாக கூறப்படுகின்றது. உலகில் உள்ள மையப்பகுதிகளிலும், புறநகர் பகுதிகளிலும் அமையப்பெற்ற சேரிகளில் சுமார் ஒரு பில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் வாழ்வதாக ஐக்கிய நாடுகள் சபை கூறுகின்றது. இதில் மூன்றாம் மண்டல நாடுகளில் வாழ்வோரில் 1/3 பகுதியினர் தமக்குரிய வாழ்விட வசதியினை இழந்து காணப்படுகின்றனர்.

### 3. நகர விரிவு

இயற்கை அதிகரிப்பினாலும், இடப்பெயர்வினாலும் நகர்ப்புற சனத்தொகை அதிகரிக்கின்றது. இதன் காரணமாக மக்களின் தேவைகளினையும், சேவைகளினையும் பூர்த்தி செய்யும் பொருட்டு மருத்துவம், கல்வி, சுகாதாரம் போன்ற சமூக சேவைகளும், வீதிகள், வதிவிடங்கள், கட்டிடங்கள் போன்றன அமைப்பதன் மூலம் நகரங்கள் விரிவுபடத்தொடங்கின. இதனால் மேய்ச்சல் நிலங்கள், விவசாய நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. அத்துடன் சதுப்பு நிலங்கள், கண்டல் தாவரங்கள், புதர்கள், காடுகள் அழிக்கப்படுகின்றன. குறிப்பாக கொழும்பில் கோட்டை, கொலன்னாவை, தெஹிவளை பகுதியில் வீதி விஸ்தரிப்பு நடவடிக்கைகளினால் கரையோர பகுதிகளில் மக்களுக்கு இடத்தினை கொடுத்ததால் சூழல் சார் சீர்கேடுகள் ஏற்படுகின்றன.



### 4.சேரிகளின் உருவாக்கம்

இன்றைய உலகின் முக்கிய பிரச்சனையாக சேரிகளின் உருவாக்கம் காணப்படுகின்றது. நகர சனத்தொகை அதிகரிப்பினால் வறிய மக்கள் சேரிகளில் வாழ்கின்றனர். குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் இவ்வாறான பிரச்சனை தோன்றுகின்றது. இங்கு வாழும் மக்கள் நீர் பற்றாக்குறை, கழிப்பிட வசதி இன்மை போன்றன காணப்படுகின்றது. பாகிஸ்தானில் 1.8 மில்லியன் மக்களும், மும்பையில் 1 மில்லியன் மக்களும், டெல்லியில் 18151231 மக்களும், கொல்கத்தாவில் 89873 மக்களும், ஹைதராபாத்தில் 626849 மக்களும், ரியோடி ஜெனிரோவில் 70000 மக்களும் சேரியில் வாழ்கின்றனர்.

### 5. குடிநீர் பிரச்சனை


நகராக்கத்தால் மக்களின் அன்றாட தேவையை நிறைவேற்றும் குடிநீரானது தட்டுப்பாடாகவே உள்ளது. சென்னையில் குடிநீர் தேவை 55 மில்லியன் கலன்களாகும். இலங்கையில் 30% மக்கள் நீரினால் ஏற்படும் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுதவிர சீனாவில் வட ஷன்ஷி மாகாணத்தில் 3 மில்லியன் மக்கள் நீர் பற்றாக்குறையினால் பாதிக்கப்படுகின்றனர். இந்தியாவில் 12 மாநிலங்களில் 130 மில்லியன் மக்களும், பாகிஸ்தானில் 3 மில்லியன் மக்களும் நீர் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தரவுகள் கூறுகின்றன.




### 6. சுகாதார பிரச்சனை

பொதுவாக வளர்முக நாடுகளில் சேரி புறங்களில் வெள்ளப்பெருக்கு நேரங்களிலும், மழை நேரங்களிலும் அங்கங்கே நீர் பள்ளங்களில் தேங்கி நிற்கின்ற சந்தர்ப்பம் காணப்படுகின்றது. மற்றும் குப்பைகள் கொட்டுவதாலும், தூசு துணிக்கைகளினாலும் வாந்திபேதி, கொலரா, யானைக்கால் நோய், பெரிபெரி, நெருப்பு காய்ச்சல் போன்றன ஏற்படுகின்றது. குறிப்பாக இதனை டாக்கா, மொன்றிவிடியோ, கல்கத்தா, பீஜிங், சியோல் போன்ற இடங்களில் அவதானிக்கலாம்.

15 ஆம் பக்கம் பார்க்க...



# நரகமாகி வருகிறதா நகரங்கள்?




### 7. ஒலி மாசடைதல்

ஒலி என்பது முக்கியம் பெற்ற ஒன்றாக காணப்படுகின்றது. இது நகர்புறங்களில் பெருகியதனால் அது செவிப்புலனுக்கு தீங்கு விளைவிக்கின்றது. குறிப்பாக ஒலிபெருக்கிகள், வானொலி, தொலைக்காட்சி, மோட்டார் வாகனங்கள், புகையிரதங்கள், ஜெட் விமானங்கள், தொழிற்சாலை இயந்திரங்கள், பின்பிறப்பாக்கிகள், கட்டிட இயந்திரங்கள் என்பவற்றின் மூலம் பலமடங்கு ஒலி மாசடைகின்றது. மனிதன் ஆரோக்கியத்துக்கும், அமைதிக்கும் தரும் ஒலி அழுத்தம் 25 45 Decibil அலைகளாகும். ஒலி அழுத்தம் 4060 Decibil ஆயின் சமிபாட்டு தொகுதியினை பாதிக்கும். 60–80 ஈஹுஞ்டிஞு டிடூ ஆயின் நரம்பு மண்டலத்தினை பாதித்து கோபம், வன்முறை, மனநோய் ஏற்படுத்தும். இவ்வாறான ஒலி மாசடைவினால் பிரச்சனைகள் தோன்றுகின்றன.

### 8. சமூக விரோத நடவடிக்கைகள்

நகரங்களினை சென்றடைந்தவர்கள் போதுமான வருமானம் அற்ற நிலையில் தமக்கான வருமானம் தேடும் பொருட்டு சமூக விரோத செயல்களில் ஈடுபடுகின்றனர். குறிப்பாக



போதை பாவனை, ஆட்கடத்தல், கொலை செய்தல், களவு, விபச்சார நடவடிக்கை மேற்கொள்ளல் ஆகியவற்றினை செய்கின்றனர். இதனை அமெரிக்கா, மெக்சிகோ, கொலம்பியா, வெனிசுவேலா ஆகியவற்றில் அவதானிக்கலாம். இதுதவிர இலங்கை இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தோனேசியா போன்ற நாடுகளின் நகரங்களில் விபசாரம் முதன்மை நடவடிக்கையாக உள்ளது. மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் எயிட்ஸ் ஊசிகளினை காட்டி வழிப்பறிகொள்ளைகள் இடம்பெறுகின்றது.

இவை தவிர, சூழல் மாசடைதல்,வேலையின்மை,நகர வெப்ப தீவுகளின் உருவாக்கம்,போக்குவரத்துக்கு நெரிசல், அரசியல் உட்பூசல்கள், இன ஒதுக்கல் பிரச்சனைகள் என பலவாறான எதிர்மறை விளைவுகளே நகரமயமாக்கலினால் இடம் பெற்று வருகின்றன.

### நிலைபேறான அபிவிருத்தி திட்டமிடல்

ஆகவே இத்தகைய பிரச்சனைகளை சரி செய்ய சிறந்த மற்றும் நிலைபேறான நகரத்திட்டமிடலை உலகளாவிய ரீதியில் மேற்கொள்ள வேண்டும். மேலும் இதற்கான நடவடிக்கைகளை அனைத்து நாடுகளும் உள்ளூர் மட்டத்தில் செயற்படுத்தும் போதே சிறந்த பயனை அடைய முடியும். அதற்கென நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை ஒவ்வொரு நாடும் சிறப்பாக முன்னெடுத்தல் வேண்டும். இந்த நிலைபேறான அபிவிருத்தி இலக்கானது, நகர மற்றும் மனித குடியிருப்புக்களை உள்ளீர்த்தல், பாதுகாப்பு, நெகிழ்திறன் மற்றும் பேண்தகு தன்மையாக மாற்றுதல் என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. அதாவது, 2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் பாதுகாப்பானதும் போதுமானளவு கொள்வனவு சக்திக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய வீட்டுவசதி கிடைப்பதை உறுதிப்படுத்தல்.பாதுகாப்பான போக்குவரத்து கட்டமைப்பு வசதிகளை 2030 இல் அனைவருக்கும் வழங்குதல், வீதிப்பாதுகாப்பை மேம்படுத்தல் மற்றும் பொது



போக்குவரத்து சேவைகளை மேம்படுத்தல். 2030 ஆண்டாகும் போது பேண்தகு நகரமயமாக்கலை மேம்படுத்தல். உலகில் பண்பாட்டு மற்றும் இயற்கை மரபுரிமைகளை பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் முயற்சிகளை பலப்படுத்தல். வளியின் தரம், கழிவு முகாமைத்துவம் தொடர்பில் விசேட அக்கறையுடன் நகரங்களில் தனிநபர் சுற்றாடல் தாக்கத்தை 2030 ஆம் ஆண்டளவில் குறைத்தல்.வள வினைத்திறன், உள்ளீர்க்கப்படும் தன்மை, காலநிலை மற்றங்களைத் தடுத்தல், இயைபாக்கம் அடைதல் மற்றும்அணர்த்தங்களிக்கு தாக்குப்பிடித்தல் போன்ற விடயங்கள் தொடர்பான கொள்கைகள் மற்றும் திட்டமிடல் மேற்கொள்வதில் கவனமெடுத்த நகர்சார் மனித குடியிருப்புக்களின் தொகையை 2030 ஆம் ஆண்டளவில் அதிகரித்தல் என்பன இதன் இலக்குகளாகும்.





எனவே நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளை அடைய ஒவ்வொரு நாடும் சிறந்த கொள்கைத் திட்டமிடல்களை மேற்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும். ஆனால் இவற்றை மக்களின் பங்களிப்பு இன்றி வெற்றிகரமாக செயற்படுத்த முடியாது. உள்ளூர் மட்டத்தில் ஒவ்வொருவரும் தமது பொறுப்புக்களை இனம்கண்டு நகரங்களை சுத்தமாக பேணுவதுடன் இவைசார்ந்த அரசின் சட்ட திட்டங்களுக்கும் மதிப்பளித்துச் செயற்படுதல் வேண்டும். மேலும் சூழலுக்கு தீங்கிழைக்கும் பொருட்களின் பாவனைகளை தவிர்த்தல், மீள் உருவாக்கம், மறுசுழற்சி போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என ஒவ்வொருவரும் பிரதேச ரீதியில் நகர அபிவிருத்தி திட்டங்களை சிறப்பாகச் செயற்படுத்தும் போதே உலகளாவிய பயனைப் பெற்றுக் கொள்ள முடியும்.





# பாழாகும் யாழின் இளைய தலைமுறை!



பி.மாணிக்கவாசகம்

**சமூக** விரோதச் செயற்பாடுகள் சமுதாயத்தைச் சீரழிக்க வல்லவை. எனவேதான் அவற்றை இல்லாதொழிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. மது பாவனை, போதைப் பொருள் நுகர்ச்சி, விபச்சாரம் போன்றவை மோசமான சமூக விரோதச் செயற்பாடுகளாகக் கருதப்படுகின்றன. இவைகள் சமூகத்தை ஆக்கிரமிக்கும்போது சமுதாயம் நலன் கெடுகின்றது. இந்தச் செயற்பாடுகளே குடும்ப வன்முறைகள் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் கட்டுப்பாடின்றி இடம்பெறுவதற்கு வழி கோலுகின்றன.

நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருக்கின்றது. இந்தச் சூழலில் சமூக விரோதச் செயற்பாடுகள் தலையெடுப்பது, அதுவும் அளவுக்கு மிஞ்சிய வகையில் தலையெடுப்பது ஆரோக்கியமானதல்ல. இது பிரச்சினைகளை மேலும் மேலும் அதிகரிப்பதற்கே வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

நாட்டில் பணவீக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. உணவுப் பணவீக்கம், போக்குவரத்துப் பணவீக்கம் என நாளாந்த வாழ்க்கைக்கு அவசியமான அனைத்துத் துறைகளும் இந்தப் பணவீக்கத்தின் பிடியில் சிக்கித் தடுமாறுகின்றன. இந்த நிலையில் போதைப்பொருள் பாவனை குறித்த செய்திகள் அதிர்;ச்சியளிக்கும் வகையில் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன.

போதைப் பொருளாகிய கஞ்சாவிலும் பார்க்க, ஹெரோயின், ஐஸ் போதைப்பொருள் என்பன மிக வீரியம் வாய்ந்தவை. கஞ்சா இலங்கைக்குள் கடத்தி வரப்படுவது மிக சாதாரண சம்பவமாக மாறியிருக்கின்றது. குறிப்பாக வடபகுதி கடற்பரப்பின் ஊடாக இந்தியாவில் இருந்தே கேரள கஞ்சா என குறிப்பிடப்படுகின்ற கஞ்சா பெருமளவில் கடத்திவரப்படுவதாக பொலிஸ் மற்றும் கடற்படைத் தரப்பினர் வெளியிடும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கஞ்சா கடத்தலில் ஈடுபட்டவர்கள் என தெரிவிக்கப்படுகின்றவர்களுடைய உடைமைகளில் இருந்தும், உரிமை கோரப்படாத நிலையில் கரையிலும் கடலில் மிதக்கும் நிலையிலும் கஞ்சா பொதிகள் கிலோ கணக்கில் சில சந்தர்ப்பங்களில் ஐம்பது கிலோ நூறு கிலோ என்ற வகையில் படைத்தரப்பினரால் கண்டு பிடிக்கப்படுகின்றன. இதேபோன்ற பொதுப் போக்குவரத்து வாகனங்களிலும் தனியார் வாகனங்களிலும் பொதிகளில் கடத்திச் செல்லப்படும் போது பொலிசாரினால் கஞ்சா பிடிபடுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.



> **வடக்கே யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் பயன்பாடு பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் அதிகர்த்திருப்பது பற்றிய அதிர்ச்சி தரும் தகவல்கள் வெளிவந்திருக்கின்றன.**
> **பாடசாலை ஒன்றில் மயங்கி விழுந்த மூன்று மாணவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது இடம்பெற்ற மருத்துவ பரிசோதனையில் அவர்கள் போதைப்பொருள் உட்கொண்டிருந்தமை கண்டறியப்பட்டது.**



ஆயுத முரண்பாடு முடிவுக்கு வந்ததன் பின்னரான காலப்பகுதியிலேயே இந்த கஞ்சா கடத்தல் விவகாரம் படிப்படியாக சூடு பிடித்திருக்கின்றது. கஞ்சா மட்டுமல்ல. ஹெரோயின், ஐஸ் போதைப் பொருளும் நாட்டிற்குள் கடத்தி வரப்படுவது கண்டறியப்பட்டிருக்கின்றது. பெருந்தொகையிலான ஹெரோயின் போதைப் பொருள் பெரிய கொள்கலன் ஒன்றில் கொழும்புக்குக் கடத்தி வரப்பட்டதை அதிகாரிகள் கண்டு பிடித்திருந்தனர். ஆனால், அது யாரால் யாருக்கு வெளிநாட்டில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டது என்பது பற்றிய தகவல்கள் வெளியாகவில்லை. அந்த விபரத்தைப் பொலிசார் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகரிரகளினால் கண்டறிய முடியாமல் போனதா என்பது தெரியவில்லை. இந்த போதைப் பொருள் கடத்தல் சம்பவம் நாட்டில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியதுடன் மங்கி மறைந்துவிட்டது.

அவ்வப்போது தலைநகரப் பிரதேசங்களில் ஹெரோயின் கடத்தல் பற்றிய தகவல்கள் ஊடகங்களில் வெளிவருவதைக் காண முடிகின்றது. அதேவேளை தலைநகரப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் நுகர்ச்சி பரவியிருந்தமை பற்றிய அதிர்ச்சி தரும் தகவல்களும் அண்மைக் கலத்தில் வெளியாகியிருந்தன.

அதனைத் தடுப்பதற்காக மாணவர்களின் புத்தகப் பைகளை ஆசிரியர்கள் பரிசோதனை செய்கின்ற நடவடிக்கையும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் மத்தியில் பரவியிருக்கின்ற போதைப் பொருள் நுகர்ச்சி தடுத்து நிறுத்தப்பட்டு விட்டதா, அதற்கான முயற்சிகள் எந்த அளவில் இருக்கின்றன என்பது குறித்த தகவல்கள் அரச தரப்பில் இருந்து வெளியாகவில்லை.

## வடபகுதியின் நிலைமை

இந்த நிலையில் வடக்கே யாழ் மாவட்டத்தில் போதைப்பொருள் பயன்பாடு பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்திருப்பது பற்றிய அதிர்ச்சி தரும் தகவல்கள் வெளிவந்திருக்கின்றன. பாடசாலை ஒன்றில் மயங்கி விழுந்த மூன்று மாணவர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபொது இடம்பெற்ற மருத்துவ பரிசோதனையில் அவர்கள் போதைப்பொருள் உட்கொண்டிருந்தமை கண்டறியப்பட்டது.


இந்த சம்வத்தையடுத்து மாணவர்கள் பக்கம் செலுத்தப்பட்ட தீவிர கண்காணிப்பு மற்றும் கவனத்தின் மூலம் மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனை கவலை தரும் அளவில் பரவியிருப்பதை அதிகாரிகள் கண்டறிந்தனர். அதே வேளை, யாழ் போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் சென்றவர்களில் இளைஞர்கள் பலர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியிருந்தமை கண்டறியப்பட்டிருக்கின்றது.

ஒரு சம்பவத்தில் யாழ் நகரப் பாடசாலையைச் சேர்ந்த ஒரு மாணவனின் உடைமையில் இருந்த ஹெரோயின் போதைப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டிருந்தது. அதேவேளை 11 வயது மகளை, ஒரு தாயார் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுத்தியிருந்ததை அதிகாரிகள் கண்டு பிடித்திருந்தனர். சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளின் கவனத்திற்கு இந்த விடயம் கொண்டு வரப்பட்டதையடுத்து உடனடியாகச் செயற்பட்ட அந்த அதிகாரிகள் சிறுமியை மீட்டு சிறுவர் இல்லம் ஒன்றில் அடைக்கலம் தேடிக் கொடுத்திருக்கின்றனர்.

அதேவேளை அந்த சிறுமியை போதைப் பொருள் விற்பனையில்; ஈடுபடுத்திய அந்தத் தாயாரை பொலிசார் கைது செய்து விசாரணை நடத்தியதில் அவரும் அவரது கணவரும் போதைப் பொருள் கடத்தல் மற்றும் வியாபாரத்தில்; ஈடுபட்டிருந்தவர்கள் என்பதும் அவர்களுக்கு எதிராக அது தொடர்பில் வழக்குகள் பதவாகியிருக்கின்றன என்பதும் கண்டறியப்பட்டது.

இது போன்ற போதைப்பொருள் நுகர்ச்சி மற்றும் போதைப்பொருள் சிலரது உடைமையில் இருந்தமை பற்றிய தகவல்களும் ஊடகங்களில் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன.

மிகுதி 17 ஆம் பக்கத்தில்...




# பாழாகும் யாழின் இளைய தலைமுறை!

யாழ் மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை இளைஞர்கள் மத்தியில் அதிகரித்திருப்பது தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் த.சத்தியமூர்த்தி அவர் யாழ் மாவட்டத்தின் போதைப்பொருள் பாவனை நிலைமைகள் குறித்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.

போதைப்பொருள் பாவனையினால் 10 பேர் வரையில் மரணமடைந்துள்ளனர். இந்த மரணங்கள் தொடர்பில் நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் இறந்தவர்கள் போதைப் பொருள் பாவைனயில் இருந்தமை கண்டறியப்பட்டது. போதைப் பொருளினாலும், அதன் பக்கவிளைவு காரணமாகவும் இந்த மரணங்கள் சம்பவத்திருந்ததாக மருத்துவ அறிக்கையில்

கண்டறியப்பட்டிருந்தது என அவர் தெரிவித்திருக்கின்றார்.

நூலாயிரம் கிலோவுக்கும் மேற்பட்ட போதைப் பொருட்கள் பிடிபட்டிருக்கின்றன.

அதேவேளை போதைப்பொருள் பாவனை காரணமாக தனிமைப்பட்டிருத்தல் அல்லது ஒதுங்கியிருத்தல் மற்றும் உள நலப் பாதிப்பு குணங்குறிகளுடன் 15 பேர் யாழ் போதனா வைத்தியசாலையின் உளநல மருத்துவ பிரிவின் கிளினிக்குகளில் சிகிச்சை வெற்று வருவதாகவும், அவர் கூறியிருக்கின்றார். யாழ் சிறைச்சாலையிலும் போதைப் பொருள் பாவனை கண்டறியப்பட்டிருக்கின்றது. அங்கு 300 பேர் இந்தப் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதுடன் அவர்களில் பெரும்பாலானவர்கள் ஹெரோயின் போதைப் பொருள் நுகர்ச்சிக்கு உட்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளதாகவும் டாச்டர் சத்தியமூர்த்தி தெரிவித்திருக்கின்றார். இது விடயத்தில் சிறைச்சாலை அதிகாரிகள் உரிய வகையில் கவனம் செலுத்தியிருப்பதாகவும் அவர் கூறியிருக்கின்றார்.

போதைப்பொருள் விநியோகம் சடுதியாக அதிகரித்திருப்பதே சமூகத்தில் அதன் பாவனை அதிகரிப்புக்கு முக்கிய காரணம் என்பது டாக்டர் சத்தியமூர்த்தியின் கணிப்பு. முக்கியமாக கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்களிடையே ஹெரோயின் பாவனை யாழ் மாவட்டத்தில் அதிகரித்திருப்பது கண்டறியப்பட்டிருக்கின்றது. குறிப்பாக இந்த வகுப்புக்களில் பயிலும் மாணவர்கள் பரந்த அளவிலான பாடப்பரப்புக்களில் கூடிய கவனம் செலுத்துவதற்கு ஹெரோயின் பாவனை தங்களுக்குப் பெரிதும் உதவுவதாகவும், அதன் மூலம் தாங்கள் நன்றாகப் படிக்க முடியும் என்று அவர்கள் நம்புவதாகவும் போதைப்பொருள் பாவனையாளர்களுக்கான கிளினிக்குகளுக்குச் செல்பவர்களின் மூலம் தாங்கள் கண்டறிந்துள்ளதாகவும் டாக்டர் சத்திய மூர்த்தி தெரிவித்திருக்கின்றார்.

.இந்த பின்புலத்தில் 4 ஆயிரத்து 152 கிலோ



கிராம் போதைப் பொருட்கள் நாட்டிற்குள் கடத்தி வரப்பட்டபோது தங்களால் கைப்பற்றப்பட்டிருப்பதாகக் கடற்படையினர் தெரிவித்திருக்கின்றனர். கடந்த 2011 ஆம் ஆண்டில் இருந்து 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் வரையிலான காலப்பகுதியிலேயே இந்த அளவு போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

> யாழ். மாவட்டத்தில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக இராணுவத்தினர் விசேட படையணி அமைத்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக இராணுவம் அறிவித்திருக்கின்றது. யாழ். நகர மேயர் சட்டத்தரணி மணிவண்ணன் சமூகத்தின் பல்வேறு மட்டத்தினரையும் உள்ளடக்கி போதைப்பொருள் பாவனையை முறியடிப்பதற்கும், போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கான புனர்வாழ்வு நிலையம் ஒன்றை அமைத்து அவர்களைத் திருத்தி சமூகத்திற்குப் பயனுள்ளவர்ளாக மாற்றுவதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கின்றார்

அதன்படி இவற்றில் 2021 ஆம் ஆண்டில் 1268.85 கிலோ கிராம் ஹெரோயின் நாட்டிற்குள் கடத்தி வரப்பட்டிருக்கின்றது. இதுவே இதுவரையில் அதிக அளவில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருளாகப் பதிவாகியிருக்கின்றது. அத்துடன் 2018 ஆம் ஆண்டு .11 கிலோ கிராமில் தொடங்கி, இந்த வருடம் (2022) வரையில் 1081.35 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருள் நாட்டிற்குள் கடத்தி வரப்பட்டிருக்கின்றது.

அதேவேளை 2011 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த வருடம் செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி வரையில் 27 ஆயிரத்து 357.70 கிலோ கிராம்



கேரள கஞ்சா நாட்டிற்குள் கடத்தி வரப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்திருக்கின்றனர். உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட 11 ஆயிரத்து 26.91 கிலோ கிராம் கஞ்சாவும் படையினரால் கைப்பற்றப்பட்டிருக்கின்றது.

## விழிப்புணர்வு அவசியம்

போதைக்கு அடிமையாகின்றவர்களின் உடல் ஆரோக்கியம் கெடுகின்றது. உடல் இயல்புகள் மாற்றமடைகின்றன. பொல்லாத நோய்களுக்கு அவர்கள் ஆளாக நேரிடுகின்றது. எனினும் போதை தருகின்ற மயக்க நிலையும், உடல் உள செயலற்ற நிலையும் அவர்களை அடிமைப் படுத்தி அதனையே சொர்க்கமாக மாற்றிவிடுகின்றது. அந்த போதை சுகத்திற்காக மேலும்

மேலும் போதைப் பொருள் பாவனையில் ஈடுபட உந்தப்படுகின்ற அவர்கள் அதற்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்காகத் திருட்டுக்களில் தொடங்கி ஆட்களைத் தாக்கிக் கொள்ளையடிப்பதிலும் ஈடுபடுகின்றார்கள்.

போதை நிலையில் அவர்கள் மேற்கொள்கின்ற முறையற்ற செயற்பாடுகளினால் அவர்களைத் துட்டர்களாக சமூகம் அடையாளம் காண்கின்றது. போதையில் வன்முறைகளிலும் பாலியல் வன்முறைகளிலும் அவர்கள் ஈடுபடுவதனால் அவர்கள் சமூக விரோதிகளாக மாறிவிடுகின்றார்கள். இதனால் அவர்கள் சமூகத்தினால் வெறுத்து ஒதுக்கப்படுபவர்களாகவும் வேண்டத்தகாதவர்களாகவும் மாறிவிடுகின்றார்கள்.

போதையினால் அவர்களுடைய உடலில் ஏற்படுகின்ற பாதிப்புகள் எதிர்மறையான மாற்



றங்கள் என்பன அவர்களை பல்வேறு வகையான நோயாளிகளாக்கி விடுகின்றன. இதனால் வலிந்து மோசமான நோய்களைத் தேடிக்கொண்டவர்களாக வைத்தியத்துறைக்கு வீணான செலவுகளை ஏற்படுத்தி விடுகின்றார்கள். இது விரும்பத்தக்கதல்ல.

யாழ் மாவட்டத்தில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக இராணுவத்தினர் விசேட படையணி அமைத்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக இராணுவம் அறிவித்திருக்கின்றது. யாழ் நகர மேயர் சட்டத்தரணி மணிவண்ணன் சமூகத்தின் பல்வேறு மட்டத்தினரையும் உள்ளடக்கி போதைப்பொருள் பாவனையை முறியடிப்பதற்கும், போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கான புனர்வாழ்வு நிலையம் ஒன்றை அமைத்து அவர்களைத் திருத்தி சமூகத்திற்குப் பயனுள்ளவர்ளாக மாற்றுவதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கின்றார்.

போதைப்பொருள் பாவனை என்பது மிக மோசமானது. மிகவும் ஆபத்தானது. பயங்கரமானதும் கூட. எனவே பொது அமைப்புக்கள் மட்டுமல்லாமல் பாடசாலை, ஆலயம், கிராம அபிவிருத்திச் சங்கம், மகளிர் அபிவிருத்திச் சங்கம் உள்ளிட்ட அடிமட்ட அமைப்புக்கள் தமது செயற்பாட்டுப் பிரதேச ரீதியில் ஒன்றிணைந்து மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனையின் தீய விளைவுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைப் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகாமல் பாதுகாக்க முன்வர வேண்டும். சமூக மட்டத்தில் போதைப்பொருள் விநியோகத்திற்கு இடமளிக்காத வகையில் முன்னெச்சரிக்கை மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் ஒன்றிணைந்த அமைப்பு ரீதியாக செயற்பட முன்வரவேண்டியதும் அவசியம்.



# வியப்பூட்டும் விண்ணக மாயாஜாலங்கள்



**வானத்தில்** நிகழும் அதிசய நிகழ்வான சூரிய கிரகணம் செவ்வாய் மாலை நிகழ்ந்துள்ளது . பொதுவாக ஒரே ஆண்டில் இரண்டு சூரிய கிரகணம், இரண்டு சந்திர கிரகணம் நிகழும். இதில் சில கிரகணங்கள் மட்டுமே இந்தியாவிலும் இலங்கையிலும் தென்படும்.நாட்டில் சூரிய கிரகணம் தென்பட்டால் மட்டுமே கிரகண தோஷம் ஏற்படும் என்ற நம்பிக்கை இந்துகிடையே இருக்கின்றது. இந்தச் சூரிய கிரகணம் ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகள், ஆபிரிக்காவின் வடகிழக்கு நாடுகள், மேற்கு ஆசியா, வடக்கு அட்லாண்டிக் பெருங்கடல், வடக்கு இந்திய பெருங்கடல் பகுதிகளில் தென்பட்டுள்ளன. இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் இந்த சூரிய கிரகணம் தென்படும்.

கிரகணத்தின்போது ஏற்படும் சூரியனின் கதிர்வீச்சு உடலில் படும்போது பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதுபோன்ற பாதிப்புகளை தவிர்க்கவே, சூரிய கிரகணத்தின்போது, வெளியே செல்லக்கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறது. சூரிய கிரகணத்தின் போது வெறும் கண்களால் கிரகணத்தை பார்க்கக் கூடாது.

சூரியன், சந்திரன், பூமி ஆகியவற்றின் வான்வெளி கண்ணாமூச்சி (hide and seek) விளையாட்டில் சிறிது நேரம் சூரியன் ஒளிந்து கொள்வதே சூரிய கிரகணம். அதேபோல், சந்திரன் சிறிது நேரம் ஒளிந்து கொள்வதுதான் சந்திர கிரகணம். சூரியனுக்கும் பூமிக்கும் இடையே ஒரே நேர்கோட்டில் சந்திரன் கடக்கும்போது, அது சூரிய ஒளியை பூமிக்கு வராமல் மறைக்கும். அதைச் சூரிய கிரகணம் என்றும், சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே ஒரே நேர்கோட்டில் பூமி கடக்கும்போது, பூமியின் நிழல் சந்திரனை மறைப்பதை சந்திர கிரகணம் என்றும் சொல்கிறோம்.

## கிரகணம்

‘கிரகணம்’ (Eclipse) என்ற சொல்லுக்கு, ‘மறைக்கப்பட்ட’ அல்லது ‘கைவிடப்பட்ட’ என்பது பொருளாகும். ஆனால், கிரேக்க மொழியிலிருந்தும் லத்தீன் மொழியிலிருந்தும் பெறப்பட்ட இதன் வேர்ச் சொல்லான ‘Ekleipsis‘ என்பதற்கு, உண்மையான பொருள், ‘விண்கோள்கள் கருமையடைவது’ என்பதுதான்.

கிரகணம் என்பது, சூரிய ஒளியோ சந்திர ஒளியோ நம்மீது விழாமல் ஒரு மரம் நிழல்தருவது போன்ற சாதாரண நிகழ்வுதான் என்றாலும், ஊரிலும் நாட்டிலும் பெரும் பாதிப்புகளைம், அழிவுகளை ஏற்படுத்தும் தீய நிகழ்வாக, காலங்காலமாகக் கருதப்பட்டுவருகிறது

சூரியனையும் சந்திரனையும் சாத்தான், டிராகன், பாம்பு, பூதங்கள் அல்லது ராட்சத மிருகங்கள் என ஏதோவொரு தீயசக்தி விழுங்குவதால்தான் சூரிய கிரகணமும் சந்திர கிரகணமும் ஏற்படுகின்றன என்று பல ஊர்களிலும், பல நாடுகளிலும் நம்பப்படுகிறது.

தவளை விழுங்கிய சந்திரனை திரும்பப் பெறுவதற்காக வியட்நாம் பெண்கள் உலக்கை மற்றும் குழவியைக்கொண்டு ஒலியெழுப்பினர். அத்துடன், கடவுளுக்குப் பிடித்த அறுசுவை உணவைப் படைத்து வழிபட, ஹன் கடவுள் விழித்தெழுந்து தவளையை வென்றதாம். அத்துடன் தவளை விழுங்கிய நிலவையும் காப்பாற்றினார்’ என்கிறது வியட்நாமியப் பழங்கதை.

கிரகணத்தை காதல் கதையாகக் கூறுகின்றன தாய்லாந்தின் மரபுக் கதைகள்.‘பூமியின் புதல்வியான ரிலெச்சா என்ற தேவதை, ஒருமுறை



தனது பூந்தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்த்து, காதல் கொண்ட சூரிய மன்னர், அவளைத் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறார். ஆனால், நட்சத்திரக் கடவுள்களின் பொறாமையால், சூரியனின் தேர் சூரியனுடன் மலைகளில் ஒளித்து வைக்கப்பட்டதால், கிரகணம் உண்டானது. பின்பு மீண்டெழுந்த இருவரும் சூரிய சந்திரராக ஒளி தருகின்றனர்’ என்று சந்திரன் உருவான கதையையும் சேர்த்துத் தருகிறது தாய்லாந்து காதல் கதை.


இந்தியாவில் வேறுவிதமாகச் சொல்லப்படுகிறது. ‘பாற்கடலைக் கடைந்து, அமிர்தத்தை தேவர்களும் அசுரர்களும் பங்கு போட்டுக் கொண்டனர். அப்போது ஏற்பட்ட பிணக்கில் சுவர்ணபானு என்ற அரக்கனை, மோகினி வடிவில் இருந்த விஷ்ணு, தலை வேறு உயிர் வேறாகப் பிரித்தார். அப்போது, பாம்பின் தலை மற்றும் உடலைக்கொண்டு இரு உடல்களை ஒட்ட வைத்ததில் உருவானதே [சாயா கிரகங்களான] ராகு மற்றும் கேது.

தங்களது இந்த நிலைக்கு முக்கியக் காரணமான சூரிய, சந்திரர்களைப் பழிவாங்குவதற்காக பிரம்மனிடம் தவமிருந்து, ஆண்டுக்கு நான்கு முறை, சூரிய சந்திரரின் ஒளியை விழுங்கும் வரம் பெற்றனர். ஆக, கிரகணங்கள் மூலம் உலகின் பெரிய ஒளிசக்தியை ராகு மற்றும் கேது மட்டுப்படுத்தினர்’ என்கிறது ரிக் வேதம் உள்ளிட்ட இந்திய வேதங்கள். சூரியனை விழுங்கிய ராகுவை, வெடி மற்றும் வானவேடிக்கைகளுடன் வெளியேற்றுவது இன்றும் இங்கு சில சமூகங்களில் வழக்கமாக உள்ளது.

## கிரகணங்களுக்கு பல கதைகள்

மாயன் நாகரிகத்தில் மலைப்பாம்பு, சீனாவில் டிராகன், ஜெர்மனியில் வைகிங் மரபில் நரிகள், ஹங்கேரியில் ராட்சசப் பறவை. அமெரிக்கப் பழங்குடியில் கரடி, கொரியாவில் நாய் என வான்வெளியில் விழுங்கும் பல கதைகள் கிரகணங்களுக்குக் கூறப்படுகின்றன.

சூரிய கிரகணத்தைப் பற்றி பல கதைகள் உலகம் முழுவதும் பரவிக் கிடந்தாலும், அந்தக் கதைகள் கேட்பதற்கு சுவாரஸ்ஸியமாக இருந்தாலும், அறிவியல் பூர்வமாக இவற்றுள் உண்மை எதுவுமே இல்லை என்பதே யதார்த்தம்.




## அறிவியல் சாகரம்: ஆழ்ந்து முத்தெடு



இராஜேஸ்மணாளன்

வியட்னாமில்சூரியன் மற்றும் சந்திரனை தவளை விழுங்குவதால் கிரகணம் ஏற்படுவதாக நம்பினார்கள். டென்மார்கட, நோர்வே, சுவீடன், பின்லாந்து உள்ளிட்ட ஸ்கன்டநேவியன் நாடுகளில் சூரியன் மற்றும் சந்திரனை ஓநாய் கடித்து விழுங்குவதே கிரகணம் எனக் கருதப்பட்டது. கொரியா ிவல் நெருப்பை உமிழும் நாய்க் கூட்டம் சூரியனை விரட்டிச் சென்று கடிக்கும்போது , கிரகணம் தோன்றுவதாக நம்பினார்கள்..மிகப் பெரிய டிராகன் ஒன்று சூரியனைத் தின்று பசி தீர்த்து்க கொள்ளும்போது கிரகணம் ஏற்படுவதாக புராதன சீனர்கள் நம்பினார்கள்..அதனால் கிரகணம் ஏற்படும்போது, பூமியிலிருந்து நெருப்பு அம்புகளை வானில் எய்து டிராகனை விரட்ட முனைந்திருக்கிறார்கள்.

## ஆர்யபட்டாவின் விளக்கம்

கி.பி 1133–ம் ஆண்டு சூரிய கிரகணத்தின் போது, இங்கிலாந்து மன்னர் முதலாம் ஹென்றி இறந்துபோனார். இதனால், கிரகணங்கள் அரசாட்சியையே வீழ்த்தும் சக்தி வாய்ந்தது என நம்பப்பட்டது. இதைப் போலவே கிரகணத்தன்று பாபிலோனியர்கள், ஒருநாள் முதல்வரை ஏற்பாடுசெய்து, நிரந்தர மன்னரைக் காப்பாற்றினர் என்கிறது வரலாறு. அந்த ஒருநாள் முதல்வரும், நிரந்தர அரசரைப்போன்று உடை அணிந்துகொண்டு உணவு உண்டு, ஒருநாள் மட்டும் அரசாட்சி செய்யும்போது, கிரகண துர்சக்திகள் குழம்பி வெளியேறிவிடும் என்பது அவர்களது நம்பிக்கை.

இந்தியரான ஆரியபட்டாதான். தனது வானவியல் கணக்கீடுகள் மூலம், கோள்கள் பற்றிய அறிவியலை எடுத்துரைத்து பெரிய புரட்சியை ஏற்படுத்தினார். ‘உலகம் உருண்டை’ என்றும், ‘ராகு கேது விழுங்கிய சூரிய சந்திர கிரகணங்கள் வெறும் நிழல்களே’ என்றும் கி.பி.476–ம் ஆண்டே அவர் கணித்தார்.கிரகணங்கள் பற்றி எவ்வளவோ அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்டாலும், கிரகணங்கள் சார்ந்த மூட நம்பிக்கைகள் இன்றைக்கும் உலகெங்கும் இருக்கின்றன .

மூடநம்பிக்கைகள் என்றுமே சாவதில்லை. அவைஅழியா வரம் பெற்றவை.








# சங்கீதக் கதிரையைக் கைப்பற்றினார் ரிஷி சுனக்!

**இந்திய** வரலாற்றில் காலனித்துவம் இருண்டகாலமாகும். அதுவே பிரித்தானியாவின் ஒளிமயமான காலமாகும். பிரித்தானியக் காலனித்துவத்தின் மையவிசைகளிலே இந்தியா முக்கியமானதாகும். இந்தியாவின் வளங்கள் சுரண்டப்பட்டன. இந்தியர்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டது. இந்தியர்கள், மற்றைய காலனிகளுக்கு கொண்டுசெல்லப்பட்டனர். சுதந்திரவேட்கைக்கு மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி நாற்றுமேடையானார். அஃது பொங்கிப் பிரவகித்தபோது காலனித்துவம் சரிந்தது. இந்தியாவை இந்தியர்களிடமே ஒப்படைத்துவிட்டு வெளியேறவேண்டிய சூழல் பிரித்தானியாவுக்கு ஏற்பட்டது. காலச்சக்கரம் சுழன்றது. எழுபத்தைந்து ஆண்டுகள் கழிந்தன. பட்டினத்துப்பிள்ளையின் வாக்குப்பலித்தது. அடிமைப்படுத்தப்பட்ட சமூகத்தின் வழித்தோன்றல் பிரித்தானியாவை ஆள்கின்ற சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

மற்றைய காலனிகளுக்கு இந்தியர்கள் கொண்



டுசெல்லப்பட்டபோது, மனிதாபிமானம் இருக்கவில்லை. இந்தியர்களுடைய உணர்வுகள் துச்சமெனக் கருதப்பட்டது. வலிகள் கவனிக்கபடவேயில்லை. காலனித்துவம் ஒடுங்கியபோது இந்தியர்கள் அகதிகளாக்கப்பட்டனர். பிரித்தானியாவிலே தஞ்சம் புகுந்தனர். காலவோட்டத்திலே செல்வாக்குமிக்க சமூகமாக வளர்சியடைந்தனர். அத்தகைய இந்திய வம்சாவளியுடன் அடையாளப்படுத்தக்கூடியவரே பிரித்தானியாவின் புதிய பிரதமர் ரிஷி சுனக் அவர்களாகும்.

ஒருயுகத்திலே ஏற்படக்கூடிய விஷயங்கள், அரசியலிலே ஒரு வாரத்திலேயே ஏற்பட்டுவிடும் என்பார்கள். அதனை அச்சொட்டாகப் பிரதிபலிக்கும் வகையிலே பிரித்தானிய அரசியல் காணப்படுகின்றது. புறமுதுகுகாட்டி ஓடமாட்டேன். போராடுவேன் என பிரித்தானியா

**நியூசிலாந்து சிற்சபேசன்**





வின் பிரதமர் லிஸ் ட்ரஸ் பாராளுமன்றத்தில் கர்ச்சித்தார். மறுநாள், பிரதமரின் வாசஸ்தலமுன்றலில் செய்தியாளர்களைச் சந்திக்க வந்தபோது பெட்டிப்பாம்பாக அடங்கியிருந்தார். தன்னைப் பிரதமராகத் தெரிவுசெய்த கன்சவேர்டிவ் கட்சியின் ஆணையைப் பூர்த்திசெய்ய முடியவில்லை என வருந்தினார். அதனாலே, பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்வதாக அறிவித்தார். சுமார் ஆறுவாரங்கள் மட்டுமே பிரதமர் பதவியை அலங்கரித்தவர். அதன்மூலமாக குறுகியகாலப் பிரதமர் என்னும் பெயரை வரலாற்றில் பதித்தார்.

அதன்பின்னர் புதிய பிரதமரைத் தெரிவு செய்கின்ற படலம் ஆரம்பமாகிது. மூன்று மாதங்களுக்கு முன்னர் பிரதமர் பதவியைத் துறந்த போரிஸ் ஜோன்சன், ஆறுவாரங்களுக்கு முன்னர் கட்சித்தலைவர் தேர்தலிலே லிஸ் டிரஸிடம் தோல்வியடைந்த ரிஷி சுனக் மற்றும் பெனி மோர்டாண்ட் ஆகியோர் வேட்பாளர்களாகக் களமிறங்கினர். ஏற்கனவே, உட்கட்சிக் கலாட்டாக்கள் உச்சம் தொட்டிருந்தன. அதனால், போட்டியைத் தவிர்க்க பகீரத பிராயத்தனங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஈற்றில், ரிஷி சுனக் போட்டியின்றித் தெரிவானார்.

கன்சர்வேட்டிவ் கட்சி 2010லிருந்து தொடர்ச்சியாக ஆட்சியைத் தக்கவைத்திருக்கின்றது. இருந்தபோதிலும் உட்கட்சிக் கலகங்களுக்குப் பஞ்சமில்லை. தேர்தலிலே கட்சியை வெல்லவைக்கக் கூடியவராலேயே தலைமைப் பொறுப்பை தக்கவைத்திருக்கலாம். அந்தவகையிலே, ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் நான்குதடவை தலைவர்களை மாற்றியிருக்கின்றது தற்போது தெரிவாகியுள்ள ரிஷி சுனக் ஐந்தாவது தலைவராகும். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவதான முடிவொன்று சர்வசனவாக்கெடுப்பிலே கிடைத்தது. அதனால் டேவிட் கம்ரன் முதலில் விலகினார். காரணம்: அவருடைய, ஐரோப்பிய ஒன்றியம் தொடர்பான நிலைப்பாட்டை மக்கள் நிராகரித்திருந்தனர். அதனால், தார்மீகப் பொறுப்பேற்று ராஜினாமாச் செய்தார். இதே டேவிட் கம்ரனே பிரித்தானியப் பிரதமாராக யாழ்பாணம்வரையில் ஒருநடை வந்து போயிருந்தார். டேவிட் கம்ரன் ராஜினாமாச் செய்தபோது, தெரேசா மே பிரதமரானார். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து திட்டமிட்டபடி பிரித்தானியாவை வெளியே கொண்டுவருவதில் சாதுர்யமாகச் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு வீரியமடைந்தது. அதனால் தெரேசா மே பதவி விலகினார். அதன்பின்னர், போரிஸ் ஜோன்சன் பிரதமரானார். கொவிட் பெருந்தொற்று அவரது பதவிக்கு ஆப்பாகியது. தொற்றுக் காலங்களிலே கடுமையான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியவர். உபதேசம் ஊருக்குத்தான் தனக்கல்ல என்ற தோரணையில், பிரதமரின் வாசஸ்தலத்திலேயே பிறந்தநாள் பார்டி கொண்டாடிக் கையும்களவுமாக போலிஸிடம் அகப்பட்டார். போலிஸ் தண்டப்பணம் விதித்தது.

> மற்றைய காலனிகளுக்கு இந்தியர்கள் கொண்டுசெல்லப்பட்டபோது, மனிதாபிமானம் இருக்கவில்லை. இந்தியர்களுடைய உணர்வுகள் துச்சமெனக் கருதப்பட்டது. வலிகள் கவனிக்கபடவேயில்லை. காலனித்துவம் ஒடுங்கியபோது இந்தியர்கள் அகதிகளாக்கப்பட்டனர். பிரித்தானியாவிலே தஞ்சம்புகுந்தனர். காலவோட்டத்திலே செல்வாக்குமிக்க சமூகமாக வளர்சியடைந்தனர். அத்தகைய இந்திய வம்சாவளியுடன் அடையாளப்படுத்தக் கூடியவரே பிரித்தானியாவின் புதிய பிரதமர் ரிஷி சுனக் அவர்களாவார்.

சட்டத்தை மீறியதனால் தண்டிக்கப்பட்ட பிரதமர் என்னும் பிம்பம் ஏற்பட்டது. அந்தவிவகாரம் சூடுபிடித்தபோது ராஜினாமாச் செய்தார். அதன்பின்னர் லிஸ் ட்ரஸ் பிரதமரானார்.

பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதைக்குத் திருப்புவதான வாக்குறுதியின் அடிப்படையிலேயே லிஸ் ட்ரஸ் பிரதமராகத் தெரிவானார். அவர் பதவியேற்ற வேளையிலேயே எலிசபெத் மகாராணியார் காலமானார். துக்ககாலம் முடிவடைவதற்குக் காத்திருக்க வேண்டியதாகியது. அதன்பின்னர், இழந்தகாலத்தை எட்டிப்பிடிக்க அவசரப்பட்டார். அவசரத்தில் விவேகம் பலியாகியது. தடாலடியான முடிவுகளை எடுத்தார்.

ஏற்கனவே அரசினுடைய கடன்தொகை அதிகரித்திருந்தது. அத்தகையதொரு சூழலில் வரிக்குறைப்புக்களை அறிவித்தார். அதற்கான நிதிஆதாரங்கள் இருக்கவில்லை. அதனால் அரசினுடையை கடன்சுமை அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டது. விளைவு: பிரித்தானிய நாணயத்தின் பெறுமதி தாள்ளாடியது. வட்டிவிகிதம் அதிகரித்தது. நிதிச்சந்தைகள் நிலைகுலைந்தன. பரந்துபட்ட பொருளாதாரம் பாதிக்கப்படுவதைத் தடுத்துநிறுத்தவேண்டிய பொறுப்பு மத்திய வங்கியின் [பாங்க் ஆப் இங்கிலாந்து] தோள்களில் சுமையாகியது.

பிரதமர் பதட்டமடைந்தார். சான்சிலர் என்று அழைக்கப்படுகின்ற நிதியமைச்சரைப் பதவி நீக்கினார். புதிய சான்சிலர் தடாலடியான மாற்று நிதிக்கொள்கைகளை அறிவித்தார். ஒன்றைச் சொல்வது, பின்னர் அதனை மாற்றி வேறொன்றைச் சொல்வது என, கையிலிருந்து சாப்பாடு வாய்க்குப் போகிற இடைவெளியில், அறிவிப்புக்கள் மாற்றமடைந்தன. அதனால், கட்சியின் நம்பிக்கையைப் பிரதமர் டிரஸ் இழந்தார். பதவியை ராஜினாமாச் செய்தார்.

இத்தகைய பின்னணியிலேயே, ரிஷி சுனக் பிரித்தானியப் பிரதமராகியுள்ளார். 2022ம் ஆண்டிலே இதுவரையில் இரண்டுதடவைகள் பிரதமர் மாறிவிட்டனர். மூன்றாவதாக ரிஷி சுனக் பதவியேற்றுள்ளார். அதனாலேயே, பிரித்தானியப் பிரதமர் பதவி சங்கீதக்கதிரை விளையாட்டாகி விட்டதா என்று கேட்கத் தோன்றுகின்றது.















**உழுதுண்டு வாழ்வோம்**
எமக்கான உணவில் தன்னிறைவு

# மரக்கறிகளின் ராஜாவை மனைகள் தோறும் பயிரிடல்



யேமிகா பொன்னுத்துரை
விவசாய பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



**கத்தரி** அதிக சந்தை பெறுமதி கொண்ட, வளர்ப்பதற்கு எளிதான பயிராவதுடன் நீங்கள் காட்டும் அன்பிற்கு தக்கதாய் உங்களுக்கு அள்ளி அள்ளித்தரும் செடியாகும். இதற்காகவோ என்னவோ கத்தரிக்காயை 'காய்கறிகளின் ராஜா' என பல கலாச்சாரங்களில் அழைக்கின்றனர். கத்தரிக்காயில் இரும்பு, கால்சியம் மற்றும் நார்ச்சத்து நிறைய உள்ளது. அதுமட்டுமல்லாமல் குறைந்த-கொழுப்பு, குறைந்த- கலோரி உள்ள உணவென்பதால் உடல் எடையை பராமரிக்க அல்லாடுபவர்களுக்கு ஏற்றது.

மனித உடலில் புற்றுநோய்க்குக்காரணமாக இருக்கும், ஃபிரீரேடிக்கிள் என்ற திசுக்களை



கட்டுப்படுத்தக்கூடிய ஆற்றல், கத்தரிக்காயில் உள்ள, பிளோலிக் அமிலத்தில் உள்ளது! இவ்வமிலம் மற்ற காய்கறிகள் பழங்களில் இருந்தாலும், புற்றுநோய்க்கிருமிகள் தொற்றாமல் தடுக்கக்கூடிய ஆற்றலை மட்டுமே கொண்டுள்ளது. ஆனால், புற்றுநோய் தாக்கிய பிறகும், புற்றுநோய்க்கிருமிகள் பரவாமல் தடுக்கக்கூடிய ஆற்றல், கத்தரிக்காயிலேயே உண்டு!கத்திரிக்காயில் உள்ள அந்தோனாசைனின், என்கின்ற பொருள் சீரான ரத்த ஓட்டத்தை பராமரிக்க உதவுகிறது. இத்தகைய மருத்துவ குணங்கள் நிறைந்த செடியை வளர்ப்பது சவாலான விஷயமானாலும் முயன்றால் முடியாதது எதுவும் இல்லை!

விவசாயத் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட வர்க்கங்களாக பின்வருவனவற்றைக்குறிப்பிடலாம். அவையாவன, அமந்தா F1 – ஒரு கலப்பின வகை. பரிந்துரைக்கப்பட்ட ஆண்டு – 2005. பழம் ஊதா நிறத்திலும் பளபளப்பாகவும் இருக்கும். நீளமானது. இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் பயிரிடுவதற்கு ஏற்றது. பாக்டீரிய வாடலுக்கு மிதமான எதிர்ப்பு. ஒரு ஹெக்டேருக்கு சுமார் 35-40 to-ns கிடைக்கும்,

அஞ்சலி –F1 – ஒரு கலப்பின வகை. பரிந்துரைக்கப்பட்ட ஆண்டு – 2005. பழங்கள் அடர் ஊதா மற்றும் நீள்வட்ட உருளை. இலங்கையின் எந்தப்பகுதியும் பயிர்ச்செய்கைக்கு ஏற்றது மற்றும் பாக்டீரியா வாடுதலை எதிர்க்கும். ஒரு ஹெக்டேருக்கு சுமார் 40–45 டன் தரக்கூடியது,

HORDI லெனாரி 1 – 2012ஆம் ஆண்டு



பரிந்துரைக்கப்பட்ட ஒரு கலப்பின வகை. ஊதா மற்றும் வெள்ளை அணில் பட்டை வகையாகும். இலங்கையின் எந்தப் பிராந்தியத்திலும் சாகுபடி செய்ய பரிந்துரைக்கப்படுகிறது. பாக்டீரியா ப்ளைட்டின் மிதமான எதிர்ப்பு. ஒரு ஹெக்டேருக்கு சுமார் 35–40 மெட்ரிக் டன் தரக்கூடியது.

தின்னவெலி ஊதா–(பரிந்துரைக்கப்பட்ட ஆண்டு 1968) ஈரப்பதமான மற்றும் இடைநிலை மண்டலத்தில் வளரக்கூடியது. இவ்வகையின் பழங்கள் அடர் ஊதா நிறத்தில் பளபளப்பான அமைப்பு மற்றும் நீள்வட்ட வடிவத்துடன் இருக்கும். பூக்கள், தண்டுகள் மற்றும் இலைகள் நரதி மற்றும் ஊதா நிறத்தில் உள்ளன. வறண்ட காலநிலை கொண்ட வடக்குப் பகுதிகளுக்கு ஏற்றது. விளைச்சல் 20-25ton/ha.

படாகொட– பரிந்துரைக்கப்பட்ட ஆண்டு 1968. முதல் அறுவடைக்கு 61–85 நாட்கள். பழங்களின் பின்னணியில் வெள்ளை நிற கோடு



களுடன் ஊதா நிறத்தில் இருப்பதுடன் சற்று உயர்த்தப்பட்ட உருளை வடிவத்தைக் கொண்டுள்ளன. தண்டு, இலைகள் அடர் பச்சை நிறத்திலும் பூக்கள் ஊதா நிறத்திலுமிருக்கும். பாக்டீரியா ப்ளைட்டை எதிர்க்கும் வகை. ஈரப்பதம் மற்றும் மிதவெப்ப மண்டலங்களுக்கு ஏற்றது. ஒரு ஹெக்டேருக்கு 20–25 டன் சாத்தியமாகும்.

SM 164 – பரிந்துரைக்கப்பட்ட ஆண்டு 1940. முதல் அறுவடைக்கு 60–64 நாட்கள்.



இது பாக்டீரியா ப்ளைட்டின் மிதமான எதிர்ப்பு மற்றும் வெளிர் ஊதா நிற பழங்களை உற்பத்தி செய்கிறது. பழங்கள் நடுத்தர அளவு மற்றும் உருளை வடிவமாகும். இவ்வகைகள் ஈரப்பதம், உலர் மற்றும் இடைநிலை மண்டலங்களுக்கு ஏற்றவை. நீர்ப்பாசனம் மூலம் சாகுபடி செய்தால் ஒரு ஹெக்டேருக்கு 15–18 டன்கள் கிடைக்கும்.

**காலநிலை தேவை / செய்கைக்கு பொருத்தமான பிரதேசங்கள்.**

கடல் மட்டத்தில் இருந்து 1300 மீற்றருக்கு மேல் மட்டத்தில் வளரும். முடிந்தவரை கோடை காலத்தில் பயிரிடுவதை தவிர்ப்பது நல்லது. ஏனெனில் மாவுப் பூச்சித் தொல்லைகள் அதிகமாக இருப்பதாலும் மழை குறைவாகையாலும்



கத்தரிக்காய்கள் சிறிய வடிவத்திலேயே வரும்.

கோடைகாலத்திலிவை கசப்புத்தன்மை உடையதாக இருக்கும். இது பொட்டாசியம் ஊட்டச்சத்து குறைபாட்டினால் வருவதுதான். அதற்கு சாம்பல் அல்லது வாழைப்பழத் தோலை தண்ணீரில் ஊறவைத்து செடிகளுக்கு கொடுப்பதினால் பொட்டாசியம் சத்து குறைபாடு நீங்கும்.

## மண்

மண்கலவை என்று எடுத்துக்கொண்டால், வண்டல்மண், களிமண் கலந்த வண்டல் மண், செம்மண் சிறந்தது. நல்ல நீர் வடிந்தோடக்கூடிய மண் இருப்பது சிறப்பம்சம். ph அளவு.5.5 – 5.8 உகந்தது.

## பசளையிடல்

இயற்கை உரங்கள், மண்புழு உரம் , தொழு உரம் , இலை மக்குமுரம் அல்லது காய்கறி கழிவிலிருந்து கிடைக்கும் உரம் சேர்த்துக்கொள்ளலாம். மண் கலவையில் இவற்றை சேர்ப்பதனால் கத்திரிக்காய்ச்செடிகளுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை மண்ணிலிருந்து எளிதாக கரைத்து கொடுக்கும். வேப்பம் புண்ணாக்கு வேர் அழுகல் நோய், வேரில் வரும் பூச்சிகள், தண்டு அழுகல் நோய், இலைகளில் வரும் இலைப் பேன்கள், கம்பளிப்புழு, பச்சை புழுக்கள் காய்த் துளைப்பான் தண்டுதுளைப்பான் இவைகளை கட்டுப்படுத்துகிறது.

**விதை தேவை– 350g/ha.**

**நாற்றுமேடை முகாமைத்துவம்.**

பொருத்தமான சூரிய ஒளியில் 3m x 1m பாத்தி பொருத்தமானது. பாத்தி தொற்றுநீக்கப்பட்டு, மேல்மண் மற்றும் மாட்டெரு 1:1 எனும் விகிதத்தில் இடவேண்டும். விதைகளை வரிசைகளூ



டாக 6 அங்குல இடைவெளியில் இடவேண்டும்.

**நிலத்தை தயார் செய்தல்.**

பூச்சியப்பண்படுத்தல் அல்லது உழுதல் செய்த மண்ணில் 30ட் து 30ட் து 30ட் அளவில் குழிகளை தயார்ப்படுத்த வேண்டும்.

**நடுகை செய்தல்.**

தயார் செய்யப்பட்ட குழிகளில் 25 – 30 நாட்களான பயிர் நாற்றுகளை குழிக்கு ஒன்று என்றவாறு பயிரிடலாம். நடுகை இடைவெளி– 90-cm x 60-cm.

## நீர் வழுங்கல்.
## நல்ல நீர் வழுங்கல் தேவை.
## களைக்கட்டுப்பாடு

நடுகை செய்து 2,4,7,9,12 நாட்களின் பின் களையகற்றல் நன்று.

## நோய் முகாமைத்துவம்

பங்கசு நோய்கள், நாற்றழுகல், கழுத்தழுகல், பியூசாரியம் வாடல், தூள் பூஞ்சண நோய், அந்தரக்னோஸ், பொமொப்சிஸ் வெளிரன். பற்றீரயா நோய்கள், பற்றீரியா வாடல், டைடோபிளாஸ்மா நோய், சிறிய இலை நோய்.

## அறுவடை

நாற்று நடுகை செய்து 10–12 வாரங்களில் அறுவடை செய்யலாம். 7 நாள் இடைவெளியில் அறுவடையை 10 – 12 பறித்தலில் செய்யலாம். தக்காளியை போலவே இலைகளுக்கும், தண்டிற்கும் இடையில் புதிதாய் கிளைகள் முளைக்கும். இவற்றை விட்டால் தனிக்கிளைகளாக முளைத்து அவற்றிற்கும் சத்துத்தேவைப்படும். ஆனால், செடி அடர்த்தியாய் வராமல் படர வேண்டுமென்று நினைத்தால் அதனை நறுக்கி விடலாம்.

அதுவுமல்லாமல் மற்ற இலைகளுக்கு சூரிய ஒளி கிடைக்காமல் அவற்றை மறைக்கும் இலைகளையும் வெட்டி விடுங்கள். இது காற்றோட்டத்திற்கும் உதவும்.

விளைச்சல்.

வர்க்கத்தைப்பொறுத்து சாதகமான விளைச்சல் காணப்படும். OPV 1820t/ha

கலப்பினம் 30-&40 t/-ha.




## நாங்களும் படைப்பாளிகளே !






ற.றஜின்பிரசாத் பிரான்ஸ்

# சேமிப்பு

சிறுக சிறுக சேமிப்போம்
சிறு வயதிலிருந்து சேமிப்போம்

இளமையில் சேமிப்பது
உனது முதுமையில் பயனளிக்கும்
நல்ல நண்பனைப் போல கைகொடுக்கும்.

சேமிப்பதற்கு பணத்தை மட்டும் தேடாதே
நல்ல நண்பர்களை சேமிக்க கற்றுக்கொள்.
இனிய நூல்களை சேமிக்க கற்றுக்கொள்.
அன்பான உறவுகளை சேமிக்க கற்றுக்கொள்.
நல்ல சொற்களை சேமிக்க கற்றுக்கொள்.
அழகான வாழ்க்கையை சேமிக்க கற்றுக்கொள்.

செலவு போக மிதியை சேமிக்கதே
சேமிப்பு போக மீதியை செலவு செய்.
சிக்கனமான சேமிப்பு வாழ்க்கையின் முதலீடு.
வரவறிந்து செலவு செய்தால் வாழ்வு மலரும்
வாழ்க்கை தரம் உயரும்!.
சிறுக சிறுக சேமிக்க பழகு!!.

செழுமையான வாழ்வுக்கு அதுதான் அழகு!!!.

**சிவனேஸ்வரன்
சர்மியா
தரம் -07
யா /நடேஸ்வரக்
கல்லூரி**






# சேமிப்பு



★சேமிப்பு செழித்து வளர சிறந்த வழி சிக்கனம்
★ செலவழித்த பின் எஞ்சியதை சேமிக்க வேண்டாம்.
★ சேமித்த பின் எஞ்சியதை செலவிடுங்கள்.
★ சிறிய செலவுகளில் கவனம் கொள்ளுங்கள்
★ ஒரு சிறிய கசிவு மிகப்பெரிய கப்பலையும் மூழ்கடிக்க வல்லது.
★ சேமித்த பணம் வறுமையில் பயன் அளிக்கும்.
★ சேர்த்து வைத்த புண்ணியம் இறுதியில் துணை நிற்கும்.
★ சம்பாதிப்பனை விட சேமிப்பவனே சிறந்தவனாகின்றான்.

**சூ.அனித், தையிட்டி**






**அ.சந்தோஷ்
உடுவில்**






## சேமிப்பு என்பது பணத்தை சேமிப்பது மட்டுமல்ல

சேமிப்பு மனிதனைப் பூரணப்படுத்தும் ஒரு செயற்பாடு ஆகும். மனிதர்கள் சேமிப்பது குறைவு.

அதனால் பிறகு மிகவும் கஷ்டப் படுவார்கள். தினமும் நாம் எமக்கு கிடைக்கும் பணத்தில் ஒரு சிறிய தொகையை என்றாலும் சேமித்து வைப்பது நல்லது. எமது அன்றாட சேமிப்பானது நிச்சயம் என்றோ ஒரு நாள் எமது அவசர தேவைக்கு கைகொடுக்கும். சேமிப்பு என்பது பணத்தை சேமிப்பது மட்டுமல்ல. பொருட்களையும் நினைவுகளையும் கூட சேமிக்கலாம்.



**ஜெ. கவிலக்சா
மட்டக்களப்பு.**

## ஒக்டோபர் மாதத்திற்கான நாற்றுக்களின் விவேகத்தை அளவிடும் போட்டிக்கான வினாக்கள்:-

1) அறுசுவைகளை குறிப்பிட்டு அவற்றிற்கு ஒவ்வொரு உதாரணம் தருக?

2) உலக உணவு தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

3) பாஸ்ற்பூட் என்பதன் தமிழ் கருத்தை தந்து, அதற்கு 2 உதாரணங்கள் தருக?

4) உணவில் மீன் சேர்த்துக்கொள்வதால் கிடைக்கும் சத்துக்கள் எவை?

5) ஒற்றுமை பற்றி பூரணி பாட்டி கூறிய கதையில் இடம்பெற்ற கடற்கரையோரங்களில் வளரும் தாவரம் எது?

மேற்தரப்பட்ட வினாக்களுக்கான சரியான பதில்களை அடுத்த வாரத்திற்கான ஆக்கங்களுடன் ( உங்கள் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி எண் போன்றவற்றையும் குறிப்பிட்டு) ஞாயிற்றுக்கிழமைக்குள் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**அடுத்த வார தலைப்பு :- அன்றாட வாழ்வில் விஞ்ஞான அறிவின் பிரயோகம்**

அனுப்பவேண்டிய மின்னஞ்சல்- aruvitamil812@gmail.com
வாட்சப் இலக்கம்- 0094 768320733



# மரணிக்காத மனிதம்

கதைகளோடு கனாக்காலம்

சிறுகதை

**நேரம்** காலை ஒன்பதைத் தாண்டவில்லை. ஆனால் அகோர வெயிலின் உக்கிரத்தைத் தாங்க முடியவில்லை. ஒக்டோபர் பிறந்து விட்டாலும், யாழ்ப்பாணத்து வெயில் மர புல் தரைகளை கருக்கிக் கொண்டிருந்தது. விதைப்புக் காலத்துக்கு அதிக அவகாசம் இல்லை. ஒரு மழை வந்து வயலை நனைத்தால் விதைப்புக்கு வசதியாக இருக்கும் என்ற எதிர்பார்ப்போடு காத்திருக்கிறார்கள் இந்த மண்ணின் விவசாயிகள்.

மருதனாமடம் வாழைப்பழச் சந்தைக்குள் நுழைந்தேன். முதலில்லாமல் வாழைக் குலை வியாபாரம் செய்யும் ஒரு முதியவரை நான் அங்கு நண்பராக்கிக் கொண்டிருந்தேன். பழம் கிலா அறுபது விற்றாலென்ன, நூற்றம்பது விற்றாலென்ன , தன்னிடமுள்ள ஒரு குலையில் ஒரு சீப்பை வெட்டித் தருவார். நான் கொடுக்கும் பணத்தை வாங்கிக் கொண்டு, சந்தோஷமாக ஒரு சீப்பை வெட்டி நீட்டுவார். இவருக்கென்று ஒரு கடை இல்லை. இடமும் இல்லை. தினமும் விடிகாலையில் வந்து, அங்கு வரும் குலைகளை பேரம்பேசி வாங்கி, பின்பு தொகையாகவோ, ஒன்றிரண்டாகவோ விற்று விட்டு, பதினொரு மணி அளவில் தன் கடையை அடைத்து விட்டு, தன் குதிரையில் ஏறி வீட்டுக்குப் புறப்பட்டு விடுவார்.

பல இளைஞர்கள் உழைக்க வழி தெரியாமல், கஞ்சாவும் கையுமாகத் திரிகிறார்களே. உழைப்பது எப்படி என்று இவரிடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் அடிக்கடி நினைப்பதுண்டு. அன்றைய பத்திரிகை எப்பொழுதும் இவர் கைவசம் இருக்கும். ஒரு போத்தலில் குடிநீர் இருக்கும். மனைவி இறந்து விட்டாராம். பிள்ளைகள் திக்குத் திக்காகப் போய்விட்டார்களாம். ஆனால் நான் சந்தோஷமாகத்தான் இருக்கிறன் என்று சிரித்துக் கொண்டே என்னிடம் சொல்வார். வாழ்வில் நம்பிக்கையை இழக்காமல் என்னால் முடியும் தம்பி என்று சொல்லிக் காட்டுகிறார் இந்த மொத்த வியாபாரி.

வாரத்தில் இரண்டு நாட்களாவது, இவரிடம் நான் பழம் வாங்கப் போவதுண்டு. ஐந்து வருடத்திற்கு மேலான பழக்கம் எழுபது வயதைத் தாண்டிய இவரின் வாழ்க்கை முறை எனக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

இதற்கிடையில் எனக்கு கொழும்பு பயணமாக வேண்டிய அவசியம். ஒரு மரண வீடு. ஒரு வாரம் கழித்து வீடு திரும்பிய கையோடு, இன்னொரு பிரிவு. மீண்டும் கண்டி பயணம்.இந்த அமளியில் தினம் வாழைப்பழம் சாப்பிடுவது, வாரத்தில் இரண்டு தடவை மருதனாமடம் சந்தைக்குப் போவது, என்ற என் வழமையான பணிகள் அடியோடு மாறி விட்டன.

சுமாராக ஒரு மாதம் கழித்து, சந்தைக்குப் போயிருந்தேன். வழமையான வாழைப்பழ முதலாளி நண்பரின் கோட்டை வெறுமையாக இருந்தது. நாளாந்த தினசரி, தண்ணீர் நிரப்பப்பட்ட கோலா போத்தல், தோளில் போட்டுக் கொள்ளும் ஒரு வரி போடப்பட்ட சால்வை எல்லாமே மிஸ்ஸிங். கோட்டைக்கு ராஜா இல்லாததால் அந்த இடம் பொலிவிழந்து இருப்பது போல எனக்குள் ஒரு மனப்பிரம்மை. பரிச்சயமான ஒருவரை, எப்பொழுதுமே ஓர் இடத்தில் கண்டு பழகி விட்ட எமக்கு, அந்த இடத்தில் குறிப்பிட்ட அந்த மனிதர் இல்லாதபோது, மனதுள் படரும் வெறுமை உணர்வு எனக்குள்ளும் படர்ந்தது...சுற்று





முற்றும் பார்த்தேன். எனக்கு பரிச்சயமான இன்னொரு முகம் தெரிந்தது. அவரும் வாழைப்பழ வியா பாரிதான்.

அண்ணை உங்களைத்தான்...

அவர் என் பக்கம் திரும்பினார் ஐந்து



ஜேம்ஸ் ஞானேந்திரன்

வருடங்கள் பழகியும் எனக்குப் பெயர் தெரியாத காரணத்தால், எப்படி விசாரிப்பது என்று குழப்பமாக இருந்தது.

அவரை எங்க காணோம். என்று சொல்லியபடி, எனது நண்பரின் வழமையான கோட்டை இருக்கும் திசையைச் சுட்டிக் காட்டினேன்.

அவர் புரிந்து கொண்டார்.

அட கந்தசாமியைக் கேட்கிறீர்களா? அவனுக்கு கிட்டடியில நெஞ்சில வலிச்சுது எண்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனவங்க. இப்ப வீட்ட வந்திட்டாராம் என் சொல்லினம். ஆனால் இங்க வாறதில்லை எண்டு சொல்லி விட்டு , அவர் அவசரமாக தன் வியாபாரத்தைக் கவனிக்கச் சென்று விட்டார்.

அவருக்கு இதய அதிர்ச்சியா?

எனக்கு செய்தி பெரிய அதிர்ச்சியைத் தந்தது..

எப்படியோ விசாரித்து அவர் வீட்டைக் கண்டறிந்து, நேரடியாகவே வீட்டுக்குள் நுழைந்தேன்..இதைக் கல்வீடு என்றும் சொல்ல முடியாது. மண் வீடு என்றும் சொல்ல முடியாது. அரை குறையாக கட்டி பாதிவழியில் அனாதரவாக விடப்பட்ட வீடு என்று தெரிந்தது. வீட்டின் முன்பக்கம் இருந்த தரையில் அவர் படுத்திருப்பதைக் கண்டேன்.

என்னைக் கண்டதும் எழ முயன்றார். நான் மெல்லத் தோளை அழுத்தி, அப்படியே கிடக்கும்படி கேட்டுக் கொண்டேன்.. பக்கத்தில் இருந்த ஒரு ஸ்டூலை எடுத்து பாயருகே இழுத்து வைத்து உடகாரந்தேன்.

என்ன நடந்தது என்று விசாரித்தேன். ஒழுங்காகப் பேசவே திணறிய அந்த மனிதர், மெல்ல மெல்ல தன் கதையைச் சொல்லி முடித்தார். சொல்லி முடித்தபோது, அவர் முகத்தில் இதுவரை நான் கண்டிராத கண்ணீர் துளிகள் அரும்புவதையும், அவரது வழமையான சிரிப்பு தொலைந்து போயிருப்பதையும் காணமுடிந்தது.

இருதய அதிர்ச்சியால் தாக்கப்பட்டுள்ளார் இந்தக் கந்தசாமி..யாழ்ப்பாண அரச மருத்துவமனையில் கொஞ்சக்காலம் வைத்திருந்தார்களாம் பிறகு அனுப்பி விட்டார்களாம். இப்பொழுது முன்னரைப் போல் சைக்கிள் ஓட முடியவில்லையாம்.. வீட்டோடுதான் பொழுதைக் கழிக்கிறார். இணுவில் வாழ் மனிதராயிற்றே. புகையிலை உற்பத்திக்கு பெயர்போன இந்த மண்ணின் மைந்தனுக்கிருந்த சுருட்டுப் புகைக்கும் பழக்கத்திற்கும் ஆப்பு வைத்து விட்டார்கள்.

தினசரி மாத்திரைகள் விழுங்குகிறாராம்.

யார் உங்களுக்கு உதவி செய்கிறார்கள் என்று கேட்டேன். ஐயா இந்த வாழைப்பழ வியாபாரத்தி'ல கொஞ்சம் சேர்த்து வைச்சிருக்கிறன். காசுக்கு பிரச்சினை இல்லை. ஆனால் ஆளுதவிதான் அடியோடு இல்லை. பெத்த பிள்ளையும் எங்கேயோ போய் தொலைஞ்சிட்டான். என்னோட சந்யை'ல வேலை செஞ்ச மாணிகத்தின்ர மகன்தான் இடைக்கிடை வந்து போறவன்.மற்றப்படி நான் அனாதைதான்.

அவர் கண்களில் நீர் பனித்ததைக் கண்டேன்.

அவர் படுத்திருந்த இடத்தைச் சுற்றிப் பார்த்தேன். அங்கு பெரிதாக எந்தப் தளபாடங்களும் இல்லை. சமையலுக்கென்று அரைகுறையாகக் கட்டப்பட்ட ஒரு குசுனி இருந்ததைக் கண்டேன். அங்கே கடைசியாகச் சமைத்து பல மாதங்களாகி இருக்கலாமென்று தெரிந்தது.

வீட்டைக் கூட்டித் துப்பரவாக்க எவரும் வருவதில்லையா?

பதிலுக்கு எதைச் சொல்வது என்று தெரியாமல் விழித்தார் அந்தக் கந்தசாமி.

வாழைப்பழங்கள் தந்து என்னுள் வளர்ந்தவரின் கண்ணீர், என்னுள் இருந்த மனிதத்தை விழித்தெழ வைத்தது.

ஒரு முடிவுக்கு வந்தேன்.

இந்த மனிதருக்கு இந்தத் தள்ளாத வயதில், பொல்லாத நேரத்தில் பயனுள்ள எதையாவது செய்வதை விட உலகில் வேறு சிறந்த சமூகப் பணி இருக்க முடியாது.

ஓய்வு நேரங்களில் புத்தகம் வாசித்து பொழுதைக் கழிக்கலாம். பூச்செடிகளை வளர்க்கலாம்.. காய்கறிச் செடிகளைப் பயிரிடலாம். கந்தசாமியைப் போன்றவர்களை கவனித்தும் , பொழுதைப் போக்க முடியும்.

அடுத்த நாள் காலை ஒரு சாப்பாட்டுப் பார்சலுடன் அன்றைய உதயனையும் வாங்கிக் கொண்டு, அவர் கோட்டைக்குள் நான் நுழைந்தபோது, ஆச்சரியத்தோடு கந்தசாமி என்னைப் பார்ததார். அவர் கணகள் பனிப்பது தெரிந்தது.. வாழைப்பழ வியாபாரியின் சந்திப்பாக அது இருக்கவில்லை. அந்த வியாபாரியை வாழவைக்கும் ஒரு சந்திப்பாகவே அது அமைந்தது.

மனிதம் மரணிக்கக் கூடாது. அதற்குச் சாகாவரம் அளிக்க வேண்டும்.




# தமிழருவி வாரபலன்

27.10.2022–02.11.2022



துன்னையூர்
ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள்




தொழில்சார் அலைச்சல் நிலை அதிகமாக காணப்படும்.எடுக்கும் முயற்சிகளில் நிதானம் தேவை.எதிர்பாராத திடீர் பிரயாணங்கள் அமையும்.தொழில்சார்ந்த வேலைப்பழு அதிகமாக இருக்கும்.பொறுமை,நிதானம் அவசியம்.
அனுகூலமான நாள்– ஞாயிறு
அனுகூலமான திகதி–29




அனுகூலமான வாரமாகும்.எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணவரவு திருப்திகரமானதாக இருக்கும்.குடும்பத்தில் அனுகூலங்கள் ஏற்படும். எதிர்பாராத திடீர் பணவரவுகள் அமையும்.பெண்களுக்கும்,மாணவர்களுக்கும் சிறப்புண்டு.
அனுகூலமான நாள் –திங்கள்
அனுகூலமான திகதி – 28




சற்று சிரமங்கள் நிறைந்த வாரமாகும்.அலைச்சல்கள் அதிகமாக இருக்கும். உடல்நிலை சார் உபாதைகள் ஏற்படும்.கடன் பிரச்சனைகளில் நிதானத்துடன் செயற்படவேண்டும். எடுக்கும் முயற்சிகளில் இழுபறி நிலை காணப்படும்.பெண்களுக்கு சஞ்சல நிலை காணப்படும்.
அனுகூலமான நாள் – வெள்ளி
அனுகூலமான திகதி– 29




சிறப்பான,அனுகூலமான வாரமாகும்.எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.தொழில்சார் முன்னேற்றங்கள் சிறப்பாக காணப்படும்.பணவரவு திருப்திகரமானதாக இருக்கும்.குடும்பநிலையில் நன்மைகள் ஏற்படும்.
அனுகூலமான நாள்– புதன்
அனுகூலமான திகதி– 01




சற்று மத்திமமான பலன் தரும் வாரமாகும்.தொழில் சார்ந்த பிரச்சனைகள் அதிகமாக இருக்கும்.பணவரவு சற்று மத்திமமாக இருக்கும்.கொடுக்கல் வாங்கல்களில் பொறுமை அவசியம்.மருத்துவச் செலவுகள் ஏற்பட்டு மறையும்.
அனுகூலமான நாள்– வெள்ளி
அனுகூலமான திகதி– 01





சற்று மத்திமமான சிரமமான பலாபலன்கள் இருக்கும். உடல்நிலை சார் உபாதைகள் இருக்கும்.சஞ்சலங்கள் அதிகமாக இருக்கும்.எடுக்கும் முயற்சிகளில் இழுபறி,தாமதம் இருக்கும்.பொறுமை,நிதானம் தேவை.பெண்களுக்கு சஞ்சல நிலை.மாணவர்களுக்கு ஓரளவு அனுகூலமான பலனாகும்.
அனுகூலமான நாள்– திங்கள்
அனுகூலமான திகதி– 29





இந்த வாரம் காரியத்தடைகள் அதிகமாக இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் பொறுமை,நிதானம் அவசியம்.சகோதரர் வழியில் சிறு சிறு சஞ்சலங்கள் ஏற்பட்டு மறையும்.தொழில்சார் முன்னேற்றங்கள் ஓரளவு அனுகூலமானதாக அமையும்.பணவரவு சற்று மத்திமமாகவே இருக்கும்.மாணவர்களுக்கு முயற்சி தேவை.
அனுகூலமான நாள்– ஞாயிறு
அனுகூலமான திகதி– 28




மிகச்சிறப்பான அனுகூலமான பலனாகும்.தொழில்சார் முன்னேற்றங்கள் சிறப்பாக காணப்படும்.பணவரவு திருப்திகரமானதாக இருக்கும்.எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.குடும்பநிலை சார் நன்மைகள் ஏற்படும்.பெண்களுக்கு மிகச்சிறப்பான பலனாகும்.
அனுகூலமான நாள்– புதன்
அனுகூலமான திகதி– 01





சற்று மத்திமமான பலன் தரும் வாரமாகும்.எதிர்பாராத நன்மைகளும் ஏற்படும்.திடீர் செலவுகள் சுபச்செலவுகளாக அமையும்.பணவரவு சற்று மத்திமமாகவே இருக்கும்.குடும்பத்தில் சுபகாரியங்கள் ஏற்படும்.
அனுகூலமான நாள்– திங்கள்
அனுகூலமான திகதி–30




மிகச்சிறப்பான வாரமாகும்.தொழில்சார் முன்னேற்றங்கள் சிறப்பாக இருக்கும்.பணவரவு திருப்திகரமானதாக இருக்கும்.எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.புதிய முயற்சிகள் கைகூடும்.பெண்களுக்கு சிறப்பான பலனாகும்.
அனுகூலமான நாள்– வியாழன்
அனுகூலமான திகதி– 30




மிகச்சிறப்பான அனுகூலமான வாரமாகும்.தொழில்சார் முன்னேற்றங்கள் மிகச்சிறப்பாக இருக்கும்.பணவரவு திருப்திகரமானதாக இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.உறவினர்கள் மூலமாக நன்மைகள் அமையும்.
அனுகூலமான நாள்– திங்கள்
அனுகூலமான திகதி– 31




மத்திமமான பலன் தரும் வாரமாகும்.எடுக்கும் முயற்சிகளில் பொறுமை,நிதானம் அவசியம். தொழில்சார்ந்த வேலைப்பழு அதிகமாக இருக்கும்.பணவரவு சற்று மத்திமமாக இருக்கும்.கொடுக்கல் வாங்கல்களில் பொறுமை, நிதானம் தேவை.
அனுகூலமான நாள்– வியாழன்
அனுகூலமான திகதி–30

04 ஆம் பக்கத் தொடர்ச்சி....

## இருபத்தியிரண்டாம் திருத்தமும் ...

மொட்டு அணியினா் மீதான ரணிலின் கட்டுப்பாடும் அதிகரிக்கும்.

தற்போதைய திருத்தத்தின் மற்றொரு முக்கியமான அம்சம் இரட்டைப் பிரஜாவுரிமை. இது பஸில் ராஜபக்ஷவை இலக்காக வைத்து கொண்டுவரப்பட்டது என்பதில் சந்தேகமில்லை. 20 ஆவது திருத்தத்தின் மூலம் இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவா்களும் தோ்தல்களில் போட்டியிட முடியும் எனக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் பின்னரே பஸில் ராஜபக்ஷ எம்.பி.யாகி அமைச்சா் பதவியையும் பெற்றுக்கொண்டார். பின்னா் கடந்த ராஜபக்ஷக்களுக்கு எதிரான போராட்டத்தின் விளைவாக ஜூன் 9 ஆம் திகதி அவா் எம்.பி. பதவியையும் அமைச்சா் பதவியையும் துறந்தார். ஆனால், பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகா் என்ற முறையில் மீண்டும் அரசியலுக்கு வருவதற்கு துடித்




துக்கொண்டிருக்கும் ஒருவராகவே அவா் உள்ளார். இந்தப் பின்னணியில் போராட்டக்காரா்களைத் திருப்திப்படுத்துவதற்கான ஒரு நகா்வாக 22 ஆவது திருத்தத்தின் மூலமாக இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவா்கள் தோ்தலில் போட்டியிடவோ அரசியல் பதவிகளை வகிப்பதற்கோ தகுதியற்றவா்கள் என்ற சரத்து சோ்க்கப்பட்டிருக்கின்றது.

### ரணிலின் பலம்

இந்த திருத்தத்தின் உள்ளார்ந்த அம்சங்கள் எவ்வாறு இருந்தாலும், மூன்றில் இரண்டு வெரும்பான்மையுடன், எதிர்க்கட்சிகள், சிறுபான்மையினக் கட்சிகளின் ஆதரவையும் பெற்று இது நிறைவேற்றப்பட்டிருப்பது ரணில் விக்கிரமசிங்கவை பலப்படுத்தியிருக்கின்றது. ஸ்திரமான அரசாங்கம் ஒன்றை அவா் அமைத்திருக்கின்றாா் என்ற கருத்தை சா்வதேச அரங்கில் தோற்றுவித்திருக்கின்றது. சா்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கடன் மறுசீரமைப்பு போன்றவற்றுக்கு 22 ஆவது திருத்தம் அவசியமானது என்பதைத்தான் ரணில் விக்கிரமசிங்க அண்மைக்காலமாக சொல்லிவந்திருக்கின்றார். இதனைத் தோற்கடிப்பது நாட்டுக்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையும் அவா் எதிரணியினருக்கு தெரிவித்திருந்தார். இந்தப் பின்னணியில்தான் எதிர்க்கட்சிகளும் அவரது திருத்தத்துக்கு வாக்களித்தன.

இப்போது பந்து ரணிலின் பக்கத்தில். 22 ஐ வைத்துக்கொண்டு சா்வதேசத்தை அவா் எவ்வாறு வசப்படுத்தப்போகின்றாா் – பொருளாதார நெருக்கடியை எவ்வாறு தீர்த்துவைக்கப்போகின்றாா் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.






# கன்னியென் காதலை

மெல்லத் தீண்டிடும்
காற்றென வந்தவன்..
செல்லத் தீண்டலால்
செய்தனன் நாணவே...

கள்ளப் பார்வையை
கதிரென பாய்ச்சியே...
மெல்ல நகர்ந்திடும்
முகிலின் பின்
மறைந்தனன்...

அள்ளிக் குடித்திடும்
ஆவலில் நாடவே...
தள்ளிப் பிரிந்தெனை
தவித்திட வைத்தனன்...

சொல்லித் தீர்ந்திடா
சோகமும் சூழ்ந்திட...
உள்ளக் குமுறலில்
ஒன்றியே வாடினேன்...

அல்லிப் பூக்களின்
அம்புலிக் காதலா...
தள்ளியே காய்ந்தெனுள்
தாகம் தனிப்பதேன்...?

புள்ளியை வைத்தொரு
கோலமாய் மாறவோ...
வள்ளிப் பரங்கியுன்
பூக்களை சூடவோ...

எள்ளி நகைத்திடும்
இன்னிலை ஏனடா...
சொல்லியா கொள்வது
கன்னியென் காதலை....?

**கிருணகாந்தி**

# நம்ம யாழ்



நீலையூர் சுதா

பத்தொன்பதாம் நூற்றாண்டில்
பழம் தமிழர் புகழ்பரப்பிப்
பக்திக்கே குறைவின்றி
பலகோவிலமைத்துச்
சித்தர்கள் வாழ்ந்த சிறப்புமிக்க
இடமின்று
சீரழிந்து போகிறதே
சிந்திப்பார் யாருமுண்டோ?

தோழர்கள் வாழும் தொகுதியெல்லாம்
தூளாலும் வாளாலும் அழியிதின்று
பாரினில் பெயர்பெற்ற பகுதியன்று
பார்த்திடப் பரிதாபம்
நமக்கதையின்று.

செவிக்கினிய தமிழ்பேசும்
செல்வமிகு தமிழிடத்தில்
பவித்திரமாய் பண்புகளை
பாதுகாத்தார் அப்போது
இருப்பிடமே இடமாகி
இளைஞருக்கின்று
தவிப்பிடமாய் மாறியுள்ள
தமிழரிடம் பாரு.
பாண்டியன் வழிவந்த
பண்புள்ள மக்களை
தூளுண்ண வைத்துள்ளார்
துயரமே கேட்டிட
ஊனின்றி உறங்காது
வாழ்கின்ற இளைஞர்கள்
உண்மையில் என்னதான்
செய்வார்கள் நாளை?

தலைதூக்க முடியாமல்
வலைப்பின்னல் முறையில்
வர்த்தகம் செய்கிறார்
வாலிபம் தொலைக்க
வருங்காலம் வடபகுதி
வாலிபரை நாம்
இனங்காண முடியாமல்
ஏங்கித் தவிப்போம்.

குண்டுச் சட்டிக்குள் குதிரை
யோடுவோர்
தங்கள் பிழைப்பினை
தரமாய் நடாத்த
வங்குரோத்து அடிமைமுறையில்
வாழவைக்கிறார் அறிவிலி பலபேர்.

மன்னர்கள் வாழ்ந்த மரியாதைப் பூமி
மறைத்திட உருவாகும் புதிதான சாமி
தந்திரத்தனத்துக்குள்
அகப்பட்ட தீவை
சுந்தர பூமியாய் பார்த்திடுவோமா?



# அன்பை நாடு அகிலம் உனக்கு

அகிலத்தின் மத்திரச்சொல்
அனைத்தையும் கவர்ந்திடும்
உயிர்களின் உணர்வோடு
உறவாடிப் பூத்திடும்

தொட்டே வாழ்வது
தொடராய்த் தொடுப்பது
மாலையோடு சேர்ந்த
மலரும் நாறாய்

தூய்மையான உள்ளத்தில்
துளிர்க்கும் விதையாய்
மாயாத மகத்துவத்தை
மாளும்வரை புகட்டிடுமே

பாசங்கள் படர
பந்தங்கள் கூட
வேசங்கள் இல்லாத
வெண்மதி நிலவாய்

ஒற்றுமையில் திளைத்து
ஒன்றாக நாடும்
பற்றோடு பிணைந்து
பலதும் செய்திடுமே

இரக்கமும் பரிவும்
இதயத்தில் கொண்டிடும்
மறக்க முடியாத
மனநிறைவு பெற்றிடும்

நெஞ்சத்தில் தினமும்
நேசங்கள் மலரும்
வஞ்சமில்லா மனதால்
வசந்தம் கண்டிடும்

குவலயத்தின் குதூகலமே
குன்றாது செழிக்கும்
அன்பை நாடு
அகிலம் உனக்கு



**கனல் பெருங்கவி கிருஷ் அபி மன்னார்**



# நதி மீனின் வாழ்வு

பெருங்கடலில் சேரும்
நதிமீனின் வாழ்வெனக்கு!
வழிகள் அனைத்தும்
அடைக்கப்பட்டதாய்
விண்மீன்கள் இரவில்
என்னை விழுங்குவதாய்!
பாதைகள் எங்கும்
முட்கள் முளைப்பதாய்
வார்த்தைகள் எங்கும்
வலை விரிக்கப்படுவதாய்
நம்பிக்கை தொலைத்து
நீந்தும் வாழ்வெனக்கு ..
துடுப்பினை அசைக்கவும்
துள்ளிக் குதிக்கவும்
காத்திருக்கிறேன் !
ஓர் நாள்
என்முன்விரியும்
ஊழிப்
பேரலையொன்றிற்காய்..



**-வில்லரசன் -**



# துடுப்பாட்ட இரசிகனாய்

மைதானம் சூழ
வீரர்கள் பரபரப்பாய்
மைதானத்தைச்
சுற்றியும் இரசிகர்கள்
ஆவலுடன்
வெற்றி தோல்வி தாண்டி
நண்பர்களாய் நட்புடன்
உலா
மைதானம் கூட குடும்பம் போல் காட்சி
எதிரணி ஆயினும் விபத்
தென்றால் விரையும் மனம்
போட்டிக்கும் பொறாமைக்கும்
வித்தியாசம் தூரம் என
காட்டின சாட்சியங்கள்
நோய் பிணி மறந்து
கைதட்டும் பெரியவர்
மகனின் துடுப்பாட்டம்
கண்டு மகிழும் பெற்றவர்
பாடசாலைக்காய்
துள்ளிக்குதித்து உற்சாகமூட்டும் ஆசான்கள்
கச்சான் பைகளுடன்
விற்றிடத்துடிக்கும் மூதாட்டி
புள்ளிகள் கேட்க ஆவலாய்
ஒலிபெருக்கியின் பக்கம் சாயும் காதுகள்
றண்கள் குவிய காதைப்
பிளக்கும் மேளச்சத்தம்
என ஒவ்வொன்றும்
அன்றைய பொழுதினை
ஆரவாரப்படுத்தியே நிற்க
வெற்றி தோல்வி இன்றிச்
சமநிலையில்
ஆட்டம் முடிவடைய
இரு அணியும் இன்பமாய்
வெற்றியைச் சுவைக்க
சடுதியாய் வீட்ட போவம்
என்ற குரல் என்னை
எனக்கு ஞாபகப்படுத்தியது.



**(குகதா)**
**டக்ஸனா கிருஷ்ணானந்தன்**

# தேர்தலும் தீபநாளும்



ஆடை எடுக்க அங்கே இங்கே
அலைந்து தேடித் தேர்வோம்-நாட்டில்
ஆளைத் தேர்வு செய்யும் போதோ
அவச ரத்தில் வீழ்வோம்-திருநாள்
வாடை வந்தால் போர்வை தேடும்
வழக்கம் கொண்ட நம்மோர் - தேர்தல்
வாசம் வந்தால் ஆய்வு செய்து
வாங்க மறுப்ப தேனோ ?

வரிசை பிடிக்கும் தீப மெல்லாம்
வாழ்வின் வளத்தைக் காட்டும் - தேர்தல்
வாக்கா ளர்கள் வரிசை யாவும்
வாழ்வில் திருப்ப முட்டும்-இன்பப்
பரிசை வாரி வழங்கும் திருநாள்
பாடல் மயக்கும் நம்மை - தேர்தல்
பார்வை யாவும் வெற்றி யானால்
பயங்கள் தெளியும் உண்மை !



**பாவலர் கோவதன் பட்டர்வொர்த்**






# வாசகர் கணைகள்

**கடந்தவார 27.10.2022 தமிழருவி பத்திரிகை பற்றிய வாசகர் கருத்துக்கள்**



ஒரு பத்திரிகையின் சிறப்பு என்னவென்றால் அது வாசகர்களை கவரும் வண்ணம் பல புதுமைகளை கொண்டிருப்பதுதான். தமிழருவியில் அத்தகைய சிறப்பு உள்ளது. இந்த வாரம் தமிழருவியில் தீபாவளி பற்றி உலகெங்கும் ஒளியேற்றும் தீபத் திருநாள் என்ற கட்டுரையில் அறிந்து கொள்ள முடிந்தது. அடுத்த வார இதழை மிகவும் ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

**பி. அக்சயா, மட்டக்களப்பு**



தமிழருவி வார இதழ் மிகவும் பயனுள்ளதாகவும் பல அறிவியல் விடயங்களை அள்ளித்தருவதாகவும் சிறுவர்களின் ஆற்றல்களை மேலும் ஊக்குவிப்பதாகவும் இலங்கையில் மட்டுமன்றி உலக விடயங்களையும் மக்கள் இலகுவாக இவ் இதழ் மூலம் அறிந்து கொள்ள கூடியதாகவும் உள்ளது.

**ச. ஆர்த்தி, மட்டக்களப்பு**

தமிழருவியின் வாசகியாய் இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழருவியின் ஒவ்வொரு பகுதியும் எனக்கு மிகவும் பிடித்துள்ளது. சமூகத்திற்குப் பயனுள்ள பல செய்திகளையும் தகவல்களையும் தமிழருவி கொண்டுள்ளது. தமிழருவி பத்திரிகை மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.

**கீ.ஹர்ஸ்மிகா, மட்டக்களப்பு.**




தமிழருவி பத்திரிகை வாசகர்களிற்கு சிறந்த பல படைப்புகளை அள்ளித்தருவதாக அமைந்துள்ளது. அதிலும் குறிப்பாக எம் இளைய சமுதாயத்தினரின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதில் தமிழருவி சிறந்த பணியினை ஆற்றுகிறது.

**சி. சிவா, ஹட்டன்**



வாரந்தோறும் வெளியாகும் பல பத்திரிகைகளிடையே என்னைக் கவர்ந்த ஒரு இதழாகவே தமிழருவி உள்ளது. வாரந்தோறும் வெளியாகும் பல செய்திகளின் தொகுப்புகள், சிறந்த கட்டுரைகள், நகைச்சுவை, சிறுவர்களிற்கான களம், சமையல் குறிப்புகள் என பல விடயங்களை தாங்கி வெளிவருவது பாராட்டுக்குரியது. வாழ்த்துக்கள்.

**சி. மலர், ஹட்டன்**




# அன்புள்ள நாற்றுகளுக்கு...

**மாதத்தின் இறுதி வாரத்தில் இடம்பெறும் நாற்றுக்களின் விவேகத்தை அளவிடும் போட்டியில் நீங்களும் கலந்து கொண்டு நீங்களும் வெற்றியாளராக வேண்டுமாயின்:-**

- **வாரந்தோறும் 'தேடல் பசிக்கு விருந்து' எனும் பகுதியை அவதானமாக வாசியுங்கள்.**
- **ஒவ்வொரு வாரமும் தவறாது நாற்றுக்களுக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்பிவையுங்கள்.**

**ஒவ்வொரு மாதத்தின் இறுதி வாரத்திலும் 'தேடல் பசிக்கு விருந்து' எனும் பகுதியில் கேட்கப்படும் வினாக்களுக்கு சரியான பதிலை அனுப்பி வெற்றியாளராகி, தமிழருவியினால் வழங்கப்படும் அன்புப்பரிசை பெற்றுக்கொள்ளுங்கள்.**

**குறிப்பு:-** வாரந்தோறும் திறமைகளை வெளிப்படுத்த ஆக்கங்கள் அனுப்பும் சிறுவர்கள் மாத்திரமே போட்டியில் இணைத்துக்கொள்ளப்படுவர். உங்கள் ஆக்கங்கள் வந்துசேரும் இறுதிநாள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையாகும்.

**அனுப்பவேண்டிய மின்னஞ்சல்- aruvitamil812@gmail.com**
**வாட்சப் இலக்கம்- 0094 768320733**

ஆராய்ச்சி மணி
மக்கள் குறைகேள் மாடம்



இரத்தினபுரி மாநகரப் பகுதியில் அடிக்கடி ஏற்படும் வெள்ள அனர்த்தம்

# கண்ணீரில் வாழும் தண்ணீர் தேசமொன்று

## சட்டவிரோதமான கட்டிடங்களை அகற்ற மறுக்கும் இரத்தினபுரி மாநகர சபை

**தனது** மூத்த மகள் பரூஸாவின் திருமணத்திற்கு ஆயத்தமாகும் நோக்குடன் வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கடன் 10 லட்சம் ரூபாவை பயன்படுத்தி கொள்வனவு செய்திருந்த அறைத் தளபாடங்கள் அனைத்தும் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் முற்றாக அழிந்து போயின.இதன் தாக்கத்தை இன்றும் நாம் உணர்கிறோம் என தனக்கு ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புப் பற்றி இரத்தினபுரி பள்ளி வீதியைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியை ஆமினா பேகம் தெரிவிக்கிறார்.

இரத்தினபுரி மற்றும் களுத்தறை மாவட்டங்களை ஊடறுத்துச் செல்லும் களுகங்கையை மையப்படுத்தி உருவாகும் வெள்ளம் இரத்தினபுரி நகரை மாத்திரமின்றி பல தாழ்நிலப் பகுதிககளையும் தாக்கி வருடாவாருடம் ஆயிரக்கணக்கான மக்களை பாதிப்படையச் செய்கிது.

ஒவ்வொரு வருடமும் மே ஜூன் காலப் பகுதியில் ஏற்படும் இவ்வெள்ளம் கடந்த 1980 களின் பின்னர் ஏற்படுத்தி வரும் பாதிப்புக்களும் அனர்த்தங்களும் நகரில் வாழும் 5200 இற்கும் மேற்பட்ட மக்களின் கண்ணீரை இன்னும் நிறுத்த மறுக்கிறது.



இரத்தினபுரி மாநகர சபை உறுப்பினர் எம்.ஷியாம்



சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இப்லார் எம்.யஹ்யா



முன்னாள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன



இரத்தினபுரி சமூக செயற்பாட்டாளர் ஹஸித இந்திக வீரவர்தன




இரத்தினபுரி வெள்ள அனர்த்தங்களை தெளிவுபடுத்தும் காலநிலை தரவுகள்.

ஆசிரியை ஆமினா மாத்திரமின்றி இரத்தினபுரி பள்ளி வீதி,ஆற்றங்கரை வீதி,போதி ராஜா வீதி உட்பட ஜோதி மாவத்தை ஆகிய பகுதிகளில் வசிக்கும் பலரது வாழ்கையிலும் இரத்தினபுரி வெள்ளம் உருவாக்கி வரும் சோகக் கதைகளின் வரலாறுகளை இன்னும் இம் மக்களின் கண்கள் கதைக்கின்றன.

### வெள்ள அனர்த்தம்

உயர்தரம் விஞ்ஞானப் பிரிவில் கல்வியைத் தொடரும் படுகெதரயைச் சேர்ந்த ஸைனப் நவாஸிடம் உங்கள் வீட்டுக்கு ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் பற்றி ஞாபகமிருக்கிறதா? எனக் கேட்டபோது அவர் தந்த பதில்கள் பிரச்சினையின் ஆழத்தை மேலும் சுட்டிக்காட்டுகிறது.

அன்றைய தினத்தை நினைக்கும் போது எனக்கு மரணப் பயம் வருகிறது.திடீரென எங்கள் வீட்டுக்குள் நுழைந்த வெள்ளம் எங்கள் உயிர்களை மட்டுமே மீதமாக தந்தது.அந்த இழப்புக்களை இன்னும் எம்பெற்றோர்களால் சரிப்படுத்த முடியவில்லை.பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் கூட மனித நேயத்துடன் செயற்படத் தவறினர்.தமது இனத்தவர்களை மாத்திரமே படகில் ஏற்றிச் சென்றனர்.எட்டு மணித்தியாலங்களுக்கும் மேலாக வீட்டின் கூரையின் மேலிருந்துதான் எமது உயிரை நாம் பாதுகாத்துக் கொண்டோம் என பலத்த கண்ணீருடன் கதையைத் தொடர்ந்தார் அவர்.

ஆசிரியை ஆமினா பேகம் மேலும்



எம்.எல்.எஸ்.முஹம்மத்

தொடர்கையில் 1980 களுக்கு முன்னர் இரத்தினபுரிக்கு வெள்ளம் ஏற்படுவது மிக அரிது. ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. கடந்த 10 வருடங்களில் மாத்திரம் 15இற்கும் மேற்பட்ட வெள்ள அனர்த்தங்கள் ஏற்பட்டு விட்டன.

மழை பெய்யும் போதெல்லாம் வெள்ளத்தை எதிர்பார்க்க வேண்டியுள்ளோம்,அன்று 10இற்கும் குறைவான வீடுகளைக் கொண்டிருந்த எமது வீதியில் இன்று நூற்றுக்கணக்கான பெரிய கட்டிடங்கள் உருவாகிவிட்டன.அன்று ஆற்றில் இயல்பாக ஓடிய நீர் இன்று அதற்கு பயணிக்க இடமின்றி எமது வீதிகளையும் வீடுகளையும் நிரப்பி வருகிறது.

மிகுதி 28 ஆம் பக்கத்தில்...



# கண்ணீரில் வாழும் தண்ணீர் தேசமொன்று

ஆற்றங்கரைகளை மறித்துகட்டப்படும் கட்டிடங்கள் நிறுத்தப்பட்டிருந்தால் ஓரளவாவது பாதிப்புக்கள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் என அவர் தெரிவிக்கிறார்.

## அரச அறிக்கைகள்

இரத்தினபுரி மாநகர சபையின் நில ஒதுக்கீடுகள் தொடர்பான அறிக்கைக்கிணங்க இரத்தினபுரி களுகங்கையின் இரு பகுதிகளிலும்



தலா மீட்டர் [66அடிகள்] என்ற அடிப்படையில் ஒதுக்கப்பட்ட நிலப் பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.அத்துடன் மேற்படி நிலப் பகுதியில் கட்டிடங்களை நிர்மாணிக்க முயற்சிப்பது தண்டனைக்குரிய குற்றமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இரத்தினபுரி மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் அறிக்கைகளின் இரத்தினபுரி களுகங்கையை மையப்படுத்தி உருவாகும் வெள்ளப் பாதிப்பினால் ஒவ்வொரு முறையும் பல மனித உயிர்கள் இழக்கப்படுகின்றன.பலர் காயமடைகின்றனர்.ஆயிரக்கணக்கானவர்கள் இடம் பெயர்கின்றனர். நூற்றுக்கும் அதிகமான வீடுகளும் பெறுமதியான பல சொத்துக்களும் இழக்கப்படுகின்றன.அரசும் அனர்த்தத்தில் பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்கென பல மில்லியன் கணக்கான பணமும் செலவிடப்படுகிறது என அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அத்துடன் அனர்த்தத்தால் பாதிக்கப்படும் ஆயிரக்கணக்கான குடும்பங்களை தங்கவைப்பதற்கென அரசு முக்கிய மத வழிபாட்டுத் தளங்கள் உட்பட 10 இற்கும் மேற்பட்ட அனர்த்த பாதுகாப்பு முகாம்களை இரத்தினபுரி மாவட்டத்தில் அமைத்து வருகிறது எனவும் இரத்தினபுரி அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இரத்தினபுரி மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் மஞ்சுள கருத்து தெரிவிக்கையில்

இலங்கையில் இயற்கை அனர்த்தங்கள் மிக நிறைந்த ஆபத்துமிக்க மாவட்டங்களுள் ஒன்றாக இரத்தினபுரி மாவட்டம் மாறியிருக்கிறது. மண்சரிவு மாத்திரமின்றி வெள்ள அனர்தத்திற்கும் மக்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளே மிகப் பிரதான காரணமாகும்.ஆற்றங்கரைவரை கட்டிடங்கள் நீட்டப்பட்டு கட்டப்படுவது தவிர்க்கப்படுமானால் இரத்தினபுரி நகரில் ஏற்படும் வெள்ள அனர்த்தத்தை 50 சதவீதத்தால் குறைக்க முடியும் என அவர் தெரிவிக்கிறார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு வெள்ள அனர்தத்தைத் தொடர்ந்து இரத்தினபுரி நகர் ஊடாகச் செல்லும் களுகங்கையின் ஆற்றங்கரை ஓரங்களில் கட்டப்பட்டிருக்கும் அனைத்து சட்டவிரோதமான கட்டிடங்களும் அகற்படுமென களுத்தறை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்திருந்தது.

இரத்தினபுரி நகரில் ஏற்படும் வெள்ளத்தை கட்டுப்படுத்தும் நோக்குடன் களுகங்கை ஆற்றங்கரை வீதியில் வாழும் குடும்பங்களுக்கு மாற்று இடமொன்றில் அடுக்குமாடி வீட்டுத் திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்தி குழு 2017 இல் தீர்மானம் மேற்கொண்டதாக இரத்திபுரி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் மஞ்சுள மேலும் தெரிவிக்கிறார்.

இலங்கையில் தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டுவரும் தேர்தல் நடைமுறைகளைத் தொடர்ந்து பொது நிர்வாகத் துறையில் இடம்பெற்று வரும் அரசியல் தலையீடுகளுக்கு உள்ளூராட்ச்சி மன்றங்கள் விதிவிலக்காணவைகள் அல்ல.கிராமிய அரசியல் தலைவர்கள் தமது செல்வாக்குகளை


வெள்ளப் பாதிப்புக்களை எதிர்நோக்கி வரும் இரத்தினபுரி மக்கள்

பயன்படுத்தி சட்டாரீதியற்ற நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் பிரதான ஸ்தாபனமாக உள்ளூராட்சி மன்றமும் அதன் நிர்வாக செயற்பாடுகளும் மாற்றம் பெற்றுள்ளன.

## தொடரும் அரசியல் தலையீடுகள்

இரத்தினபுரி களுகங்கை ஆற்றங்கரையை அண்மித்த இடங்களில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டிடங்களால் இரத்தினபுரி நகர் பகுதியில் ஏற்படும் வெள்ளப் பாதிப்புக்களை கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது என்ற விடயம் இரத்தினபுரி மாநகர சபைக்கு தெரிந்துள்ள போதிலும் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு வழங்கப்படும் அனுமதியில் பாரிய சந்தேகம் உள்ளதாக சபரகமுவ மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இப்ளார் எம் யஹ்யா தெரிவிக்கிறார்.

கடந்த 5வருடங்களில் மாத்திரம் 50 சதவீதத்திற்கும் அதிகமான புதிய கட்டிடங்கள் இரத்தினபுரி நகர் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக இரத்தினபுரி சமூக செயற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக களுகங்கை ஆற்றங்கரையை அண்மித்த ஒதுக்கப்பட்ட நிலங்களில் கட்டப்பட்டுவரும் இச்சட்டவிரோத நடவடிக்கைகளின் பின்னணியில் முக்கிய அரசியல் பிரமுகர்களின் ஒத்துழைப்பும் காணப்படுவதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரத்ன மின் வலு அமைச்சராக செயற்பட்ட காலத்தில் கொண்டுவரப்பட்ட தேசிய மின்சார திட்டங்களின் கீழ் இரத்திபுரி களுகங்கை ஆற்றங்கரையை அண்மித்து கட்டப்பட்ட பல கட்டிடங்களுக்கு மின்சார இணைப்புக்கள் கிடைக்கப் பெற்றதாக இரத்தினபுரி முஸ்லிம் விவாகப் பதிவாளர் அல்ஹாஜ்.எம்.பாரூக் தெரிவிக்கிறார்.

நீர் மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக இருப்பதால் புதிதாக நிர்மாணிக்கப்படும் அனைத்து கட்டிடங்களுக்கும் தற்காலிக நீர் வழங்கள் இணைப்புக்கள் வழங்கப்படுகின்றன.நீரைப் பெறுவதற்கு காணி தொடர்பான உறுதிகள் அவசியமில்லை என இரத்தினபுரி நீர் வழங்கல் அதிகார சபையின் உதவிப் பொறியியலாளர் எம்.இம்திஹான் தெரிவிக்கிறார்.

இரத்தினபுரி களுகங்கை ஆற்றங்கரையில் அமைக்கப்பட்டிருக்கும் கட்டங்கள் தொடர்பில் இரத்தினபுரி மாநகர சபையின் உறுப்பினர் மொஹமட் ஷியாமிடம் கேட்ட போது அவர் இவ்வாறு பதிலளித்தார்.

மேற்படி கட்டிடங்களுக்கு மின்சாரம் நீர் இணைப்புக்கள் கிடைக்கப்பெற்றுள்ளதால் மாநகர சபையிடமிருந்து வரிப்பண இலக்கங்களையும் பெற்றுக் கொள்கின்றனர்.தனியார் கட்டிடங்கள் மாத்திரமின்றி அரச பாடசாலைகளின் கட்டிடங்களும் களுகங்கையின் ஆற்றங்கரையை விட்டுவைக்கவில்லை.நாட்டின் பொதுச் சட்டத்தை பேணி அரசியல் தலைவர்களும் செயற்பட்டிருந்தால் இரத்தினபுரி வெள்ளம் ஒரு தொடர் கதையாக மாறியிருக்காது என அவர் தெரிவிக்கிறார்.

## தீர்வு ஆலோசனைகள்


ஆற்றங்கரையை அண்மித்து நிர்மாணிக்கப்படும் கட்டங்களை அகற்றுவது மாத்திரம் வெள்ள அனர்தத்தை கட்டுப்படுத்த தீர்வாக அமையுமா? என சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான சமூக ஆய்வாளர் ஹஸித இந்திக வீரவர்தனவிடம் நாம் வினவினோம்.இது தொடர்பில் அவர் பதில் அளிக்கையில்

இலங்கையில் மாத்திரமின்றி உலகின் பல நாடுகளில் வெள்ள அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. அந்நாடுகளில் ஆற்றங்கரைகளை அண்மித்து வாழும் மக்கள் அக்கிருந்து அகற்றப்படுவதில்லை.மாறாக விஞ்ஞான தொழில்நுட்ப அறிவியல் நுணுக்கங்களை பயன்படுத்தி பொருத்தமான முறையில் அங்கு கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.இரத்தினபுரி நகரை நோக்கி மக்கள் வருவதை பிழையென கூற முடியாது.இந்த விடயத்தில் மாற்றுத் திட்டங்கள் பற்றி சிந்திக்கப்பட வேண்டும் என அவர் தெரிவிக்கிறார்.

இரத்தினபுரி வெள்ளத்தை கட்டுப்படுத்துவது தொடர்பில் நாம் பல திட்டங்களை முன்வைத்தோம்.குறிப்பாக களுகங்கை அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வருமாறு இங்குள்ள அனைத்து தரப்பினரையும் நாம் வேண்டினோம்.குறிப்பிட்ட சில அரசியல் பிரமுகர்களின் சொந்த நலன்களை முன்னிட்டு அம்முயற்சி இடை நடுவில் நின்று விட்டது என இரத்தினபுரி வெள்ளம் தொடர்வதற்கான காரணத்தை இரத்தினபுரி சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பிற்கான மத்திய நிலைய பணிப்பாளர் ஷமிந்த பியசேகர சுட்டிக் காட்டுகிறார்.

இரத்தினபுரி களுகங்கை திட்டம் விரைவில் அமுலாக்கப்படுமா என இரத்தினபுரி மாவட்ட சர்வமதக் குழுவின் தலைவர் குணவங்ச தேரரிடம் கேட்ட போது அவர்

அரசியல் தலைவர்கள் உட்பட இரத்தினபுரி மாவட்ட அரசியல் தலைவர் அனைவரும் இதனை ஒரு மக்கள் பிரச்சினையாக நோக்க முன்வர வேண்டும்.தேவையான சட்ட திருத்தங்களை கொண்டு வந்து எமது ஆற்றங்கரைகளை பாதுகாக்க வேண்டும்.சட்டவிரோதமான கட்டிடங்கள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும்.அரசியல் தலையீடுகள் இன்றி இவ்விடயம் முன்னெடுக்கப்படுவதற்கு அரச பணியார்களுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.எமது மதத் தலைவர்கள் உட்பட அனைவரின் ஆலோசனைகளுடன் களுகங்கை திட்டத்தை மீளக் கொண்டு வர வேண்டும் என அவர் தெரிவிக்கிறார்.



9.2. ගංගා සහ ඇළ මාර්ග සඳහා රක්ෂිත

එක් එක් ගඟට මෙන්ම ඇළ මාර්ගයන්ට අදාළ වන්නා වූ ගඟ / ඇළ මාර්ග රක්ෂිතය අදාළ ගඟේ / ඇළ මාර්ගයේ ඉවුරේ සිට නිර්ණය වේ. නගරය තුළ පවතින්නා වූ ගංගා සහ ඇළ මාර්ග රක්ෂිතයන් පහත සඳහන් වගුවේ විස්තර කර ඇත.


| ගඟා / ඇළ මාර්ගයේ නම | රක්ෂිතය (ඉවුරේ සිට) | |
|---|---|---|
| | මීටර් | අඩි |
| කළු ගඟ | 20 | 66 |
| වේ ගඟ | 20 | 66 |
| කටුගස් ඇළ | 4.5 | 15 |
| හීන් ඇළ | 4.5 | 15 |
| දොඩමන්ගහ ඇළ | 4.5 | 15 |
| නම් නොකළ වෙනත් ඇළ මාර්ග | 3 | 10 |

ඉහත වගුවේ සඳහන් වන රක්ෂිත සීමාවන් තුළ කිසිදු ගොඩනැගිලි ඉදිකිරීමකට අවසර ලබා නොදෙන අතර පොදු විනෝදාස්වාද කටයුතු උදෙසා සිදුකරනු ලබන ව්‍යාපෘති සඳහා පමණක් කොන්දේසි වලට යටත්ව අධිකාරිය විසින් අවසර දෙනු ලැබේ. (තොටුපොල සංවර්ධන ව්‍යාපෘති, රේඛීය උද්‍යාන ව්‍යාපෘති, ඇවිදින මංතීරු ආදී කටයුතු) කෙසේ නමුත්, මෙම රක්ෂිත සීමාවන් තුළ සිදුකරනු ලබන සියළුම සංවර්ධන කටයුතු සඳහා අනුමැතිය ලබා ගැනීමට ඉදිරිපත් කරන අයදුම් පත් රත්නපුර මහ නගර සභාවට ඉදිරිපත් කිරීමට ප්‍රථම ඒ සඳහා නාගරික සංවර්ධන අධිකාරියේ මූලික සැලසුම් අනුමැතිය ලබා ගැනීම අනිවාර්යය වේ.

களுகங்கை ஆற்றங்கரை ஒதுக்கப்பட்ட இடம் தொடர்பான இரத்தினபுரி மாநகர சபையின் அறிவிப்பு

# காதல் வந்தால் சொல்லியனுப்பு

## முறையான அழைப்பு விடுக்காததால் இந்தியா செல்ல முடியாமல் தவிக்கும் ரணில்



புதிய அரச தலைவராக பதவியேற்ற நாளில் இருந்து இந்தியா செல்ல ரணில் விக்கிரமசிங்க விரும்பிய போதும் அந்த நாட்டு அரச தரப்பு முறையான அழைப்பினை விடுக்கவில்லை என்று சிங்கள வார ஏடொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக இன்று ஞாயிற்றுக்கிழமை வெளியான அந்த வார ஏட்டின் பத்தியின் 'அரசியல் இரகசியங்கள்' பகுதியில் தெரிவிக்கப்பட்டவற்றின் முக்கிய பகுதிகள்:

அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவான நாளில் இருந்து இந்தியாவிடம் இருந்து முறையான அழைப்பு விடுக்கப்படாததால், அரசாங்கத்துக்கும் இந்தியாவுக்கும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகின்றது. புதிய அரச தலைவராக பதவியேற்பவர் முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்கு செல்வது வழக்கம்.

ஏனென்றால், இந்தியா பிராந்தியத்தின் முக்கிய அண்டை நாடாகவும் அதன் மேலாதிக்க சக்தியாகவும் உள்ளது. இதனையடுத்து, சிறிலங்கா அரசாங்கம் கேட்டவுடன் புதிய அரச தலைவருக்கு இந்திய அரசு நேரம் ஒதுக்குவது வழக்கம்.

இதன் விளைவாக, புதிய அரச தலைவராக ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவு செய்யப்பட்டதையடுத்து, சந்திப்பு ஒன்றுக்கு இந்தியாவிடம் அரசாங்கம் அவகாசம் கோரியது. ஆனால், இந்தியா மௌனக் கொள்கையைக் கடைப்பிடித்தது. ஏன் என்று சரியாகச் சொல்ல முடியாது. ஆனால், அரசாங்கம் தொடர்ந்து கோரிக்கை விடுத்த போதிலும், இந்தியா சாதகமான பதிலை வழங்காதது ஒரு தனித்துவமான நிகழ்வு.

இருப்பினும், நரேந்திர மோடி அரசு திருப்திகரமான பதில் அளிக்காததால், சமீபத்தில் ஒரு குறிப்பிட்ட நபர் இந்த நடவடிக்கையில் தலையிட்டார். அவர் வேறு யாரும் அல்ல. இந்தியாவில் உள்ள சிறிலங்காவின் தூதுவர் மிலிந்த மொறகொட. இதற்கு முக்கிய காரணம், மிலிந்த தனது வேலையைத் தவிர, இந்திய அரசாங்கத்தின் பலமானவர்களுடன் இறுக்கமான உறவுகளைக் கொண்டிருப்பதுதான். இதன் விளைவாக, மிலிந்த தனது சொந்த தொடர்புகளைப் பயன்படுத்தி கடந்த வாரம் இந்த நடவடிக்கையில் இறங்கினார். எதிர்காலத்தில், அதன் வெற்றி தோல்வியை நாம் பார்க்கலாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





## காற்று வாக்கில் காதில் விழுந்தது...

மாற்றுமொழி பேசும் ஊடகத்துறை என்னசொல்கிறது?

## அணைக்கின்ற கை அடிக்காது!

### 22 ஐ நிறைவேற்ற முன்னர் கோட்டா, பஸில் ஆகியோருடன் கலந்துரையாடிய ரணில்

நாடாளுமன்றத்தில் 22 ஆவது அரசமைப்பு திருத்தத்தினை நிறைவேற்றுவதற்கு ஆதரவு தேடி முன்னாள் அரச தலைவர்களான மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சரான பசில் ராஜபக்ஷ ஆகியோருடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடியுள்ளார்.

இத்தகவலை சிங்கள வார ஏடொன்று தனது அரசியல் பத்தியில் தெரிவித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்திக்க கடந்த ஞாயிற்றுக்கிழமை அவரது அதிகாரபூர்வ இல்லத்திற்குச் சென்றிருந்தார். 22 ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவைப் பெறுவதற்கு கோட்டாபய ராஜபக்ஷவின் தலையீட்டைப் பெறுவதே இந்தப் பயணத்தின் நோக்கமாகும்.

எவ்வாறாயினும், இந்த கலந்துரையாடல் 22 ஆவது திருத்தம் தொடர்பான பேச்சுடன் மட்டுப்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்டுகின்றது. அரசாங்கத்தின் எதிர்கால முடிவுகள் மற்றும் திட்டங்கள் குறித்து இருவரும் நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளனர்.

குறிப்பாக பாதுகாப்புத் தலைவர்களின் ஓய்வு மற்றும் புதிய நியமனங்கள் குறித்து முன்னாள் கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியதாக வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இதேவேளை, மற்றுமொரு அதிகாரபூர்வமற்ற செய்தியின்படி, அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் இலங்கை பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



அரசாங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இங்கும் திருத்தச் செயற்பாடுகள் தொடர்பிலும் சற்று கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை, முக்கியமான வாரத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திக்கவும் ரணில் மறக்கவில்லை. நாடாளுமன்ற வளாகத்தில் இருவரும் சந்தித்ததாக தெரிவிக்கப்படுகின்றது. வாரத்தில் பல சந்தர்ப்பங்களில் பல்வேறு கலந்துரையாடல்களில் ஒருவரையொருவர் சந்தித்த இருவரும், இந்த வாரத்தின் முக்கிய அரசியல் முடிவு குறித்து விவாதித்ததாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் தொடக்கம் அரசாங்கத்தின் 22 ஆவது அரசமைப்புத் திருத்தத்திற்கு பொதுஜன பெரமுனவின் ஆதரவைப் பெறுவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான நம்பிக்கையாக இருந்தது. அதன்படி கடந்த வாரத்தில் இரண்டு தடவைகள் பொதுஜன பெரமுன நாடாளுமன்றக் குழுவுடன் அரச தலைவர் கலந்துரையாடினார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புள்ளிமானிடம் சிக்கியது புலனாய்வுத்துறை!

## புலனாய்வுத்துறையினர் கூட பிரியாமாலியிடம் தப்பவில்லை

### சிங்கள வார ஏடு பரபரப்பு தகவல்



இலங்கையில் அண்மையில் பலரை பண மோசடி செய்து ஏமாற்றிய திலினி பிரியாமாலியின் செல்லிடப்பேசியில் புலனாய்வுத்துறையினர் உல்லாசமாக இருந்த காணொலி மற்றும் ஒளிப்படங்கள் சிக்கியுள்ளதாக சிங்கள வார ஏடு ஒன்று பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த வார ஏட்டின் கிசுகிசு பகுதியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஏராளமான பணத்தை ஏமாற்றிய பெண்ணிடம் இருந்து கிடைத்த சில வீடியோக்கள் மற்றும் ஒளிப்படங்களில் நாட்டில் உள்ள புலனாய்வுத்துறையைச் சேர்ந்தோர் கூட சிக்கியுள்ளனர். ஒரு குறிப்பிட்ட காவல்துறை அதிகாரியுடன் பல ஹோட்டல்களில் இருந்து எடுக்கப்பட்ட சில உல்லாச காணொலிகள் மற்றும் ஒளிப்படங்கள் அந்த பெண்ணின் தொலைபேசியில் காணப்பட்டன.

இவற்றை பார்வையிட்ட அதிகாரிகள் பெரிய இடங்களுக்கு அனுப்பி என்ன செய்வது என்று கேட்டுள்ளனர். அதற்கு இதுவரை எந்தப் பதிலும் வழங்கப்படவில்லை. அதனால் அது அப்படியே கிடப்பில் உள்ளது. அவர்களில் ஒருவர் விரைவில் இரகசிய காவல்துறையில் முறையிடவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மற்றவர் தப்பி ஓடவுள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சிரிக்க... சிந்திக்க...

## கடந்து போக....

